# அனைத்துலக சைவ மாநாடு

## இலண்டன்

## நான்காவது ஆண்டு மலர்



# The Fourth International Saiva Conference - London

## 18 - 19 August 2001

The Federation of Saiva(Hindu) Temples - U.K.

250.98
நான்கா
SLPR

மங்கையர்க்கொரு மாளிகை

# தங்க மாளிகை



பட்டுவண்ணச் சேலைகளின் சாம்ராஜ்யம்

# அமாலியா சில்க்ஸ்

**276 Lewisham High Street**
**London SE13 6JZ**
**Tel: 020 8690 3686 Fax: 020 8690 4157**
செவ்வாய், ஞாயிறு காலை 10.30 - மாலை 6.30 திறந்திருக்கும்

# நான்காவது சைவ மாநாடு

பிரித்தானிய சைவத்திருக்கோவில் ஒன்றியம்

FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES, U.K.

01 .03 .98

# THE FOURTH SAIVA CONFERENCE

Saturday 18th August 2001
9.30 a.m. - 8.00 p.m.

Sri Ganapathy Temple
123-133 Effra Road
Wimbledon
London SW19 8PU

Sunday 19th August 2001
9.30 a.m. - 8.00 p.m.

Shri Kanaga Thurrkai
Amman Temple
5 Chapel Road
London W13 9AE

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம்
**THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES, U.K.**
for Correspondence Sri Kanaga Thurkkai Amman Temple
*5, Chapel Road, West Ealing, London W13 9AE* Tel : 020- 8810 0835

**Chairman**
*Mr.S. Karunalingham*
*Tel : 020- 8429 4528*

**Secretary**
*Mr.V. Kanesamoorthy*
*Tel : 020- 8244 6559*

**Treasurer**
*Mr.R.Kunasingam*
*Tel : 020- 8393 8147*

**ViceChairman**
*Dr. S. Navaratnam*

**Assistant Secretary**
*Mr.K. Ranganathan*

**Assistant Treasurer**
*Dr. S. Maheswaran*

**Affiliated Temples**

**Shree Ghanapathy Temple**
*125 - 133 Effra Road*
*Wimbledon*
*London SW19 8PU*
*Tel : 020- 85424141*

**Sri Kanaga Thurkkai Amman Temple**
*5, Chaple Road*
*West Ealing*
*London W13 9AE*
*Tel : 020- 8810 0835*

**Highgate Murugan Temple**
*200A, Archway Road*
*Highgate Hill*
*London N6 5BA*
*Tel : 020- 8348 9835*

**Sri Rajarajeswary Amman Temple**
*Dell Lane*
*Stoneleigh*
*Surrey KT17 2NE*
*Tel : 020- 8393 8147*

**London Sivan Kovil**
*4a, Clarendon Rise*
*Lewisham*
*London SE13 5ES*
*Tel : 020- 8318 9844*

# தலைவரின் செய்தி



பிரித்தானியச் சைவத் திருக்கோவில்களின் ஒன்றியத்தின் நான்காவது மகாநாட்டினை இவ்வருடத் தலைவர் என்ற முறையில் முன்நின்று வழிநடத்தும் தெய்வப்பணி திருவருளால் கைகூடியமையை இட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பிரித்தானியாவில் உள்ள ஐந்து ஆலயங்கள் இதுவரை இந்த ஒன்றியத்தில் இணைந்து மக்கள் பணியே மகேசன் பணி என்பதற்கமைய சேவை செய்து வருவது காலத்தோடு ஒட்டிய மிகச் சிறந்த திருத்தொண்டு ஆகும்.

புலம்பெயர்ந்த நாடுகளின் தேசிய சமூக, கலாச்சார மதச் சூழ்நிலைகளில், சைவத்தையும், தமிழையும் எமது உன்னத கலாச்சார மரபுகளையும் பேணிப்பாதுகாக்கவும்; புலம் பெயர்ந்த தலைமுறையையும் அதற்கு அடுத்த தலைமுறையையும் ஆற்று வெள்ளத்தோடு கலந்த கிணற்று நீர் போல ஆகிவிடாமல் அணை கட்டித் தடுக்கவும், இந் நாட்டுச் சைவ ஆலயங்கள் ஆற்றக்கூடிய பங்களிப்பு, மிகமிகப் பெரியது ஆகும்.

இதை மனதில் கொண்டு இந்நாட்டில் இயங்கும் அனைத்துச் சைவ ஆலயங்களும் இத் தூய திருத்தொண்டிற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள ஒன்றியத்தில் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

வருடப்பிறப்புப் போன்ற சைவ விசேட தினங்களில் பஞ்சாங்கங்களில் ஏற்பட்டு வரும் முரண்பாடுகள் எம்மிடையே, குறிப்பாக இளம் சந்ததியினரிடம் சைவத்தைக் தெளிந்த மனதுடனும் நம்பிக்கையோடும் அணுகமுடியாத ஒரு குழப்பச் சூழ்நிலையை உருவாக்கி வருவதை எவரும் மறுக்க முடியாது. இந்நாட்டிலுள்ள சகல சைவ ஆலயங்களும் ஒன்றியத்தில் இணைவதன் மூலம் இக் குழப்பங்கள் களையப்பட்டு ஒருமைப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. வளர்ந்து வரும் மதமாற்றச் சூழ்நிலைகளை எதிர்கொள்ள இது வழிவகுக்கும்.

இந்த மகாநாட்டிலும் இளைய தலைமுறையினருக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருப்பதையும் இங்கு மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மகாநாட்டிற்கு எமது அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள சிவாச்சாரியார் களையும், பேராளர்களையும் ஏனைய அன்பர்களையும் ஒன்றியத்தின் சார்பில் வருக வருக என மனமகிழ்வுடன் வரவேற்பதுடன், மகாநாடு பயனுள்ளதாக அமைந்திட சிவப்பரம்பொருளை மனமொழி, மெய்களால் பணிகின்றேன். புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள ஆலயங்கள் சமய சிந்தனையுடன் நிற்காது சமூக சிந்தனையுடனும் செயற்பட்டால் மட்டுமே நமது இளம் சமுதாயத்தினரை ஆலயங்களில் ஆக்கபூர்வமாகவும் இறை சிந்தனையுடனும் ஈடுபடுத்தலாம் என்பது எனது அசையாத நம்பிக்கை. இதைக் கருத்தில் கொண்டு புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள ஆலயங்களின் தர்மகர்த்தாக்களும் நிர்வாகத்தினரும் செயற்பட வேண்டுமெனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்
வளர்க சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம்

***ச.கருணைலிங்கம்***
தலைவர்

# பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம்
# THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES, U.K.

for Correspondence **Sri Kanaga Thurkkai Amman Temple**

***5, Chapel Road, West Ealing, London W13 9AE*** Tel : 020- 8810 0835



**Chairman**
*Mr.S. Karunalingham*
*Tel : 020- 8429 4528*

**Secretary**
*Mr.V. Kanesamoorthy*
*Tel : 020- 8244 6559*

**Treasurer**
*Mr.R.Kunasingam*
*Tel : 020- 8393 8147*

**ViceChairman**
*Dr. S. Navaratnam*

**Assistant Secretary**
*Mr.K. Ranganathan*

**Assistant Treasurer**
*Dr. S. Maheswaran*

## Affiliated Temples

**Shree Ghanapathy Temple**
*125 - 133 Effra Road*
*Wimbledon*
*London SW19 8PU*
*Tel : 020- 85424141*


**Sri Kanaga Thurkkai Amman Temple**
*5, Chaple Road*
*West Ealing*
*London W13 9AE*
*Tel : 020- 8810 0835*

**Highgate Murugan Temple**
*200A, Archway Road*
*Highgate Hill*
*London N6 5BA*
*Tel : 020- 8348 9835*

**Sri Rajarajeswary Amman Temple**
*Dell Lane*
*Stoneleigh*
*Surrey KT17 2NE*
*Tel : 020- 8393 8147*

**London Sivan Kovil**
*4a, Clarendon Rise*
*Lewisham*
*London SE13 5ES*
*Tel : 020- 8318 9844*


# செயலாளரின் செய்தி...



"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாக
பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப் பெற்றியனாக"

விளங்குபவன் சிவபிரான், அவனது பெருமை சொல்லில் அடங்காத் திறத்தன. வாக்கும் மனமும் கடந்த சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்குவது எமது சைவசமயம். சைவசமயிகளாகிய நாம் உலகெங்கும் பரந்து வாழ்கிறோம். அப்படியான சூழ் நிலை இன்று தோன்றியுள்ளமை தவிர்க்க முடியாததொன்று. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமது சைவப் பெருமக்கள் வாழிடச் சூழ் நிலையின் தாக்கத்தால் தமது கண் போன்ற சைவத்தை மறந்து விடலாகாது என்ற ஆதாங்கத்தாலேயே பல கோயில்கள் தோன்றி வளர்ந்தன. அந்த எண்ணத்தின் அடிப்படையிலும் எதிர்கால எமது சந்ததி சைவசமய நெறி நின்று ஒழுக வேண்டும் என்ற பெருவிருப்பாலும் நான்காவது ஆண்டாகவும் இந்த சைவமகாநாடு இலண்டனில் நடைபெறுகிறது.

இவ்வாறு உயர் நோக்கில் நடைபெறும் இம் முயற்சிகளை செயற்பாடுகளை இங்கு வாழும் பெற்றோர்களும் பிள்ளைகளும் பயன்படுத்தா விடில் இவை வீண் ஆகிவிடும்.

ஒரு சமூகம் எத்தனைதான் கல்வி கேள்விகளின் உயர்ந்து விளங்கினாலும் இறை நம்பிக்கையும் வழிபாடும் இல்லையென்றால் இக்கல்வியினால் பயனில்லை.

"கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன்
நற்றாழ் தொழாரெனின்" என்ற வள்ளுவர் வாக்கும் இதனையே வலியுறுத்துகிறது.

இலண்டனில் நான்கு ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பெற்ற சைவத் திருக் கோவில்கள் ஒன்றியத்தினால் பல நன்மைகள் விளைந்தன. [illegible]தில் ஒன்றே, தொடர்ச்சியான இந்த நான்காவது சைவமகாநாடும் ஆகும். சைவத்திருக் கோவில்கள் ஒன்றியத்தில் ஆலயங்கள் ஒற்றுமைப்பட்டு நிற்பதனால் விரதங்களை, சமய விழாக்களை குறிப்பிட்ட நாட்களில் நடாத்த முடிகிறது. இதனால் எம் மக்களிடையே வேறுபாடுகள் தவிர்க்கப்படுகின்றன. இதற்காகவே இலண்டன் நேரப்படி கணிக்கப்பெற்ற திருக்கணித பஞ்சாங்க கலண்டர் மூன்று ஆண்டுகளாக பிரித்தானியா சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தினால் வெளியிடப்பெற்று வருகின்றது. மேற்படி திருக்கணித பஞ்சாங்கம் இந்திய பஞ்சாங்க சீர்திருத்த சபையினால் "நிறைவானது" என்று ஏற்று சிபார்சு செய்யப்பட்ட தொன்றாகும்.

இந்த சைவ மகாநாட்டால் விளையும் நன்மைகளில் இன்னுமொன்று மகாநாட்டில் வருகை தந்து சொற்பெருக்காற்றும் அறிஞர்கள், இலண்டனில் பல ஆலயங்களிலும் உரையாற்றுவதால் எண்ணிறந்த மக்கள் பயன்பெற்றுக் கொள்கினறனர்.

இந்த சைவ மகாநாடு தொடர்பாக தமிழ்,ஆங்கிலம் இருமொழிகளிலும் பேச்சுப் போட்டிகளும் திருமுறைப் பண்ணிசைப் போட்டிகளும் நடாத்தப்படுவதால் எதிர்கால சந்ததியாகிய இளம் பிள்ளைகள் சைவ, தமிழ் அறிவைப் பெறுகின்றனர்.

இத்தகைய நன்மை பயிக்கும் முயற்சிகளை மேற்கொள்ளாமலும் மேற்கொள்பவற்றை வெறுமனே பயனற்ற விமர்சனம் செய்பவர்களும் இடையே இருக்கத்தான் செய்கிறார்கள். இது தொடர்பாக பெற்றோர்கள் அவதானமாக இருத்தல் வேண்டும் ஏனெனில் இளம் சந்ததிடையே அவநம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை சமய நெறியினுன்றும் அப்பால் சொல்லும்படி இந்த வீண் பிரச்சாரங்களின் தவறான வழிப்படுதலைச் செய்ய வல்லன.

பிரித்தானிய திருக்கோவில்கள் ஒன்றியத்தின் இந்த சைவமகாநாடு வரப்போகும் இளஞ் சமுதாயத்தை சைவசமய நெறியில் ஒழுக ஊக்குவிப்பதோடு, சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பேறறிஞர்களின் கருத்தை எமது மக்கள் செவிமடுக்கும்படி செய்வதோடு எமது சைவ, தமிழுக்குப் பணியாற்றியவர்களைக் கௌரவிப்பதாகவும் அமைகிறது.

பிரித்தானியாவில் அமைந்திருக்கும் ஏனைய சில ஆலயங்களும் இவ் ஒன்றியத்தில் இணைந்து செயலாற்ற முன்வந்தால் இத்தகைய முயற்சிகள் இன்னும் மகிமை பெறும் என நம்புகிறேன்.

இம்மகாநாட்டின் பயன் அனைவருக்கும் கிட்டுவதாக என உலகமுழுதாழும் அம்மை அப்பரைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. வி. கணேசமூர்த்தி
செயலாளர்

தொலைபேசி: 807995
கயிலைமாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010
தமிழ்நாடு.
மின் அஞ்சல்: peruradigal@jahoo.com



Telephone: 807995
Kailai - Ma- Munivar - Vidwan
Santhalinga Ramasamy Adigal
Perurathеенam, Perur (P.O)
Coimbatore - 641010
Tamilnadu
E- Mail: peruradigal@yahoo.com

தலைவர் (President)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
திருமடம்
(Thavathiru Santhalingam Adigalar
Mutt)

உலக சைவப் பேரவை
(World Saiva Council)

தமிழக துறவியர் பேரவை
(Tamil Nadu Saints Forum)

சத்வித்யா சன்மார்க் சங்கம்
(Sathvidhya Sanmarga Sangam)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை,
அறிவியல், தமிழ்க்கல்லூரிக்கழகம்
(Thavathiru Santhalinga Adigalar Arts,
Science & Tamil College Khazhakam,

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
மேல்நிலைப்பள்ளி
(Thavathiru Santhalinga Adigalar
Higher Secondary School)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கல்விக்குழு
(Thavathiru Santhalinga Adigalar
Kalvi Kuzhu)

ஞானாம்பிகை நுழைவுரிமை பள்ளி
(Gnanambikai Matriculation School)


தவத்திரு ஆறுமுக அடிகள்
தாய்த்தமிழ்ப் பள்ளி
(Thavathiru Aarumuga Adigalar
Tamil School)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு
அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar
Memorial Trust)

உறுப்பினர் (Member)
பாரதத் துறவியர் பேரவை
(Bharat saints Forum)

தமிழ்நாடு
இந்துசமய அறநிலையத்துறை
ஆலோசனைக் குழு
(Tamil Nadu Temple Advisory
Committee)

தமிழகப் புலவர் குழு
(Thamizhaga Pulavar Kuzhu)



# வாழ்த்துப்பா

திருத்தொண்டும் சிவநெறியும் சேரன்பர் திருக்கூட்டம் தெய்வத்தன்மை
மருவுதமிழ்  மரபினர்கள் வாழ்ந்துயர்வாம் வழிபாட்டின் மகிழ்ந்து போற்றும்
பெருமைசேர் திருக்கோயில் தாம் வாழும் நாடுகளில் பேணிக் காக்கும்
திருநின்ற செம்மையுளார் பிரித்தானியத் திணை கோயில் பேறு பெற்றார்.

மனநலமும் உடல்நலமும் வாய்த் திந்த பிறப்பின் உயர் மாண்பு போற்றிச்
சினமதலாம் குற்றங்கள் தமையகற்றி ஒன்றாகச் சேர்ந்து வாழும் இனமாகப்
பத்தி நெறி இளைஞர் உளந் தனிற்பதிய இலண்டன்தன்னில் தினமும் வழி
பாடாற்றச் சிவன்கோயில் சூழ்கோயில் செய்தோர் வாழி

வரும்தங்கள் தலைமுறைகள் வளம்பெற்றுத் தமிழர்தம் மரபுகாத்து
பெருமைபெற அறநெறியும் மொழியுணர்வும் நாட்டுணர்வும் பெருகி வாழத்
திருமுறைசேர் வழிபாட்டின் சிந்தனையால் உலகனைத்தும் சேர்ந்து வாழ
ஒருமையுடன் திருக்கோயில் தனைப்பேணி ஒருகுலமாய் இணைந்து வாழி

கற்கோயில் கலைக்கோயில் பத்தியினால் உலகெங்கும் கண்ட மன்னர்
பற்பலவாம் சிவன்கோயில் விண்ணுயரும் கோபுரங்கள் பணிமேற் கொண்டார்
சொற்பாவும் திருமுறைகள் தமைப்பேணும் திருக்கூட்டத் தொடர்பு கொண்டு
நிற்பனவும் சரிப்பனவும் அவள்வடிவாய் நிலவுமெய்மை நிலையும் கண்டார்.

செம்பொருள்காண் நால்வர் முதல் அருளாளர் வாக்காகும் தெய்வப் பாடல்
தம்மையிளம் சிறுவருளம் தனிலிருத்தும் மரபுவழிப் பணியி னாலே நம் தமிழர்
பெருமைபல இனத்தவரும் ஆய்ந்தாய்ந்து நாடும் பண்பால்
இம்மைமறுமைப் பயனைவாழ்வியலில் ஏற்றமுற இணைந்து வாழி

ஒப்பம்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்

உ
சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பராமசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதின முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி: 2870


நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை.

## அருளாசிச் செய்தி

சிவனேயச் செல்வர்களே!

இலண்டனில் நடைபெறும் சைவமாநாடு சிறப்பாக நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகிறோம். மனிதன் மனித நேயத்துடன் வாழ்வதற்கு உருவாக்கப்பட்டவையே சமயங்கள். எந்த சமயத்தில் ஒருவன் பிறக்கிறானோ அச் சமய விதிக்கமைய வாழ்வதே தர்மமாகும். இதனை அடிப்படையாக கொண்டே ஆதியும் அந்தமும் இல்லா சமயமாகிய சைவசமயம் மனித வாழ்வின் நெறிமுறைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே ஆலய கிரிகைகளும் விழாக்களும் விளங்கி நிற்கின்றன. இதையே சைவசித்தாந்த நூல் மானிட நேயமும் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரனென தொழுமே என்று குரு லிங்க சங்கம வழிபாட்டையும் பசுபதி வழிபாட்டையும் எடுத்து இயம்புகின்றது. விஞ்ஞான உலகில் வாழ மனிதனுக்கு அன்றே மெஞ்ஞானத்தின் மூலமாக சமய கருத்துக்களை தந்துள்ளனர். இன்று பல நெருக்குதல்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் எம் சமய மக்களுக்கு இம் மகாநாடு மூலமாக மண்ணில் நல்ல வண்ணம் வாழும் முறையை வெளிப்படுத்தும் என நம்புகின்றோம். இம்மாகாநாட்டை நடாத்தும் லண்டன் வாழ் சைவமக்களுக்கும், அறிஞர்களும் இறைவன் ஆசி கிடைப்பதாக. இம்மகாநாடு ஒவ்வொரு வரு -மும் நடைபெற இறைவனை வேண்டுகிறோம்.

என்றென்றும் வேண்டும் இன்ப அன்பு
2வது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள்



மூன்றாவது மகாநாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்று

* w. s .c. Internet : url:http: // www.malaysia/ people/ subas


# WORLD SAIVA COUNCIL

## International London (UK) Headquarters

H.H. Swami Siva Nandhi Adikalaar
Chairman, And Chief Executive
World Saiva council
C/o London Meikandaar Aadheenam
72 King Edward Road
London E17 6HZ
United Kingdom

Phone:020 8531 - 6435
Fax: 01268 - 561805

சிவாய நம:



Established in
Madras, 29 - 2- 92

இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்
உலக சைவப் பேரவை
CENTRAL EXECUTIVE

தலைமைச் செயலகம்

From: தவத்திரு சிவநந்தி அடிகளார்

C/o London Meikandaar Aadheenam
72 King Edward Road
London E17 6HZ
United Kingdom

23 - 06 - 01

## U.K Saiva Temples federation's :Saiva Conference, 18 - 19 Aug 2001
## Message of Blessings: Saivism Needs Vision, Focus, Action

போற்றி ஓம் நமச்சிவாய . சிவ நலமே மலர்க

While conveying our prayerful blessing of best wishes for the success of the conference, We take this opportunity to spotlight three major issues that are cripping saivism under our very notes:-

1.The on - going christian conversions worldwide,

2. The deliberate marginalisation of saiva thirumurai and saiva siddhanta by Smartha Brahminisam

3. The lack of saiva Education for our youth who feel alienated from our religion and our Temples.

1. There are an estimated 249,000 christian missionries In India, with 10,000 in Tamil Nadu converting saivites round the clock.

2. We are witness to the contuning sordid spectacle even today of our own Saiva Temple Trustees inviting alien Vedantic Priests to officiate in our Temple, so that they can undermine Saivism from within and also get paid for it

3. Because of a lack of saiva education, our youth feel alienated both from our society and our Temples and therefore feel easy prey to conversion. Before it is too late, let us have long term vision, focus & Action

“மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

AUM NAMASIVAYA, ANBE SIVAM : ONRE KULAM: THIRUKKURAL OUR ETHICS: THIRUMURAI OUR SCRIPTURE

அன்பே சிவம்
சிவ சிவ
23.06.01

A
Vision without A task is but a dream only
A task without a vision is mere drudgery
A vision with a task can alone change the world

தவத்திரு மருதாசல அடிகள்
Thavathiru Maruthachala Adigal
இளையபட்டம்
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010
தமிழ்நாடு

I 11aya adigal
Peruratheenam, Perur (P.O:)
Coimbatore - 641 010
Tamilnadu
E- mail: illayaadigal@yahoo.com

# வாழ்த்து

வினையின் நீக்கிய முனைவனாகிய முக்கட்பெருமான் வழிபாடு பன்னெடுங்காலமாக உலகெங்கும் நடைபெற்று வருகிறது. சிந்துச் சமவெளியில் மிகவும் தொன்மையான சிந்துவெளி நாகரிகத்தின் மூலம் அவர்கள் பசுபதி நாதரை வணங்கியதற்கு அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் மிகக் கிடைத்துள்ளன. இந்தியாவில் மட்டுமல்லாது சீன மஞ்சள் நதிக் கரை, மெசபடோமியா போன்ற இடங்களிலும் சிவவழிபாட்டுக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது என்பது வரலாறு கூறும் செய்தி. ஆனால் அமெரிக்கா நாட்டின் அமேசா நதிக் கரையில் பல ஆயிரக் கணக்கானஆண்டுகளுக்கு முன்னரே சிவலிங்க வழிபாடு இருந்துள்ளதுஎன்பதை அகழ்வாராய்ச்சிகள் காட்டுகின்றன. அத்தகைய சைவ சமயம் வடகயிலையைத் திருமலையாகவும், தென்தில்லை மண்றினை திருமலையாகவும் தென்தில்லை மன்றினை திருக்கோயிலாகவும் கொண்டு திகழ்கிறது.

வடக்கே காஷ்மீரம் முதல் தெற்கே தமிழகம், இலங்கை வரை மேன்மை கொள் சைவ நீதி விளங்கித் திகழ்கிறது. அவ்வப்போது தொய்வு வந்த போதெல்லாம் அருளாளர்கள் தோன்றி நின்று சைவத்தையும் தமிழையும் மக்களிடத்தில் நிலைபெறச் செய்துள்ளார்கள். நால்வர் பெருமக்கள், சைவ அருளாளர்கள், நாயன்மார்கள் ஆகியோர் சிவநெறி நின்று சிவகதி அடைந்துள்ளனர். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், என்ற நோக்கில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பெருமக்கள் பல தலங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களையெல்லாம் நெறிப்படுத்தி சிவ நெறியை ஒழுகச் செய்தார்கள். இன்று உலகம் வளர்ந்துள்ளது. முன்னோர் காட்டிய நெறியை மறவாது இலங்கையிலே இருந்து புலம் பெயர்ந்த தமிழன்பர்கள் சென்ற இடமெல்லாம் சைவத்தையும் தமிழையும் போற்றி வருகிறார்கள். இங்கிலாந்து நாட்டிலே இதே போன்று புலம் பெயர்ந்த இலங்கை தமிழன்பர்கள் பல திருக்கோயில்களை அமைத்துள்ளார்கள். அனைத்துத் திருக்கோயில்களின் ஒன்றியம் என்ற அமைப்பை ஏற்படுத்தி மூன்று சைவ மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. முதலாவது, இரண்டாவது மாநாடுகள் திருப்பெருந்திரு பேரூரடிகளாரின் ஆசியுடனும் பங்களிப்புடனும் சிறப்பாக நடைபெற்றன. மூன்றாவது மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இறையருள் கூட்டுவித்தது. சென்ற மூன்று ஆண்டுகள் மகாநாட்டுக்குச் சிறப்பிற்காக அருந்தொண்டாற்றிய சொ.கருணைலிங்கம் அவர்களைத் தலைவராகவும், செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் அருந்தொண்டாளர் திரு வி. கணேசமூர்த்தி அவர்களைச் செயலாளராகவும் கொண்டு நான்காவது மாநாடு நடைபெறுவது பாராட்டுக்குரியது. மாநாடுக் குழுவில் இடம் பெற்றுள்ள அனைவருக்கும் நம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாநாடு சிறக்கவும், மாநாட்டையொட்டி வெளியிடக் கூடிய மலர் சிறக்கவும் வாழ்த்தி மகிழ்கிறோம். மாநாட்டோடு பணி நிறைவு பெற்றது என்றில்லாமல் மகளிரையும், இளைஞர்களையும் சைவச்செந்நெறியில் ஈடுபடுத்த பல்லாற்றானும் முயல வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் வல்ல அம்பலவாணப் பெருமான் இன்னருளும் சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளும் குருவருளும் பெற வாழ்த்தி மகிழ்கிறோம்

வேண்டுந்தங்களன்பு
அன்புள்ள
மருதாசல அடிகள்

# SHREE GHANAPATHY TEMPLE

***123-133 Effra Road, Wimbledon London SW19 8PU***
***Tel: 020 8542 4141***


உ

மெய் அன்பர்களே,

சீரும் சிறப்பும் மிக்க சைவமும் தமிழும் நலிவுற்று பிற சமயங்கள் ஆதிக்கம் செலுத்திய போது வெப்பம் கூடிய காலத்து வானம் கறுத்து மழை பொழிந்து வாடும் உயிர்கட்கு நன்மை செய்வது போல எம் பெருமான் திருவருளினால் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் போன்ற நாயன்மார்கள் சைவமும் தமிழும் செழிக்க அவதரித்தார்கள். அது முதற்கொண்டு காலத்துக்கு காலம் பல சிவ அடியார்கள் ஆன்மீக வாதிகள். தமிழ் சைவ ஆர்வலர்கள், ஆலயங்கள், ஆதீனங்கள் மற்றும் மடங்கள். சங்கங்கள் மூலமாகவும் இயல், இசை, நாடகம் துணை கொண்டும் எமது சமயத்தையும், மொழியையும், கண்ணை இமை காப்பது போல் பேணி வந்தார்கள்.

பாரம்பரியமாக பேணி வளர்த்து வந்த எமது கலாச்சார பண்பு களையும் சமயத்தையும் மொழியையும், "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற வாழ்த்துக்கேற்ப உலகமெலாம் பரவ எம்மக்கள் வழி அமைக்க வேண்டும். இந்த அவசியத்தை உணர்ந்த பிரித்தானிய வாழ் சைவப் பெரியோர்கள் கடந்த 98ம் ஆண்டு முதலாவது சைவ மகா நாட்டை அமரர் A.T.S இரத்தினசிங்கத்தின் தலைமையில் வெகு சிறப்பாக நடாத்தி மகிழ்வு கொண்டார்கள். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இம் மகாநாடு நடைபெற்று அனைவருக்கும் பயன் உள்ளதாக இருக்க வேண்டும். என்பது அப் பெரியாரின் விருப்பம் .

அந்த வெளிப்பாடாக அதை செயல் படுத்தி வரும் சைவ அபிமானிகள் இறையருளுக்கு பாத்திரமாகுகிறார்கள். இவ் வகையில் இவ்வருடம் மகாநாட்டில் அகவை நான்கு. அறிவு நிறை பேராளி பெருந்தகைகள் கலந்து கொள்ளும் இம் மகா நாட்டில் சமய விரும்பிகள், பெற்றோர்கள், குழந்தைகள் என அனைவரும் சமூகமளித்து இறைவழி நெறிமுறை அறிந்து அறிவுக்கலம் பெற அன்புடன் அழைக்கிறோம்

ஆகஸ்ட் 18ம், 19ம் திகதி நடைபெறும் சைவ மகாநாடு சிறப்புற விநாயகப் பெருமான் அடி பணிந்து ஆசி கூறுகின்றோம்.

சுபமஸ்து

சிவஸ்ரீ சநா. விக்கினேஸ்வரக் குருக்கள்

பிரதம குரு, விம்பிள்டன் பிள்ளையார் கோவில்



BRITTANIA HINDU (SHIVA)TEMPLE TRUST

ESTABLISHED 1974 Registered Charity No. 269067

HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA, England, U.K.

Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

**Board of Trustees**

Chairman - Trustee
Mr. V. Sellathurai

Secretary - Trustee
Mr. K. Ranganathan

Treasurer - Trustee
Mr. n. Vamadevan

Trustees
Dr. V. Narayanarao
Mr.A. Vairavamoorthy
Mr.S. M. Srikantha
Mr V. Selvanayagam

Advisory Council

Chairman
Mr V. Sellathurai

Secretary
MrR. Kunasingam

Administrator
Mr. K. Nagarajah

இங்கிலாந்து தேசத்தில் -தமிழ் - சைவ ஒழுங்குகள் எதுவும் இல்லாத 1970 ம் ஆண்டு காலத்தில் உயர்வாசல் குன்று முருகன் ஆலய ஸ்தாபகராக விளங்கி அரும்பாடு பட்டு லண்டனில் மாபெருங் கோவிலை அமைத்த சபாபதிப்பிள்ளை ஐயாவின் ஆன்ம சாதனை- சைவன் என்பான் - சைவமக்களுக்கும் - இறைவனுக்கும் ஏற்படுத்திய உறவுப்பாலம் தான் உயர்வாசல் குன்று முருகன் ஆலயம் என்று பெருமையுடன் கூறுவேன். பின் காலப்போக்கில் பல ஆலயங்கள் தோன்றிச் சைவமக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவது நாம் செய்த தவப்பயனே.

இவ் ஆலயங்களின் அனுசரணையினால் சைவம் தமிழ் காக்கப்பட்டு சைவக்கோயில் ஒன்றியத்தின் நாலாவது சைவ மகாநாட்டு விழாவின் பெறுபேறுகளை நினைந்து, நினைந்து அக மகிழ்ந்து வரவேற்கிறோம்.

சைவ மக்களின் வாழ்க்கை - மக்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்புகளையும் - தமிழ் என்னும் செம்மொழியின் மாண்புகளையும் - அச்செம்மொழியால் இறைவனை ஏற்றி மகிழவும் முருகன் மக்களுடன தமிழாய்ப் பொழியவும் அருள் வழி ஏற்பட மகாநாடு பயன்தருவதாக .

சைவன் - சத்தியம் - நேர்மை - மனஉறுதி - மனஅடக்கம் கடைப்பிடித்து அறப்பற்றும் பிற உயிர்களில் நேயமுடையவனாக வாழ இம் மகாநாட்டில் பேசப்பட்டு - மக்கள் இறையருளுடன் பயன்பெற வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துவோமாக.

இங்ஙனம்
வ. செல்லத்துரை
தலைவர்

B.H.T.T



அம்மனை சரண் அடைந்தால் அதிக வரம்பெறலாம்

**SHRI KANAGATHURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

**ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை**

Charity No: 1014409

கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காக பயன் படுத்தப்படுகிறது


**EXECUTIVE COMITTEE**

**Chairman**
*Mr.S. Karunalingham*

**Vice Chirman**
*Mrs.K. Sivapatham*

**Secretary**
*Mr.N. Sothirajah*

**Joint Secretary**
*Miss.L. Ponniah*

**Treasurer**
*Mr.S. Sathiyanandarajah*

**Asst.Treasurer**
*Mr.A. Pathmalingam*

**Elected Committee Member**
*Mrs.S. Kanesharajah*

**Committee Members**
*Mr.R.D. Ratnasingham*
*Mr.S. Thedchanamoorthy*
*Mr.S. Varatharajan*
*Dr.M. Vinayagamoorthy*

**Board of Trustees**
**Chairman**
*Mr.S. Sri Rangan*
**Secretary**
*Dr.V. Paramanathan*

*Mr.S. Abeyalingam*
*Mr.A. Thevasagyam*
*Mr.R. Kanesharajah*
*Mr.S. Premachandra*
*Mr.P. Ramachandran*
*Mr.P. Theivendran*
*Mr.T. Thevarajan*

**Member of**


# புலம் பெயர் நாடுகளில் பலம்பெற்று வலம் வரும் சைவமக்கள்

ஈழநாட்டைச் சுரண்டிச் செல்ல, படையெடுத்து வந்த பிறநாட்டவர் அனைவரும். எமது வழிபாட்டுத் தலங்களை அழித்தனர்: பாடல்பெற்ற தலங்களுக்கும் இக்கதியே நிகழ்ந்தது. கேதீஸ்வரத்தைச் சிதைத்தனர். கோணேஸ்வரத்தை இடித்து, மாபெரும் கோட்டையைக் கட்டியெழுப்பினர். சைவத்தை புதைத்து விட்டதாக அந்நியர் இறுமாந்தனர். கால ஓட்ட வேகத்தில், சரித்திரத்தின் சக்கரங்கள் வேகமாகச் சுழன்றன. இப்போது அவை திருப்பிச் சுழல்கின்றன.

எமது சமுதாயத்தில் ஆலயங்களை சின்னாபின்னப் படுத்திவிட்டு வந்த மேற்கு நாட்டவரின் நாடுகளில் எல்லாம் இன்று சைவத்திருக் கோயில்கள் நாளாந்தம் முகிழ்க்கின்றன. இந்த வகையில் பெரிய பிரித்தானியா, ஜேர்மணி, ஒல்லாந்து, சுவிட்சலாந்து, பிரான்ஸ் டென்மார்க். கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என்று உலகமெல்லாம் திருக் கோயில்கள் உதயமாகி வருகின்றன. இதற்குக் காரணம் என்ன? “எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி” என்று எமது சைவ சமயம் குரல் எழுப்புவதும், “வையகமும் துயர் தீர்க்கவே ” என்று சைவத்திருமுறை கட்டியம் கூறுவதுமேயாகும். பொதுவுடமையும், ஒருமைப்பாட்டையும், அடியார்க்கு அடியர் என்ற தத்துவக் கோட்பாட்டையும் உள்ளடக்கி, சைவம் மிளிர்கின்றது. இதனால்தான், உலகெலாம் சைவம் ஒளிவீசுகிறது.

மேற்கு இலண்டனில் ஆலயமொன்று இல்லாத குறையைப் போக்குவதற்காக, 1991ம் ஆண்டில் சிறீ கனகதுர்க்கா ஆலயம் உருவாக்கப்பட்டது. இடத்துக்கிடம் நான்கு வருடங்களாகக் காவிச் செல்லப்பட்ட இந்த ஆலயம், 95ம் ஆண்டில் ஈலிங் நகர்ப் பகுதியில் நிரந்ததக்கட்டிடத்தில் அமையப்பெற்று எழுந்தருளி வருகிறது. பத்துவருடங்களில், அற்புத வளர்ச்சியை இந்த ஆலயம் கண்டுள்ளது. பொற்பதம் கொண்டுள்ள துர்க்காவின் அற்புதஆற்றலை, எப்படி எடுத்துரைப்பது? சலியாத மனம், அன்பு அகலாத குணம், பிணியில்லாத உடல் ஆகியவற்றைக் கொண்டுள்ள எமது அடியவர்கள் அனைவரும் கனகதுர்க்காவின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக அமைந்துள்ளனர்.

வீட்டை விட்டு, நாட்டை விட்டு, தத்தம் தேட்டத்தைவிட்டு, கலாச்சார விழுமியங்களை சுமந்து கொண்டும், இறைவனை மனதில் காவிக்கொண்டும் எம்மவர் புலம் பெயர்ந்தனர். புலம் பெயர்ந்த நாடுகளில், ஆத்மீகப் பலம்பெற்று, சமூக, பொருளாதார மட்டத்தில் வலம் வருவதற்கு, இறை நம்பிக்கை அவர்களுக்கு மூலாதாரமாய் அமைந்துள்ளது.


**5, Chapel Road, West Ealing, London, W13 9AE**
**Tel, Fax : 020 8810 0835**

"சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு
சிந்தை இரங்காரடீ....."என்று, அன்று பாரதி கூறினான். அக்கூற்றை நிராகரிக்கும் வகையில், பக்தப் பெரும்க்கள் வழிபாடு, பூசைஎன்ற எல்லைகளைத் தாண்டி, கனக துர்க்காவின் கடாட்சத்தால், மனித நேயத்திலும், ஆழ்ந்த சிரத்தை கொள்ளத் தொடங்கியுள்ளனர். "ஏழைபங்காளனையே பாடேலோர் எம்பாவாய்" என்றார் மாணிவாசகப் பெருமான். இறைவனே ஏழைபங்காளனாக இருக்கும் போது, அடியவர்கள் சும்மா இருப்பார்களா? ஈழத்தில் நலிவுறும் ஏழைகள், ஏதிலிகள், ஆதரவற்றோர் ஆகியோருக்கும் எமது அடியவர்கள், பங்காளராக மாறிவருகின்றனர்.

கடந்த 8 மாதங்களில் இதுவரை 22,500பவுண்ஸ் பணத்தை, ஈழத்து தாயக உறவின் உணர்வின் நிமித்தம், நலிவுற்றோருக்கும், ஆதரவற்ற அனாதைகளுக்கும் எங்கள் ஆலயம் அனுப்பியுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம், வன்னியில் இயங்கும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம், கிளிநொச்சியில் உள்ள யோகர் சுவாமி திருவடி நிலையம், இந்து இளைஞர் பேரவை, மட்டக்களப்பில் பணியாற்றும் மங்கையர்க்கரசி மகளிர் இல்லம், திலகவதியார் மகளிர் இல்லம், அக்கரைப்பற்று விபுலானந்த அனாதைப் பிள்ளைகள், கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் உள்ள மகாதேவா ஆச்சிரம அனாதைகள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, வன்னி பகவான் சாயி சேவை நிலையம், ஏழாலை சிறீ வசந்த நாக பூசணி - தேவஸ்தான அனாதைப் பிள்ளைகள் இல்லம் என்பனவற்றுக்கு எமது ஆலயத்தின் அருளும், பணமும் கிடைத்துள்ளன.

ஆதரவுக் கரம் கேட்டு, தாயகத்தில் இருந்துவரும் எண்ணற்ற கடிதங்களை அறங்காவல் சபையும் நிர்வாக சபையும் ஒருங்கு கூடி ஆராய்ந்த பின், நிதியனுப்புவது பற்றி தீர்மானிக்கின்றோம். சமன் செய்து சீர்தூக்கும் கோலாக அமைந்து, நடுநிலை பிறழாது முடிவெடுக்கின்றோம். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து, எமக்கு வந்துள்ள நன்றிக் கடிதங்கள், புகைப்படங்கள் என்பனவற்றை ஆலயத்தில் திறந்த புத்தகமாக வைத்திருக்கின்றோம்.

இந்த மாதம், எம்மண்ணின் ஆதரவற்ற கண்மணிகளை, தத்தெடுத்து அடியார்கள் பராமரிப்பதற்கான ஓர் புதிய திட்டத்தை முன்வைத்துள்ளோம். மாதமொன்றுக்கு ஓர் பிள்ளையைப் பராமரிப்பதற்காக, £15 பணத்தை அடியார்கள் தருகிறார்கள். இதுவரை 100 திக்கற்ற பிள்ளைகளுக்கு, எமது ஆலயம் கலங்கரை விளக்காக வழிகாட்டியுள்ளது. இம் மாத முடிவில் இத்தொகை நூறறைத் தாண்டி அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம். இத் திட்டம் தொடர்ந்து, கொடிபோல் பரவ துர்க்காவின் கடைக்கண்ணுக்காகக் காத்திருக்கிறோம்.

காலப்போக்கில் சிறீ கனக துர்க்கை அம்மனின் அறநெறிப் பணியை இந்தியாவுக்கும் விஸ்தரிப்பதற்கு திருவருளை இறைஞ்சுகின்றோம்.

சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் ஆரம்பகால உறுப்பினராகவிருந்து , உழைத்துவரும் எங்கள் ஆலயம், நல்ல பணிகள் சிலவற்றை இலண்டனிலும் மூலைமுடுக்கிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சைவத்தைப் போதிப்பதற்கு, நிதியுதவி செய்யத் தொடங்கியுள்ள எமது ஆலயம், நூல் வெளியீடுகள் , நூற் கண்காட்சிகள், இலக்கிய ஆர்வலர் பாராட்டு விழாக்கள் என்று தமிழுக்கும் தன்னை அர்ப்பணமாக்கி வருகிறது.

இலண்டனில் நான்காவது தடவையாகத் தொடர்ந்து நடைபெறும் சைவமகாநாடு, தொடர்ந்து தழைக்க, எமது ஆலயம் தன் கடன் செய்யும், மகாநாடுகள் மூலமாக, கருத்துப்பரிமாற்றங்களை மட்டும் உள்வாங்கிக் கொண்டால் மட்டும் போதாது. சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தைப் பலப்படுத்துவதற்காக, எமது கரங்களை எல்லோருடனும் இறுகப்பற்றி , ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொள்ள வேண்டும்.!

அப்போதுதான் எமது இதயங்களில் குடிகொண்டுள்ள சிவத்தின் பிரதிபலிப்பை நாங்கள் காணமுடியும்.

"உன்னடியார் தாள் பணிவோம்"

- அன்பே சிவம் -

திரு ச.சிறீரங்கன்
(தலைவர், அறங்காவலர் சபை)

திரு நா.சோதிராசா
(செயலாளர், நிர்வாக சபை)



# SRI RAJA RAJESWARY AMMAN TEMPLE

Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE
Tel:020 8393 8147

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி துணை

உலகத்தில் சகல ஜீவராசிகளையும் படைத்து பஞ்ச பூதங்கள் பஞ்ச கிருத்தியங்கள் ஆன்மார்த்த வழிபாடு பரார்த்த வழிபாடு நித்திய நைமித்திய கிரியைகள் என்றெல்லாம் வகுத்த இறைவனை நாம் அடைவதற்கு நாம் வழிபடுவதற்கு உகந்த இடம் ஆலயம் சிவனும் சக்தியும் சேர்ந்த ஒவ்வொரு அவதாரம் மூலம் தங்களது சக்திகளை வெளிப்படுத்தி உள்ளனர். அதிலே எல்லாவற்றிக்கும் மேலானவர் அன்னை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி. ராஜ்ய பரிபாலன அனைத்துக்கும் மேலே ராஜ ராஜேஸ்வரியாக வீற்றிருக்கிறாள். அவளுடைய பத்து விரல்களிலும் விஷ்ணுவினுடைய பத்து அவதாரங்களும் உள்ளன. சகலரையும் தனக்குள்ளே அடக்கி சர்வலோக மாதாவாக காட்சி கொடுக்கும் சக்தி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி இறைவன் முக்கியமாவை எல்லாம் சக்தியிடமே கொடுத்து இருக்கிறான். பூமியையும் கல்வி - செல்வம் - வீரம் ஆகிய சக்திகளுக்கு எல்லாம் தாய் ராஜராஜேஸ்வரி. ஸ்ரீ சக்ர நாயகியாகவும் ஸ்ரீ சக்கரத்தில் எல்லா தெய்வீகங்களும் உண்டு அதற்கும் அவளே, தாயாகவும் விளங்கி உலகை காத்து வருகின்றாள் கையிலே கரும்பு ஏந்தி நாங்கள் அனைவரும் ஒரே மனதாக அவளைத் தியானித்தால் கரும்பு உண்டால் எவ்வாறு தித்திக்குமோ அது போன்ற வாழ்வை அள்ளித் தருபவள் அப்படிப்பட்ட அன்னையின் ஸ்வருபம் பிரித்தானியா லண்டன் நகரில் ஸ்ரோன்லிப் பதியில் வைத்து பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திய பூஜைகளை நடாத்தி வருகிறார்கள் இதை உருவாக்கிய தர்மகர்த்தாக்கள் வழிபடும் அடியவர்கள் அனைவருக்கும் அம்பிகையின் அருள் உண்டு. விசேட காலங்களில் ஒவ்வொரு ரூபத்தில் அலங்கரித்து ஒவ்வொரு விதமாக பார்த்து ஆனந்த பரவச மடைகிறோம். அவளை அனுதினமும் பார்த்து கொண்டிருந்தால் கண்முன்னே எந்த கவலையும் தெரியாது. அப்படிப்பட்ட அன்னையை அனுதினமும் துதித்து பக்தர்கள் அனைவரும் மண்ணில் தேக சூக்கும பாவ வினையகன்று வாழ பிரார்த்தித்து விடைபெறுவோமாக.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்
சர்வே ஜனா சுகினோ பவந்து



ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அம்பாள் ரதமேறி உலாவரும் காட்சி

LOVE IS GOD

# London Sivan Kovil Trust

Charity Registration No. 1051516

4A, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 0181 318 9844

**Board of Trustees:**

**President:**
Dr. S. Navaratnam

**Vice President:**
Dr. S. Sivathasan

**Secretary:**
Dr. T. Sriskandarajah

**Treasurer:**
V. Kanesamoorthy

**Assistant Treasurer:**
Dr. S. Rajasundaram

T.Arulthas
S.Balasundaram
Dr. R. Kandavel
Mrs(Dr) Karunakaran
Mrs V.Kengatharan
V. Krishnantharajah
N. Satchithananthan
N. Sivasubramaniam
Dr.S.T.S.Somasegaram
S.Yogarajah

**Bankers:**
1) Barclays Bank Plc.
Catford Branch
2) Lloyds Bank Plc.
Billericay Branch

**Auditors:**
B.W. Chatten
Brentwood

*5th August 2001*

*The London Sivan Kovil was established in 1993 in Lewisham, Southeast London, to the meet the fundamental need of Saivites (Hindus). The Sivan Kovil provides a multitude of opportunities for worship for the devotees, including the recently established statues of the sixty-three Saiva Saints. The atmosphere that pervades throughout the temple is integral to the emotional attachment devotees have for the Kovil.*

*In addition to the spiritual worship in the temple, there is a learning centre that works in tandem to provide opportunities and inspiration for the community to learn about our culture. This encompasses a variety of subjects including Tamil language lessons, Carnatic music and Pannisai lessons. These lessons are all essential in the developing of character, spirituality and confidence within our youth. The Sivan Kovil Trust have identified the importance of educating our youth about the integral parts of their culture, so that they themselves can identify who they are and what they represent. It is vital for us to look forward to the future for that it is where the present lies for our youth. We need to instil the fundamentals so that they can take the initiative and pass on the teachings that they received. We as a community must take the initiative to direct our youth towards religious teachings and help them to realise their boundless potential, for that is where they will find true happiness and fulfilment.*

*The London Sivan Centre was built to provide abundant opportunities and up-to-date facilities to those within this large multicultural community. The Centre is frequently used to stage Hindu weddings, as it is advantageous for all those concerned as the Kovil and Centre are ideally located.*

*The children associated with the Temple will be given regular forums, in which they can perform their newly acquired talents in the musical, dance and dramatic fine arts. The new computer room is a recent addition to the centre, providing access to the latest computers and software packages. The aim of this initiative is to give the chance for our community to obtain recognised qualifications.*

*The London Sivan Kovil Trust has acknowledged the lack of facilities, information and assistance required for the elderly members of our community. The Sivan Centre, with the aid of volunteers, has taken active measures to support our elders. They have weekly sessions for the elderly to meet and listen to their needs. It is paramount that elders are respected and cared for, as they have contributed greatly to our well being and heritage of our rich culture.*

*We hope that the Sivan Centre, with its diverse facilities and expert advisory services, will continue to be at the forefront of the community providing a corner stone that people can utilise regularly to enhance their lifestyles.*

*Finally, I would like to take this opportunity, on behalf of London Sivan Kovil Trust, to wish the 'Federation of Saiva Temples' and participants of the Fourth Saiva Conference every success with their auspicious endeavours.*

Dr. T. Sriskandarajah, *Honorary Secretary of LSKT.*

உ
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

**சைவ முன்னேற்றச் சங்கம் (U.K.)**

சைவசமயக் கருத்துணர்வினூடாகச் சமூகசேவை

**Saiva Munnetta Sangam (U.K.)**

*"Community Service through Hindu Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel: 020 8514 4732/020 8550 2739 Fax: 01268 561805
**Bankers:** LLoyds TSB Bank Plc. & National Savings Bank
**Auditor:** AJ Accountants

Registired Charity No: 292085



**24th Year**
**Management Committee**

**President & Trustee**
Mr. W. Nagaratnam
020 8550 2731

**Vice President**
Mr. V. R. Ramanathan
01268 766624

**General Secretary & Trustee**
Mr. S. Anandathiyagar
020 8924 8492

**Treasurer & Trustee**
Mr. S. R. Pasupathy
020 8925 9611

**Trustees**
Dr. V. Balasegaram
Mr. T. Kanagasabai
Mr. R. Pathmanathan
Mr. C. Sithamparapillai

**Social Service Secretary**
Mr. S. Kanagenthran

**Publication Secretary**
Dr. N. Navaneetharaja

**Building Project Secretary**
Mr. G. Parameswaran

**Religious Secretary**
Mr. K. Sivagurunathapillai

**School Secretary**
Mrs. P. Uthamakuran

**Membership Secretary**
Mr. V. C. Vamananthan

**Assistant Treasurers**
Mrs. B. Linganandan
Mr. T. S. Tharmalingam

**Committee Members**
Mrs. T. Gunaratnam
Mr. K. Mageswaran
Mrs. R. Nadarajah
Mr. M. Natkunathayalan
Mr. V. Sellathurai
Mr. S. Sivarajasingam
Mr. N. Sivarasan
Mr. S. Srikantharajah
Mrs. T. Yogaratnam


31.07.2001

# உண்மைகளை உற்று நோக்க உதவிடும் மாநாடு

சிந்தனையாளர்கள் ஒன்று கூடிச் சிவநெறிச் சுவடுகளை ஊன்றிப் பார்க்கும் நல்ல இரண்டு நாட்கள்.
இந்த நாட்டில் சைவத்தின் போக்கினை உலகத்திற்கு எடுத்துக் காட்டும் அளவு கோல் இம் மாநாடு.
மேலை நாட்டின் நாகரிகத்தின் மத்தியில் சனாதன தர்மத்தின் தத்துவங்களை நயமாகவும் நம்பத் தகுந்ததாயும் சொல்லி வைக்க நல்ல முறைகளைக் கண்டறிய முனையும் சீரிய முயற்சியில் பாடுபடும் நேரமிது..
இம் மாநாடு சைவத்தை வளர்ப்பவர்கள், பாதுகாப்பவர்கள், சைவத்தைப்பற்றி எழுதுபவர்கள், பேசுபவர்களின் செயல்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடி.
இவ்விரண்டு நாட்களும் அடுத்த சந்ததியினருக்கு சைவத்தின் உண்மைகளைத் தெளிவாக்க வழி தேடும்.
இளைஞர்களின் எண்ணங்களைக் கேட்டு எதிர்காலத் தேவைகளைத் தீர்மானிக்க திட்டமிடும் ஒன்றுகூடலிது.
மாநாட்டின் ஒவ்வொரு செயலினாலும் வெளிப்படும் ஆற்றல் அளப்பரியது.
அவைகளின் ஒன்று சேர்ந்த பேராற்றல் என்னும் சக்தி பல சிக்கல்களிலிருந்து எம்மை விடுவித்து ஆன்மீக வழி காட்டும் வல்லமை உடையது.

இத்தனை ஆற்றலுடைய நல்ல பணியில் ஈடுபட்டுள்ள சைவப் பெரியார்களுக்கு எமது பாராட்டுக்கள், வாழ்த்துக்கள். மாநாட்டின் உயர்ந்த நோக்கங்களை மனதில் கொண்டு புண்ணிய சிவப்பணி செய்யும் சிவனடியார்களுக்கு எமது பணிவான வணக்கங்கள்.

இத்தகைய சிவத் தொண்டின் பலனால் சைவ மக்களிடையே நல்லதொரு விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் மலரும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இதற்கு இறையருள் துணை நிற்க வேண்டுமெனப் பிரார்த்தித்து மாநாட்டின் வெற்றிக்கு வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்
நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந் தேத்துகேன்.

—சேக்கிழார்.


வி.நாகரட்ணம்
தலைவர்

சிதம்பரம் அனந்தியாகர்
கௌரவ பொதுச் செயலாளர்



# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# London Sri MuruganTemple

உலக வாழ் ஆன்மாக்களுக்கு அழியாத ஆனந்தமளித்து அருள் புரியும் ஆண்டவனாம் சிவபெருமானை இறைவனாகக் கொண்ட சைவசமயத்தின் சிறப்பும் பெருமையும் எல்லையில்லாதது.



மனிதப் பிறவியின் முழுப்பயனையும் பெற சமய அறநெறி வாழ்க்கை இன்றியமையாதது. மாயாபாசங்களில் உழன்று கண்டதே காட்சியாகக் கொண்டதே கோலமாகக் கொண்டு வாழும் மக்களுக்கு நன்னெறி கற்பித்து பேரின்ப நிலையருளும் சமயங்களுள் சைவ சமயம் தலையாயது.

இறையருளோடு அநாதியாய் தோன்றிய சைவசமயத்தின் வழி நின்று வாழ்ந்து காட்டி முக்தி அடைந்த அருளாளர்கள் அனேகர்.


இச்சமயத்தின் நெறிகளையும், புகழையும், எக்காலத்திற்கும் பொருந்தும் இயல்பையும் மேலை நாடுகளில் முதன்மையான இங்கிலாந்து நாட்டின் லண்டன் மாநகரில் கடந்த நான்கு ஆண்டுகளாகச் சைவ சமய மாநாடு வாயிலாக வெளிப்படுத்தி மனங்களிக்கின்றார்கள் மாநாட்டு விழாக் குழுவினர்.

சைவ சமயப் பெரியோர்களின் பெருமுயற்சியினால் நடத்தப்பெறும் இம்மாநாடு முழுமையாக நிறைவேறி சிறப்புற்று மேன்மேலும் சிறப்புப் பெற வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம்.

***கயிலை சிவஸ்ரீ நாகநாத சிவம் குருக்கள்***
லண்டன் ஸ்ரீ முருகன் கோயில்.



சென்ற மகாநாட்டின் போது ஒன்றியச் செயலாளர் வைத்தியகலாநிதி மகேஸ்வரன் உரையாற்றும் காட்சி



உ

சிவமயம்

Adviser, Modern Hindu Cultural Arts Work

Rep. In Australia for International Hindu Religious Arts Work

Rep. In Australia for International Hindu Religious Guru Peedam

சிவாகம வித்துவான், ஈசான் சிவாச்சார்யர்

## டாக்டர் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள்

அவுஸ்திரேலிய திருமணப்பதிவாளர்

16, Mandogalup Road,Mandogalup. WA 6167 Tel/ Fax: 618 9410 1174


Email: drsomaskandak@hotmail.com.

### உலகளாவிய 4வது சைவ மகாநாடு சிறக்க நல்வாழ்த்து

*பிரித்தானிய கோவில்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள உலகளாவிய நான்காவது சைவ மகாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் 18, 19ந் திகதிகளில் லண்டன் மாநகரில் மிகவும் கோலாகலமாக நடைபெறவிருப்பது அறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். உலகின் பல பாகங்களிலும் இருந்து அறிஞர் பெருமக்கள் வந்து ஒன்றி ணைந்து சிறந்த கருத்துக்களைப் பரிமாறும் சிறந்த மாநாட்டின் மூலம் வளரும் இளஞ் சமுதாயத் தினருக்கு சைவத்தின் பெருமையும் தமிழின் அருமையும் நன்கு புலப்படஅரியதோர் சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. எனவே லண்டன் வாழ் தமிழ் மக்கள் தமது சிறார்களுடன் தவறாது சமுகமளித்து தமிழகத்திலும் தமிழீழத் தாயகத்திலுமிருந்த வருகை தரும் அறிஞர்களின் கருத்துக்களைச் செவிமடுத்துப் பயனடைய வேண்டுமெனக் கேட்டுக் கொள்வ துடன்,மாநாடு மிகவும் சறப்பாக இனிதே நடைபெற இறைவனைத் துதித்து அனைத்துலக இந்துமத குருபீடத்தின் அவுஸ்திரேலியக் கிளையின் சார்பிலும், அவுஸ்திரேலிய இந்துக் குருமார் கவுன்சிலின் சார்பிலும் நல்வாழ்த்தினைத் தெரிவிக்கின்றேன்.*

டாக்டர் நா. சோமாஸ்கந்தக் குருக்கள்

---



உ

சிவமயம்

முத்தமிழ்க் குருமணி, சகலாகம சங்கரர், கிரியாக்கிரம ஜோதி, வாகீச வாரதி,

சிவாகம கலாநிதி, சதப்பிரம்மோட்சவ கிரியாசிரோன்மணி

## சுன்னாகம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்

ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானப் பிரதம குரு,

ஸ்ரீ சிவானந்த குருகுல பரிபாலன சபைச் செயலாளர்

பிரித்தானிய கோவில்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள உலகளாவிய

### 4வது சைவ மகாநாடு சிறக்க நல்லாசிகள்

*உலகளாவிய நான்காவது சைவ மகாநாடு ஆகஸ்ட் 18,19-ந் திகதிகளில் லண்டன் மாநகரில் நடைபெற விருப்பது அறிந்த மகிழ்ச்சி தருகின்றது. இந்தியாவிலும், இலங்கையிலும் வேறு பல நாடுகளிலும் இருந்து அறிஞர் பெருமக்கள் வந்து ஒன்றிணைந்து சைவத்தைப்பற்றி ஆற்றவுள்ள அரிய கருத்துச் செறிவுள்ள சொற்பெருக்களின் மூலம் நமது சைவத்தின் அருமையும் பெருமையும் லண்டன் வாழ் தமிழ் இளைஞர் களுக்கு புலப்படுவதற்கு அரியதோர் சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. லண்டன் தமிழ் மக்களுக்கு அன்னை ஸ்ரீ கனக துர்க்கை அருளிய ஆசி எனலாம். லண்டனில் வதியும் பெற்றோர்கள் தமது சிறார்களிடம் தவறாது சமுகமளித்து உலகின் பல பாகங்களிலுமிருந்து வருகை தரும் அறிஞர்களின் கருத்துக்களை மனதுல் பதித்து பயனடையவேண்டுமென வேண்டுகோள் விடுப்பதுடன், நான்காவது சைவ மகாநாடு இனிதே நடைபெற ஸ்ரீ பொன்னம்பல வாணப் பெருமானைத் துதித்து நல்வாழ்த்தினைத் தெரிவிக்கின்றேன்.*


மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

சுன்னாகம்

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்

உ
சிவமயம்

# தவத்திரு சிவயோகக் குருமணி அவர்கள்



புனிதம், புதுமை, பூரணத்துவம், பலரும் அணுகுதற்கரிய தனித்தன்மை வாய்ந்த அருள்மலையே நம் சிவயோக சுவாமிகள்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகத்தில், "நமச்சிவாய வாழ்க" என்னும் ஆரம்பத்தையுடைய 95 வரிகளையுடைய சிவபுராணத்தைத் தினமும் காலை, மாலை பாராயணமாகத் தெரிவு செய்து, அனைத்தையும் தன்னகத்தே அடைய வைக்கும் தியான யோகத்தமர்ந்து, ஈசனோடு ஐக்கியமாகி, வாழ்ந்து காட்டிய மகத்துவத்துக்கு உரியவரே நம்சுவாமிகள்.

நமது சிவயோகக் குருமணி பல இடங்களிலும் சிவராத்திரி விரத வழிபாடு நிகழ்த்தியுள்ளார். அவருடைய சிவராத்திரி வழிபாட்டிலே இரவு 12மணிக்கு கந்தபுராணத்திலிருந்து "அடிமுடிதேடு படலம்" படிப்பு முடிந்த பின் இலிங்கோற்பவ பூசை நடைபெறும். சுவாமிகளுடன் கூடியிருந்து அடியவர்கள் பக்தி சிரத்தையுடன் பங்கு கொள்வர். சுவாமிகளின் சிவராத்திரி வழிபாடுகள் வண்ணைக்குளப்பிள்ளையார் ஆலயம், அரியாலைப் புங்கன்குளத்தோட்டம், கொழும்புத் துறை இலந்தைக்குளப் பிள்ளையார் ஆலயம் ஆகிய இடங்களில் வெகு விமரிசையாக நடைபெற்றுள்ளன.

சுவாமிகள் நினைவு வரும்போதெல்லாம் அவரிடம் ே கும் அடியார் ஒருவர், சென்ற போது திருஞானசம்பந்தர் அருளிச்செய்த "இடரினும் தளரினும்" என்று ஆரம்பிக்கும் திருமுறையைப் பாடுமாறு சுவாமிகள் பணித்தார். அடியவர் பண்ணோடும் பக்தியோடும் பாடி நிறைவு செய்யும் போது ஒரு மலேசிய அன்பர் படலையைத் திறந்து கொண்டு பூந்தட்டு அர்ச்சனைச்சாமான்கள் பழங்களோடு வந்து கும்பிட்டு நின்றார். அடியவர்கள் ஏற்றிய கற்பூர ஒளியில் தட்டை ஆராய்வு செய்த சுவாமிகள் ஒரு பட்டுப்பையை எடுத்து உதற, அதிலிருந்த பொற்காசுகள் பொல பொல எனக் கொட்டின. அப்போது சுவாமிகள் "பாருங்கள், காசுக்குப் பாடினோம்.காசு வந்துள்ளது." என்றார். சுவாமிகள் கூறியதில் அர்த்தம் இரண்டு. 1. திருமுறைப் பெருமை. 2. பாடியவரின் பக்குவம். தேவைக்கு உருகிப் பாடினால் தவறாது. அடியவர்கள் இப்படியே நீள நினைந்து கேட்டனர். கிடைத்தது. நீள நினைந்து பாடிய சுந்தரருக்கு தேவைப் ர் பொதெல்லாம் காசு கிடைத்தது. இந்தச் சூட்சுமத்தை அறிவுறுத்தவே சுவாமி காண்பித்தார். இந்நிகழ்வைச் செய்து காட்டினார்.

" அருமையான உலகம்" என்று அடிக்கடி கூறிவந்த சுவாமிகள் தமது குருவான செல்லப்பா சுவாமிகளால் அருளப்பட்ட மகா வாக்கியங்களான

1) ஒரு பொல்லாப்புமில்லை 2)எப்பவோ முடிந்த காரியம் 3) நாமறியோம் 4) முழுதுமுண்மை ஆகிய மந்திர மொழிகள் உட்பட செல்லப்பா சுவாமிகள் அருளிய இன்னும் பல மந்திர மொழிகளையும் தான் அருளிச்செய்த நற்சிந்தனையில் போற்றித் துதித்திருப்பது நமது நற்றவப்பலனே.

நற்சிந்தனைகளாக வெளிப்பட்டுள்ள நம் சிவயோகக்குருமணியின் அருள் மொழிகளில் சில.

---

தெய்வத்தை நம்பு, முழு மனத்தோடு நம்பு, உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாகநினை, அதைவிட வேறில்லை என்று நினை, இருக்கும் போதும், நிற்கும் போதும், நடக்கும் போதும், கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும், இரத்தத்திலுந் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக நாளில்லை. கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக் கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகின்றான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

---

## அஞ்சேல்

14.11.1933

அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவது யாதொன்றுமில்லை என்னும் ஆன்றோர் மெய்ம்மொழி நம்மைப் பிறப்பு இறப்பாகிய கடலைக் கடப்பிக்குந் தெப்பம்." இதைத்துணையாகப் கொண்ட எமக்கு என்ன குறை? ஆதலால் நிறைந்த மனத்துடன் இந்தப் பெரும் பிரயாணத்தைச் செய்வோமாக.

இப்படிக்கு
என்றும் மறவாதவன்

---

உ
சிவமயம்

நான் உங்களுக்குச் சொல்லக்கூடியது ஒன்றுண்டு. நீங்கள் உங்கள் கடமையை வழுவாது செய்யுங்கள். உங்களுக்குப் பகவான் நல்லருள் புரிவார்.

எல்லோருக்கும் என் அன்பார்ந்த வணக்கத்தைச் செய்கிறேன்.

இப்படிக்கு
அவனே தானே

" செய்வன திருந்தச் செய்
மூத்தோர் வார்த்தை அமிர்தம்"

---

நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கிறோம்.
நாம் அவருடைய தாய்
நமக்கும் அவருக்குமொரு குறைவுமில்லை
நம்மை அவர் பிரிய முடியாது
முழுதும் உண்மை

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

---

கட்டுரையாளர்
சு. தம்பாப்பிள்ளை
(சிவயோக சுவாமிகளுடன் நேர்முகமாகப் பழகும் பெருவாய்ப்புப் பெற்ற அருளாளர்.)

---

லண்டன் வாழ் சிவயோக சுவாமிகளின் அடியாகளினால் 1993 செப்ரெம்பர் மாதத்தில் இருந்து இன்று வரை நற்சிந்தனைக் கூட்டுப் பிரார்த்தனை ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிற்பகல் 3மணி முதல் 5மணி வரை நடைபெற்று வருகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களை அறியவிரும்புபவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். 020 8552 6381

சற்குரு சிவயோகசுவாமிகள் திருவடிகள் போற்றி! போற்றி! ஓம் நமசிவாய.

# திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தம்

சைவ சித்தாந்த செம்மல் ச. கங்காதரன், (சைவசித்தாந்த பீடத்தலைவர்-
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்)

திருக்குறள் தமிழர் எவ்வாறு வாழவேண்டும் என்பது பற்றிய செய்திகளையெல்லாம் நிறைவாக நமக்குத் தெரிவிப்பதால், அந்நூல் தமிழர் வாழ்வியல் சட்டநூல் என்று கூறலாம். திருக்குறள் பொதுமறை. ஆகவே அனைத்து சமயத்தவர்க்கும் உரியது. அனைத்துச் சமய அன்பர்கள் திருவள்ளுவர் கூறும் அனைத்து செய்திகளையும் முழுமையாக ஒப்புக் கொள்வதாக நடைமுறையில் காணவில்லை. தங்கட்கு உதவியாகச் கூடிய சில குறள்களை ஆங்காங்கே எடுத்தாண்டு, தங்கள் கருத்துக்கு ஒத்துவராத சில கருத்துக்களை அவர்கள் கவனிக்காமல் விடுகின்றனர். அதாவது அப்பகுதிகளை புறக் கணிக்கிறார்கள் எனலாம்.

திருவள்ளுவர் மனிதரின் இயல்பை - சிறப்பாகத் தமிழரின் இயல்பைத் - தெரிந்தவர் - ஆகவே தனக்கு என்று ஒரு சமயக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் அதை வெளிப்படையாகக் காட்டவில்லை. ஏனெனில் திருவள்ளுவர் சைவர் என்று தெரிந்தால் வைணவர் முதலிய இந்திய சமயத்தினரும், கிறிஸ்த்தவர், இஸ்லாமியர், போன்றவர்கள் திருக்குறளைப் பயன்படுத்தத் தயங்குவர்.இது போன்றே எந்த சமயத்தைச் சார்ந்தவராக இருப்பினும் நடந்து கொள்வதை நாம் நடைமுறையில் பார்க்கின்றோம். ஆகவே தம் சமயக் கொள்கையை வெளிக்காட்டாமல், மனிதர் அனைவர மேலும் கொண்ட கருணையால் சமயக்கருத்துக்களைப் பிற கருத்துகளுடன் கோவையாக எடுத்து உரைக்கும் தலை சிறந்த நீதிநூலாக திருக்குறளை அருள்கிறார்.

குறிப்பில் உண்மைகளைத் தெரிவிக்கும் முறை

இயேசு நாதரைப் பற்றி ஒரு செய்தி கூறப்படுகிறது. அஃது அவர் தம் மாணாக்கர்க்கு உணர்த்த விரும்பிய உறுதிகளை வெளிப்படையாக, இலக்கண வகையில் கூறாது. உருவகக் கதை (Parables) களாகக் கூறி வந்தார். அதற்குக் காரணம் அவர்தம் வாய்மொழியைக் கேட்க வந்தவர் பலவகைப்பட்ட மக்களாய் இருந்தனர். சிலர் அவர் தம் உள்ளக் கிடையை நன்கு உணரும் காதலும், அறிவும், உணர்ந்தபின் அவர் குறிப்பின்படி நிற்க வல்ல ஆற்றலும், வாய்ந்தவராய் இருந்தனர், மற்றும் பலர் அத்தகைய காதல், அறிவு, ஆற்றல், என்பன இலராய் வெறும் கதை கேட்டு மகிழும் கருத்தினராயிருந்தனர். ஆகவே இவ்விரு வகையினருக்கும் பொதுப்பட, இயேசு நாதர், உருவகக் கதைகள் கூறினர். கதை கேட்க வந்தவர்கள் கதையே கேட்டு மகிழ்ந்து இயேசுவைப் போற்றினர். ஏனைப் பக்குவம் முதிர்ந்த உணர்வினோர் கதைகளில் உள்ள குறிப்புக்களை நுண்மையாக உணர்ந்து, அவர் காட்டிய நெறியில் நின்று பயன் எய்தினர் என்ப. இதில் அமைந்துள்ள உண்மை ஆசிரியர் திருவள்ளுவர்க்கும் ஒக்கும் என்று திரு.கா. வச்சிரவேலு முதலியார் திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தம் என்னும் நூலில் கூறுகின்றார்.

திருவள்ளுவர், பொருள்களை மேல்போக்கில் உணரும் பருவுணர்வுடைய லகர்க்கும், முடிந்த அடிப்படை உண்மைகளைச் சிறப்பாக ஆராய்ந்து உணரவல்ல நுண்ணுர்வு வாய்ந்த திருவருட்பேறுடையாருக்கும் பொதுவாக நூலை இயற்றிள்ளார். நூலைக் கைக்கொள்வார் தம், தம் திறத்திற்கு ஏற்பப் பரம்பொருளோ நுண்பொருளோ கொண்டு உரிய பயனைப் பெறுவர். இங்ஙனம் எவர் எவர் ஏத்திறத்தர் அத்திறத்தராய் நின்று அவரவர்க்கு ஆனவற்றைச் செம்பொருள், குறிப்புப் பொருள் என்று இருவகையில் அவர் அவர் உணர்வின் பெருக்கத்திற் கேற்ப உணர்ந்து கொள்ளுமாறு முடிந்த முடிவுகளையும் அடிப்படை யுண்மைகளையும் கொண்டு விளக்குதல் பற்றியே திருக்குறள் பொதுமறை எனப்படுவதாயிற்று, மற்று எல்லோரும் கொள்வன இதன் கண்களை என்பது பற்றியன்று. கேட்போர் உணர்வின் தகுதிக்கேற்ப, ஊன்றிப் பயிலுந்தோறும் அரிய ஆழ்ந்த உண்மைகளை வெளிப்படுத்தும் வகையில் நூல்களை இயற்றி

மக்களுக்குத் தருதல் சான்றோர் யாவர்க்கும் பொது வியல்பு, அவ்வுண்மைகளை உணர்ந்து பயனுறுதல் அமைந்த உள்ளமும் நுண்ணுணர்வும் வாய்க்கப் பெற்றோர்க்கே கூடுவதாகும். ஏனையோர், அமைந்து தம் கருத்தை ஆசிரியன் கருத்தின் வழிச் செலுத்த மாட்டாமையின், அவர் தாம் கண்டதே நூலில் கண்டு ஆசிரியர் காட்டும் நுண்பொருளைக் காணார்.
திரு. க. வச்சிரவேல் முதலியார் திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தம்
மதுரை சைவசித்தாந்த மன்றம் 244ம் ஆழ்வார்நகர். மதுரை - 625019
திருத்திய 3ம் பதிப்பு டிசம்பர் 2000 பக் 27

நவில் தோறும் நூல் நயம்போலும் பயில் தொறும் பண்புடை யாளர் தொடர்பு.
“நற்குணமுடைய மக்கள் தம்முள் செய்த நட்புப் பயிலுந் தோறும் அவர்க்கின்பஞ் செய்யும், அது எது போலும் எனின், நூற் பொருள் கற்குந்தோறும் கற்குந்தோறும் இன்பஞ் செய்தவை ஒக்கும் என்னும் ஆசிரியன் வாய் மொழி கருதத்தக்கது.

திரு. சக்கரவர்த்தி இராசகோபாலாச் சாரியார் தாம் இயற்றிய அற நூல்கள் எனும் தொகுதியின் வெளியீட்டின் முன்னுரையில் கீழ்வருமாறு ஒரு குறிப்பு எழுதி உள்ளார் அது,

“இவ்வாறான வாழ்க்கைக்கு வேண்டிய ஞானம், நூல்களைப் படிப்பதனால் மட்டும் உண்டாகாது. நூல்களைப் படிப்பதனால் மட்டும் உண்டாகாது. நூல்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் விளங்குவதற்கே, வாழ்க்கையில் சீலமும் பக்தியும் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் விளங்கிய மாதிரி தோற்றம் காட்டுமே யொழிய உண்மையில் விளங்காது.” என்பது.
இக்குறிப்பு திருக்குறளில் கூறப்படும்
ஒழுக்க நெறிக்கு முற்றும் பொருந்தும்
சைவ சித்தாந்தமும் திருக்குறளும்

சைவ சித்தாந்தத்தை நாம் உணர்ந்து பொருள் நன்கு உணர்ந்த பின் மீண்டும் திருக்குறளைக் கற்கும் போது புதிய புதிய செய்திகள் நம் கருத்துக்கு வருவதை நோக்கலாம். திருவள்ளுவர் கடவுளை வணங்க வேண்டும் என்று சுருக்கமாகக் கூறுகிறார். தாள் வணங்குதல் பற்றித் திருக்குறளில் காணப்படுகிறதேயொழிய எவ்வாறு வணங்க வேண்டும் என்பது பற்றி “நிலை பெறுமாறு எண்ணுதியே நெஞ்சே நீ வா என்பது முதலிய திருமுறைப் பாடல்களில் (கடவுளை வணங்கும் முறை பற்றிய கருத்துக்கள்) காணப்படுகின்றன.

“கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.”

என்பது திருவள்ளுவர் வாய்மொழி. இதன் பொருளை எல்லோரும் அறிவர், பிறர்க்கும் எடுத்துரைப்பர். ஆயினும் இம்மொழியின் படி ஒழுகும் ஒழுக்கத்தில் தலைநின்ற ஓர் ஆசிரியர் இதன் பொருளை எங்ஙனம் உணர்ந்து உள்ளார். என்பதைக் கீழ்வரும் பாடல்களில் காண்க.
“உள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்று அவற்றால் தெள்ளி வடித் தறிந்த பொருள் சிவன் கழலிற் செறிவு என்றே கொள்ளும் உணர்வினில் முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு பள்ளமடையா யென்றும் பயின்று வரும் பண்புடையார்.
“அலகில் கலையின் பொருட் கெல்லை ஆடுங்கழலே எனக்கொண்ட செலவு மிகுந்த சிந்தையினில் தெளிந்தார் சிறிய பெருந்தகையார் இவ்வாறே.

(பெரிய பூராணம்)

“வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால் வேண்டின் அஃது தொன்றுமே வேண்டுவது - வேண்டின் அது வேண்டாமை
வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக.
வேண்டாமை வேண்டுவேன்பால்.

- திருக்களிற்றுப் படியார் 40

என்னும் வெண்பா சித்தாந்த ஞானச் செல்வர் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயகன்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்னும் குறள்களின் செம் பொருள் துணிவு உணர்ந்து போற்றி ஒழுகி, பிறரையும் அவ்வொழுக்கத்தில் நிற்பிக்கும் பண்பாட்டைச் சிறப்பாக எடுத்துக்காட்டும்.

சத் என்ற தொடரின் விளக்கமும் சைவ சித்தாந்தமும்

சாந்தோக்கிய உபநிடதம் ஆறாவது அத்தியாயத்தில் சத்வித்தை என்னும் பகுதி வருகிறது. இதில் வரும் "சத்" என்ற தொடருக்கு சங்கரர் ஈராமாநுசர், மத்துவர் ஆகிய வேதாந்த ஆசிரியர்கள் பலவகையாக விளக்குகிறார்கள்."சத்" என்ற சொல்லுக்கு "இருப்பது" என்று சங்கரர் பொருள் கூறுவார். மெய்கண்டார் "நிலையாக இருப்பது என்று கூறுவார். திருவள்ளுவர் இதுபற்றிப் கருதுவதை நோக்கலாம்.

"நில்லாத வற்றை நிலையின என்று உணரும்
புல்லறி வாண்மை கடை"

நிலையில்லாதவைகளை நிலையானவை என்று எண்ணி மயங்குகின்ற புல்லறிவாண்மை (அன்பு அறிவு) துறந்தார்க்கு இழிவாகும் என்பது இக் குறளின் பொருள். "சத்" என்பதற்குச் செம்பொருள். என்று திரவள்ளுவர் பொருள் கொள்கிறார்.

" பிறப்பென்னும் பேதமை நீங்கிச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு"

என்னும் திருக்குறளில் செம்பொருள் என்பது நிலைத்த பொருள் எனும் வகையில் திருவள்ளுவரால் ஆளப்படுகிறது.

திருவள்ளுவர் சங்கரர் கொள்கையைப் பின்னணியாக உடையவராக இருந்தால் "நில்லாதவற்றை நிலையின என்றுணரும்" என்ற தொடருக்குப்பதில் "இல்லாதவற்றை இருப்பன என்றுணரும்" என்று எழுதியிருக்க வேண்டும். " சத்" என்று சங்கரர் கூறுவது இருப்பது என்று பொருள்பட்டால் "அசத்" என்பது இல்லாதது என்று ஆகவேண்டும் "சத்" என்று மெய்கண்டார் கூறுவது நிலையாக இருப்பது என்று பொருள்பட்டால் "அசத்து" என்பது நிலையில்லாதது என்று பொருள்படவேண்டும். இந்த பொருள்பட்டால் "அசத்து " என்பது நிலையில்லாதது என்று பொருள்படவேண்டும். இந்த பொருள்படும் படியே நிலையாமை அதிகாரத்தின் முதல் குறளை அமைத்திருப்பதால் திருவள்ளுவரின் உட்கிடை சைவ சித்தாந்தமாக இருப்பதை நாம் அறியலாம்.

<u>எண் குணத்தான் பற்றிய விளக்கம்</u>

"கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்ற குறள் தம்தம் புலன்களைக் கொள்ளுதல் இல்லாத ஐம் பொறிகள் பயனற்றன. அதுபோல எட்டுக் குணங்களை உடைய இறைவனின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயன் அற்றன என்ற பொருளைத் தரும்.

ஆதிபகவன் என்னும் பெயர் லைகின் தொழிற் பாட்டுக்கு முதல் என மேற் கொள்ளும் இடத்தில் வருதலின் அது தன் வயமுடைமை என்னும் குணத்தைக் குறிக்கும் வாலறிவான், என்பது இயற்கை உணர்வினன் ஆதல் என்பதைக் குறிக்கும். மலர் மிசை ஏகினான் என்பதுஅன்பால் நினைவாரது நெஞ்சத்தே அவர் நினைந்த உருவோடு தோன்றியருளுவதைக் குறிப்பதால் அதனால் "தூய உடம்பினன் ஆதல்" என்னும் குணம் வேண்டப்படும், வேண்டுதல்

வேண்டாமை இலான் என்பது வரம்பில் இன்ப மூடைமையைக் குறிக்கும் "இறைவன்" என்பது முற்று முணர்தல் என்பதைக் குறிக்கும். பொறிவாயில் ஐந்தவித்தான் என்பது இயல்பாகவே பாசங்களின் நீங்குதலைக் குறிக்கும். தனக்குவமையில்லாதான் என்பது முடிவில் ஆற்றல் உடைமையைக் குறிக்கும். அறவாழி அந்தணன் என்பது பேரருள் உடைமையைக் குறிக்கும்.

"கோளிற் பொறியல்" என்ற குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் எண்குணங்கள் சைவாகமத்தில் காணப்பட்டன என்று அருள்கின்றார். "எண்குணங்களாவன தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்,பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்தில் கூறப்பட்டது. அணிமாவை முதலாக உடையன எனவும், கடையிலா அறிவை முதலாக உடையன எனவும் உரைப்பாரும் உளர்" எனவிளக்கம் தருகிறார். அணிமா முதலாகச் சொல்லப்படும் எட்டும் யோக முயற்சியால் ஒருவன் பெறும் எண்பேறு (அட்டமாசித்தி) என வழங்கலே மரபு ஆகலின், அவற்றைக் குணம் என்றால் மரபு வழுவாம், இனிக் கடையிலா அறிவு,கடையிலாக் காட்சி, கடையிலாவீரியம், கடையிலாஇன்பம், நாமமின்மை, கோத்திர மின்மை,ஆயுவின்மை, அழியா இயல்பு, எனச் சைனர்கள் கூறுவர். எனினும் அவற்றுட் சிலவே குணமாக, மற்று இன்மை இன்மை என வருவனவெல்லாம் குணமாகா என்பது அளவை நூல் துணிபு,

அளவை நூல் எல்லாச் சமயத்தார்க்கும் பொதுநூல். அந்நூலோர் பொருள்களை உள்பொருள், இல்பொருள்(பாவபதார்த்தம், அபாவபதார்த்தம்) எனப் பகுத்துக்கொண்டு "குணத்தை" உள்பொருள்களின் உட்பிரிவாகவே அடக்குவர். இன்மை உள் பொருள்களின் வேறாக வைத்து வழங்குவர். ஆகவே நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை என்பவற்றையும் குணம் எனல்அளவை நூல் மரபுக்கு மாறும் என்பதை நாம் உணரலாம்.

<u>திருக்குறளின் உயிர்ப்பு மெய்யுணர்தல்</u>

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு"

என்னும் குறள் மெய்யுணர்வு இல்லாதவர்க்கு ஐம்புலன்களின் உணர்வுகளையெல்லாம் முழுமையாகப் பெற்றுள்ள போதிலும் பயன் இல்லை என்னும் பொருளைத் தரும். பௌத்த சமண சமயங்கள் பெரும்பாலும் ஐயுணர்வு முழுமையாகப் பெறுவதே வாழ்வின் நோக்கம் எனக் கருதுவதும் நோக்கத்தக்கது. சைவம் பாசநீக்கத்துடன் சிவப்பேறையும் வலியுறுத்துகிறது. அதாவது மெய்யுணர்வு பெறுதலே சிவத்தைக் காணுதற்கு இன்றியமையாப் பண்பாகும். திருஞானசம்பந்தர் உடன்பாட்டு முகத்தால்

"ஆறினார் பொய்யகத்து ஐயுணர்வு எய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித்திட்டையே "

என்றுதென்குடித் தேவரத்தில் கூறுவதை அறிந்து மகிழலாம்.

<u>திருக்குறளைச் சிறப்புறப் புரிந்து கொள்ள சைவம் உதவும் முறை.</u>

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு
இறைவனது மெய்ம்மை பொருந்திய புகழை விரும்பி

எப்போதும் அன்பு செலுத்துவாரிடத்தில் அறியாமல் வருகிற நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளும் சேர்வதில்லை. இறைவன் புகழ்தான் உண்மையில் பொருள்சேர் புகழ். இந்தப் பொருள் சேர் புகழ் புரிதலே இருள்சேர் இருவினை சேராமல் இறைவன் திருவடி சேர்வதற்கு வழி. நால்வர் முதலிய பெருமக்கள் அருளிய பன்னிரு திருமுறைகளே இறைவன் பொருள் சேர்பகழ் கூறும் நூல்களாகும். பொருள்சேர் புகழ்புரிதல் என்பது பிறவி நீங்குவதற்கு நேர்வாயில். இது பிறவி நோய் நீங்குவதற்கு மருந்துபோல ஆனால் மருந்து சாப்பிட்டால் மட்டும் போதுமா?

பழைய காலத்து மருந்துக்கும் தற்போதைய மருந்துக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு.

இந்தக் காலத்தில் மருந்து கொடுக்கும் போது உடன் பத்தியம் ஏதும் கொடுப்பதில்லை. ஆகவே எந்த நோய் தீர மருந்து சாப்பிட்டோமோ அந்த நோய் நீங்கும் ஆனால் வேறு நோய் வர வாய்ப்புண்டு. பழைய காலத்து மருந்து சாப்பிடும் போது உடன் பத்தியத்தையும் கடைப்பிடிப்பதால் உடல் முழுமையாகக் குணமடையவும், வேறுநோய் வராமலிருக்கவும் வாய்ப்பு அதிகம்.

திருமுறைகளைப் படிப்பது நோய்க்கு மருந்து சாப்பிடுவது போன்றது. உடன் பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல் மருந்து சாப்பிடுவதுடன் பத்தியத்தைக் கடைப்பிடிப்பது போன்றது. தேவார திருவாசகத்தைப் படிக்கும் போதும் இறைவன் அருளிய ஒழுக்க நெறி நிற்றலே முழுமையாகப் பலன் கிடைக்க வழியாகும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ்வார்.

ஐம்புல ஆசைகளையும் நழித்த இறைவனது மெய்யான ஒழுக்க நெறியில் நிலை பெற்றவர். பிறப்பின்றி எக்காலத்தும் வீட்டுலகில் நிலைத்து வாழ்வர். இவ்வாறு இருள்சேர் இருவினையும் “பொறிவாயில் ஐந்தவித்தான்” என்று துவங்கும் இரு பாடல்களையும் இணைத்துப் பொருள் கொள்ள

சிவஞானசித்தியாரில் அடுத்தடுத்து வரும் இரு பாடல்களும் அவற்றுக்குச் சிவஞானமுனிவர் கொடுக்கும் உரையும் துணையாக அமைகிறது.

ஒழுக்கம் அன்பு அருள் ஆகாரம் உபசாரம் உறவு சீலம்

வழுக்கு இலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்

சிவஞான சித்தியார் சுபக்கம் 113 மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல இனமலர்கையில் கொண்டு அங்கு இச் சித்த தெய்வம் போற்றி சினமுதல் அகற்றி வாழும் செயல் அறம் ஆனால் யார்க்கும் முனம் ஒரு தெய்வம் எங்கும் செயற்கும் முன்னிலையாம் அன்றோ.

சிவஞானசித்தியார் 114

மனமானது சிவபிரானை நினைக்கும் போது வாக்கு அவர் நாமங்களை மந்திரங்கள் மூலம் வழுத்தவேண்டும். அப்போது கையானது மலர்கொண்டு விரும்பிய தெய்வத்தை அர்ச்சித்து சினமுதலிய வற்றை அகற்றி வாழும் 'அறவாழ்க்கையாக வாழவேண்டும் அப்போது செயற்கு முன்னிலையாக உள்ள சிவபிரானை வந்து நம் வழிபாட்டை ஏற்றுக் கொள்வார். இதுஅங்கி வழிபாடு எனப்படும். இந்த அங்கி வழிபாடு மருந்து போன்றது மருந்து முழுமையான பயனை அளிக்க வேண்டும் எனின் ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், குற்றமில்லாத தவம், தானம், வந்தித்தல், வணங்கல்,வாய்மை, அழுக்கிலாத் துறவு, அடக்கம், அறிவு, அர்ச்சித்தல், ஆகிய பதினாறு பேறுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் . இது பத்தியம் போன்றது. அங்க வழிபாடு இரண்டும் சேர்ந்து அமையும் போதே முழுமையான பயன் நமக்கு விளைகிறது.

திருச்சிற்றம்பலம்.

# THIRUKURALIL SAIVAM

**JUSTICE C. V. WIGNESWARAN, B.A (London) L.L.B(Ceylon)**
Vinayagar Temple, Wimbledon On 18. 08.2001

"Gurur Brahma Gurur Vishnu Gurur Devo Maheshwaraha
Guru Sakshaat Para Brahma Tasmai Shree Gurave Namaha"
My dear Saiva Siblings of the United Kingdom and elsewhere
and my other brother and sisters,

The Federation of Saiva (Hindu) Temples in the U.K. has done me a signal honour in inviting me to its fourth SAIVA CONFERENCE. My specialised discipline is Law and my special function is that of being a Judge. My credentials to speak on "THIRUKURALIL SAIVAM" are suspect. My acquaintance with my religion apart from my ritualistic observances is cursory. The only qualification I have, and I stress the word only, to spnature is my general interest in both Tamil literature and the Religions of the Tamils.

I thought that was a unique way of telling me that the audience would most certainly be majority ethnic Tamils but due probably to exigencies of environment more at easa with the English Language. I am sure the interspersing of my speech with occasional quotations in Tamil would not distract you too much. Let me within the short time of half an hour available begin by introducing briefly the author of Thirukkural and his monumental work and the tenets of Saivam first. As I go along I shall refer to the connection between them.

Even though Thirukkural blossomed out in the Tamil language its contents transcend geographical divisions, language, ethnic groups, religions, caste and other parochial divisions. Its contents seem to be topical in the 21st century just as they were at the time it was composed around 2000 years ago. Just as much as Saiva Siddhanta tenets are perceivable in Thirukkural so too traces of Buddhist, Jain, Sankya, Vedantic and many other doctrines and philosophies are identifiable. Obviously the author was searching for universal rules of conduct among humans within the existing framework of social ethos rather than to portray or project his pet religious background or conditioning. But yet, it d be my contention, that the guiding light behind Thirkkural was provided by the torch of Saiva Siddhantham!

That brins me to the first observation I like to make today pertaining to the given heading That is Truth is one and sages call it by different names- Ekam Sat Viprah Bahuda Vathantinaturally the perennial relevancy of such Truth must necessarily be reflected in more than one Religion unless of course a single religion with certainty stakes a monopolistic claim to such Truth.

Fortunately the Indian based religions had for long accepted that diversity in approaches and viewpoints was possible since the ancient saints and sages, were conscious of the fact that religions were tuying to explain the Infinite with finite words and ideas coming from finite minds. The Indian religious thought had always recognised the fact that the spirit of all religions could be one at their core while intellectual explanations could differ at the periphery. They were conscious that the Eternal Reality, which is Infinite, cannot be seen where perceptions are contingent, dependent on the five senses as instruments for that vision. Thus awareness of Ultimate Reality by intuitive comprehension is shared in all pure religion whatever be their origins. Pure religion is always peaceful. unifying and integrative. But finite knowledge is not. Rituals and theology shaped by the senses rather than the spirit are "jeal-

ous, divisive and destructive" to Quote Professor C. Suryakumaran from his booklet on "Hinduism" We must therefore be conscious of the fact that we are not at this Conference dealing with pure religion but with rituals and theology peculiar to Saivam. There could therefore be a hidden agenda among us to project Thiruvalluvar as a Saivite to appease our Egos!

In examining Thirukkural and Saivam side by side we have to initially identify known tenets or doctrines in Saivam in relation to the contents of Poiyamolee - another name for Thirukkural which means " the aphorism that never belie."

Saivam as a religion appears to be peculiar to the early Tamil speaking people of South India. It is said to have been revealed by Sivam, the Supreme Got, to Nanthy long before the first and second Sangam periods which were many many centuries before Christ. It is said, though with insufficient scientific historical data, that was revealed over 12000 years ago was lost when the Lemurian Continent was submerged in the great deluge that devastated a part of the globe and gave rise to new lands. The Tamil Academies or Sangams were the custodians of the Saivite system of philosophy and the interpreter of it to the people of that era. The Thalai Sangam or the first Academy of Tamil poets is said to have existed for 4440 years in Then Madurai Agasthiyamwas their grammar. The Idai or second Sangam is said to have existed for 3700 years also in Then Madurai which was then called as Kapaadapuram or Aalavai. Agasthiyam and Tholkappiam were their grammar. During the latter part of the second Sangam period 49 Tamil Districts were submerged by the sea. This information is obtained from Irayanaar Ahapporul and the Mathurai Kaandam of Silappathikaaram Literature. The third or Kadai Sangam sat for 1850 years at Vada Mathurai or the present Mathurai Tholkappiam and Agasthiyam were their grammar, too. Irayanaar Ahapporul was commented upon and interpreted during this period by Nakeeranar. Thirukkural belongs to this third Sangsm period. The present Tamil Sangam in Mathurai is on its fourth sitting.

Though many have hitherto been of opining that Saiva Siddhantham is part of the So-called Aryan philosophy translated into Tamil and commented upon, because of the insertion of the Vedas and the Agamas by the commentators, there is a strong viewpoint that Saiva Siddhantham is autochthonous and indigenous having blossomed out among the ancient Tamils without any relationship to the Aryan philosophy. It is universality of both the Aryan philosophy and Saiva Siddhantham that had given rise to links between them. In fact the pre - Vedic civilisation of Mohenjadaro and Harappa refer to Shiva worship.

Saiva Siddhantham is mainly a theistic philosophy that revealed three principles - Pathy, Pasu and Paasam - to make the human mind comprehend the meaning of all existence so that man could make the best use of all things that are found in creation for the well- being of body and mind in order to action Mukthy or self Realization. A journey from pasu consciousness to Pathy consciousness discarding Paasam is the goal of Saiva Siddhantham.

Pathy or Master stands for God. Pasu is the individual soul in ignorance. Paasam is the bondage of Maya that ties down the individual soul. According to Saiva Siddhantham the difference between the three entities is real in existence but they are inseparably united with the Supreme Reality. Shiva or Pathy is the first cause even as the potter who fashions the pot. Shakit is the instrnmental cause in creation just as the stick or staff and the wheel are the instrumental causes to create a pot. Like clay which is the material cause for the pot. Maya or Prakriti is the material cause for the world.

Siddhantham flourished separately, distinct from the Aryan philosophies, Shiva had

already come to mean among the Tamils the Primordial Entity or Para Brahman of the Vedas. The Shiva of universal in form and Visvadika meaning transcendent or beyond the Universe. He is with from saarupa - without from - arupa. The Shivalingam signifies part manifested and part unmainfested states. He is said to be Ashtamurti, that is embodied as the five elements, the sun , the moon and man. He has eight qualities - self - existing or innocent, purity, self knowledge, omniscience, freedom from males or taints, benevolence, omnipotence and bliss. In Tamil he who has these eight qualities is called (எண்குணத்தான்) Enkunaththan.

Let us at this stage visit Thirukkural. The description of Shiva as Enkunaththan, peculiar to Saiva Siddantham, appears in the very first chapter of Thirukkural.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

- says the 9th kural, which means a head that does not worship the feet of Him who is of eight characteristics is as useless as dysfunctional sense organs.
The eight characteristics given in Parimelalagar Urai or prose commentary on Thirukkural by Parimelalagar are

| | |
|---|---|
| 1. தன் வயத்தன் ஆதல் | -Self - existing being and innocent |
| 2. இயற்கை உணர்வினன் ஆதல் | -Self knowledge |
| 3. தூய உடம்பினன் ஆதல் | -Purity |
| 4. வரம்பு இல் இன்பம் உடைமை | -Bliss |
| 5.முற்றும் உணர்தல் | - Omniscience |
| 6. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் | - Freedom from taints |
| 7. முடிவு இல் ஆற்றல் உடைமை | - Omnipotence |
| 8. பேரருள் உடைமை | - Benevolence and Grace |

Parimelalagar in his commentary states that Saiva Siddhantham does refer to Divinity in above terms.

It is significant to note that each of eight couplets in the first chapter under the heading Kadavul Vaalthu (கடவுள் வாழ்த்து) describes God in terms of these very eight qualities. Let me explain.
First kural is:-

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு.

The vowel"A" precedes all letter. So,too, God precedes all creation.
When God is said to be the primordial factor It or He or She would exist unconnected to what follows. That is self Existing. The first kural therefore refers to "தன் வயத்தன் ஆதல்" Self Existence of God.
The next kural reads:-

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழஅர் எனின்.

Of what use is all knowledge of such a person who fails to worship the feet of Him who is saturated with spiritual knowledge.
Spiritual knowledge is self knowledge which is மெய்யறிவு. the word வாலறிவன் thus connotes Self knowledge, or இயற்கை "உணர்வினன் ஆதல்" , the second quality I mentioned earlier.

The third kural reads thus: –

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

*Those who worship Him who is resident in the sanctum sanctorum of each being's heart, lives for ever in celestial surroundings.*

**மலர்மிசை ஏகினான்** is the description of God in this couplet. It is His capacity to reside in the pure hearts of beings in the manner such beings desire (**உள்ளக் கமலங்களில் அவரவர்** வேண்டும் வடிவில் உள் உறைபவன்). That which a pure heart could reflect would naturally be the purity of the reflected object. Thus the third quality above said: "**தூய உடம்பினன் ஆதல்**" or Purity is connoted in this stanza.

The fourth couplet reads: –

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

*Those who worship Him who has no preferences will suffer not ever.*

When God is referred to as one who has no preferences it means He is in perpetual bliss and joy. The fourth quality I mentioned earlier was "வரம்பு இல் இன்பம் உடைமை" which means eternal bliss.

The fifth stanza reads: –

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

That means that *karmic bondage would not bind those who sincerely care for the Divinity.* The word used for God is **இறைவன்**.

The 10th stanza, too, uses the same word **இறைவன்**: –

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

*The cycle of births and deaths could be avoided by those who worship at the feet of Divinity. Not by those who don't so worship.*

Both stanzas use the word Iraivan (**இறைவன்**) for Divinity which means omniscience. That happens to be the fifth quality which is "முற்றும் உணர்தல்". So stanzas 5 and 10 refer to the fifth quality abovementioned.

The sixth stanza reads : –

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

*Those who abide by the disciplined life expected by Him who is free from sensual desires, live for ever.*

Here "free from taints" is referred to by the phrase பொறிவாயில் ஐந்தவித்தான், which means one who has discarded the desires deriving from the five senses. This quality is what was referred to earlier sixthly as "இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்".

The seventh kural reads: –

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

*Except for those who worship the feet of the Incomparable, others cannot free themselves from mental worries*

The Incomparable here could be identified as all powerful or omnipotent, which is referred above seventhly as "முடிவு இல் ஆற்றல் உடைமை"

Finally the eighth kural : –

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

*Except for those who submit at the feet of the Righteous One, others cannot swim safely across the ocean of mundane suffering.*
The Righteous One here refers to God's benevolence and grace which is the eighth quality above mentioned viz. பேரருள் உடைமை.

Thus we see that while stanza 9 of the first chapter of Thirukural refers to எண்குணத்தான் - a Saiva Siddhantic concept, the other nine stanzas describe God Almighty in accordance with each of the eight characteristics or qualities attributed by Saiva Siddantha through the word எண்குணத்தான். Of course the term Iraivan (இறைவன்) is used in two stanzas.

This brings me to the second submission I wish to make regarding the given heading. Whether Thiruvalluvar strived to produce a universal document devoid of religiously partisan references or not, since the religion of the majority of Tamils at the time Thirukural was composed happened to be Saiva Siddhantham, it was natural that Saiva Siddhanthic theological concepts had to make inroads into the monumental work wittingly or unwittingly, consciously or unconsciously. Then contemporary literatures such as Paththupattu (பத்துப்பாட்டு) and Ettuththokai (எட்டுத்தொகை) and the previous grammarian production Tholkappiam had referred openly to Saiva Gods, Saiva rituals, Saiva puranic stories and Saiva theological concepts. Therefore we may deduce that Saivam provided the base for the production of Thirukkural. The other religions like Jainism and Buddhism had just come into vogue at the time of Valluvar. There is no reason to believe that Valluvar wanted to deviate from the traditional Tamilian views to project the theological concepts of newly introduced philosophies. If he had attempted such an exercise, his work may not have found acceptance among the Tamil Pundits. If there was any opposition initially, it was due to sociological reasons rather than due to the contents of the production.

We also find that Thirukkural taken as a whole does not contain theological concepts directly or diametrically opposed to Saiva Siddhanthic thought. Sometimes interpretations by non-Saivites are given in such a way as to point out such contradiction between Thirukural and Saivite tenets. But these contraditions can be resolved in favour of Saiva Siddhantham.
For example under the heading "Thavam" the 268th stanza appears as follows: –

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்.

The Vedantists give the following interpretation to this stanza – *All beings worship Him who is aware that He is Brahman.*

The argument is that the Vedic words "Aham Brahmasmi" is alluded to by this stanza when it refers to தன்னுயிர் தான்அறப் பெற்றானை. He who realises his Satchithananda state is referred to by this phrase – according to the Vedantists. But Parimelalagar does not think so. He states that it means one who has control over himself because of his austerity or Thavam. It is simpler to interpret "தன்னுயிர் தான்அறப் பெற்றானை" as one who discards his Ego (தான் அற) and therefore controls his life by virtue of his austerity rather than to give a circuitous interpretation not directly alluded to in the stanza.

Thus we see that interpretations are galore from different standpoints. But so long as such interpretations are not given out of context and with ulterior motives like in recent times by atheists and non-religionists who make ad hoc contextually contradictory interpretations, such interpretations should be welcomed. But if we are to attempt to delve deep into the mind of Thiruvalluvar to find out the meaning he ascribed to his work, then we must take into consideration the caption given by him to a particular unit of ten stanzas, the meaning of stanzas preceding and succeding and the general lay-out of the entire work in its historical perspective with reference to the social and religious ethos of his times. Mere reference for example to Vedantic concepts in Thirukural by interested interpreters need not necesssarily make Valluvar a Vedantin. In fact Auvaiyar, the famous poetess said : –

"தேவர் குறளும் திரு நான் மறைமுடிவும் மூவர்
தமிழும் . . . . . . . . . . ஒரு வாசகமென் றுணர்"

This meant that there was an independent development of the philosophy of the Tamils unconnected with the Vedas but their ultimate findings vis-a-vis Kural and Vedas concurred.

When Thiruvalluvar referred to: –

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

which means *hold steadfastly to the feet of Him, who has no attachments, to destroy desires* – what it meant was that Thiruvalluvar recognised the Saiva Siddanthic tenet of the threefold substances namely Pathy, Pasu and Paasam. Pasu wàs expected to hold on to the feet of Pathy to release itself from Paasam or the mundane world. This kural confirms the Saivite leaning that Valluvar had and does not in any manner advocate positively the Vedantist viewpoint.

Even the word 'Kadavul' in the heading to the first chapter (Kadavul Vaalthu) savours of Saivite connotation. Kada + ul = Kadavul. One who transce-ds (the minds of beings) and exist is Kadavul. Thus Kadavul refers to Pathy in Saiva Siddhantham. One who transcends the hearts of Pasus is Pathy.

A study of Thirukural confirms the following as some of the perceptions and premises poet Thiruvalluvar had in mind when composing his masterpiece –

(1) Righteousness (Aram), Wealth (Porul) and Felicity (Inbam) are the saving graces of mankind.
(2) Unless Wealth and Felicity too are sought from a righteous background such Wealth and Felicity would not last nor be assured.
(3) Righteous behaviour must be coupled with a devout religious frame of mind and God-fearingness. Otherwise results would not be conducive.
(4) Even righteous behaviour should be a process of conforming to the higher will and pattern of God.
(5) The righteous behaviour of one birth is carried over to subsequent births with the life spirit, to give benevolent results.
(6) It is God's wish and grace that allows such beneficial consequences to take place.
(7) It is the acceptance that righteous behaviour flows from the source of God that later matures into a search for that God-source, grants enlightenment and ultimately moksha or freedom from bondage or Self-knowledge.
(8) Thus God is the source of righteous behaviour as well as the purpose and goal of a life of righteousness.

Thus அறம் or Righteousness forms the core of Valluvar's Kural. And what is Aram?

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

*Not to be tainted in mind is Aram. Everything else is mere outward show.*

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

*Actions performed devoid of jealousy, desire, anger and harsh words is Aram.*

All words and action are preceded by thought. If your thoughts are untainted Valluvar says that is Aram. That is righteousness. When there is contradiction between thoughts and words, when there is contradiction between thoughts and action, such words and action are being enacted with an ulterior motive which means it is a false front or an outward show. The contradiction between thought, word and action is the crux of human suffering. The necessity to act in such contradiction comes from paasam. Paasam is the bondage of souls due to jealousy, desire and anger.

According to Saiva Siddhantham the illusive power of matter and its auxiliary forces bind the souls not from this birth but from eternity. Paasam is also infinite. It is the original restraint that keeps the souls in ignorance of the Souls' divinity thus preventing Self-Realisation. The three causes for Paasam are Aanavam, Karmam and Mayai. When these three causes join they produce impurity called Malam. Aanavam corresponds to the original sin or mula avidya. It is the same in all. It begins by the identification of the soul with anu or atom. Actually it is the identification with finite matter. Soul feels confined and limited to the body and the sense organs. It makes the Jiwatma unaware of its real glory and power. Under the influence of Aanavam the soul indulges in all manner of actions, acquires merits and demerits and becomes subject to birth and death. This is Karmam. The third mala is due to Mayai. Mayai is the material cause. It gives the soul the means and objects of enjoyment. Through spiritual disciplines and love of God the Mayai Malam and Karma Malam can be effaced. But according to Saiva Siddhantam Aanava Malam can be removed only by the grace of God. Thus when Valluvar refers to the ocean of grace of God in stanza 8 which alone could give salvation he is echoing Saiva Siddhanthic thoughts.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

*Unless we bind ourselves to the oceanic grace of God we cannot swim out of human suffering.*
For Aanavam to leave us Grace of God must envelop us. Grace of God is Love. The most sublime statement in Saivism is "Anbe Sivam" – "God is Love."

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

This stanza from Thirumanthiram which provides many of the Mahavakyas of Saivism means *Love and Shiva are not two. Only the ignorant say so. Love alone is Shiva. When that realisation dawns they remain in love of Shiva.*

Kural No.80 under the heading "அன்புடைமை" states

அன்பின் வலியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

*A living body is one that is filled with love. Otherwise such body is mere skin and bones.*

Even in relation to the accumulation of wealth at stanza 757 Valluvar states as follows:

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

*One's wealth is the guardian of the quality of generosity born of love.*

When all the Malams are removed the Jiva becomes one with Shiva. He becomes co-pervasive with Shiva and shares His Glory and Greatness. The Jiva becomes the salt dissolved in the Shiva Samudram.

Thiruvalluvar without making any pointed reference to specified Deities brought out a masterpiece wherein he refers to the steps that a human being should take in his onward journey towards Divinity. But reference to the Individual, to Divinity and to the obstacles that lie in the onward journey of the Individual are referred to by him. Such references concur with Saivite tradition.

In Kural 358 it is said as follows:

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

*When the ignorance that leads to birth after birth leaves, to see the excellence of the Ultimate Reality is true knowledge.* Ultimate Reality is God. But still a chapter on Salvation or Veedu had been left out by Thiruvalluvar. Even though Aram (Righteousness), Porul (Wealth) and Inpam (Felicity) have been referred to by Thiruvalluvar avoiding a chapter on Veedu (Liberation), yet it is to be noted that Liberation as a concept has been referred to by Thirukural mostly under the part dealing with Righteousness. But the purpose of avoiding Veedu and also avoiding references to specific Deities whether Saivite or otherwise, may be traced to two reasons-

(i) Anyone who lives righteously and earns his wealth righteously and attains worldly happiness righteously was also assured of Liberati-

(ii) Any reference to specific Deities may have affected the universality of his work and in his anxiety to reach all humans wheresoever located oblivious of any theological and doctrinaire differences, he deliberately seems to have kept the language unspecific.

The last remark happens to be the third important observation I like to make at this talk. That is that Thiruvalluvar sought to keep his work unencumbered by doctrinal partisanships.

Thus to summarise let me say that Thirukural is a universal document. Its conclusions could therefore be observable in many and varied theological backgrounds. But the historical setting, sociological context and theological framework out of which Thirukural blossomed out happens to be Saiva Siddhantic. He may have desired to keep his work non-partisan but it is my contention that even though Thirukkural seems to cater to divergent religious and ethical backgrounds, yet taking the work as a whole there is no doubt that Saivite ideas form the framework of this mighty masterpiece.

# திருமந்திரமும் திருக்குறளும்

முனைவர் இரா. செல்வக்கணபதி. எம் .ஏ. பி எட். எச்டி
மயிலாடுதுறை. தமிழ்நாடு

## ஒரே வேறுபாடு:

சமய நூல்களும் அற இலக்கியங்களுக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் இருப்பதாக நான் கருதுவதில்லை. கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அறநெறி வாழ்வை வற்புறுத்தவே செய்கின்றன. திருக்குறள் உலகங்களுக்கு எல்லாம் பொதுவான அறங்களை எடுத்துரைக்கும் நோக்கில் எழுந்தது. சைவ சமய நூல்களுக்கு வேறு வேறு நோக்கங்கள் இருந்தாலும் அவையும் அறநெறிகளை வற்புறுத்தவே செய்கின்றன. திருக்குறள் அறம் செய்க என்று வற்புறுத்துகிறது. சமய நூல்கள் இறைவன் பெயரால் அறம் செய்க என்று பேசுகின்றன. இது ஒன்றே வேறுபாடு.

## உயிர் இரக்கம்

திருமூலர் சைவ சமயத்தைப் பின் பற்றி வாழ்பவர்களுக்கு நான்கு கடமைகளாக அறிவிக்கிறார். உருவ வழிபாட்டைப் பற்றி நிற்பவர்கள், இறைவனை அவர்கள் விரும்பும் வடிவில் கண்டு, ஒரு பச்சிலையைப் பறித்து அதன் திருவடிகளில் இட்டு வழிபட அறிவுறுத்துகிறார்.

"யாவர்க்கும் ஆம் இறைவனுக்கு ஒரு பச்சிலை"

சமயம் சார்ந்த சடங்கினை இத்துடன் நிறுத்திக் கொண்டு சமயம், பற்றி வாழ்வார்க்குச் சமூகம் சார்ந்த மூன்று கடமைகளுக்குத் திருமூலர் வற்புறுத்துகின்றார்.

"யாவருக்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை"

சைவநெறி நிற்பார்க்கு முதல்கடமை சிற்றுயிர்களை செம்புதல். இதை உயிர் இரக்கம் என்று தமிழரும் ஜீவகாருண்யம் என வடஆரியரும் குறித்தனர். திருவள்ளுவரும் அருளினது வெளிப்பாடு உயிர் செம்பலில் வெளிப்படத் தோன்றும் என்கிறார்.

"அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன் நோய்போல் போற்றாக் கடை"

புலால் மறுத்தல் அதிகாரத்தில் உயிர் இரக்கக் கோட்பாடு வள்ளுவரால் பெரிதும் வற்புறுத்தப்படுகிறது. திருமூலரும் திருவள்ளுவரும் வற்புறுத்தும் உயிர் இரக்கக் கோட்பாட்டுக்குப் பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ள மனு நீதிச் சோழன் வரலாறு நடைமுறைச் சித்திரமாக நம் நெஞ்சில் வருகிறது.

## மனித நேயம்:

திருமூலர் சைவர்களுக்கு விதிக்கும் இரண்டாவது கடமை மனிதநேயம். சகமனிதன் பசித்திருக்கும் போது, உன் உணவில் ஒரு பிடியை அவனுக்கு அளித்துவிட்டு உண் என்கிறார்.

"யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி"

என்பது அந்தத் திருமந்திரத் தொடர் சைவம் வெறும் சடங்குச் சமயம் அன்று. மனித நேயத்தை மையமாகக் கொண்டது என்பதை இவ்வடி பறைசாற்றி நிற்கிறது. வள்ளுவரும் ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் என்றும்

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

என்றும் மனித நேயம் பேசுகின்றார். உண்ணாத இறைவனுக்குப் படையலிட்டு நைவேத்தியம் செய்யும் சைவமரபு "பசித்தோர் முகம்பார்த்து"உதவும் அடிப்படை நோக்கம் கொண்டது. பெரியபுராணம் விரித்துரைக்கும் இறையான்குடி மாறநாயனார் வரலாறு மேற்குறித்த மனிதநேயத்தை விளக்கி நிற்கும் நடைமுறை வாழ்வியல் சித்திரமாகத் திகழ்கிறது. பசிதீர்த்தல் என்பது சைவத்தைப் பற்றி நிற்பவர்க்கு மட்டும் தாகம் என்று ஏளனம் பேசுவார்க்கு பதில் தருவார் போலத் திருமூலர்.

"ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்
பார்த்து இருந்து உண்மின் பழம் பொருள் போற்றன்மின்"

என்ற பாடல்வரிசையால் தெளிவுறுத்துகிறார். நேரவந்தவராயினும் அவர் பசி தீர்த்த அடியார் திறம் சேக்கிழாரிலும் காணப்படுகிறது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

மனிதப்பண்பாடு:

சைவம் மனித நேயத்தையும் கடந்த மனிதப்பண்பாட்டையும் வற்புறுத்தத் தவறவில்லை. சக மனிதர்களை வெறுத்து ஒதுக்காது, அன்பு செய்து ஈரம் கலந்த இன்மொழி பேசுமாறு திருமூலர் சைவர்களை நெறிப்படுத்துகிறார்.

"யாவருக்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தாமே

என்பது, இக்கருத்தமைந்த அழகிய அடி.


வள்ளுவரும்.

முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தான் ஆம்
இன் சொலினதே அறம்.

என்று விளக்கம் தருகிறார். இன் சொல் இனிய மனத்தில் இருந்தே தோன்ற முடியும். அதன் பின் விளைவு இனியன செய்தலாகவே அமைதல் கூடும்.

மூலவர் அவரே

திருமூலரையும் வள்ளுவரையும் ஒப்பிட்டு ஒழுமை கண்டுகாட்ட நூற்றுக்கும் மேலான இடங்கள் உள்ளன. சைவம் சடங்குகளால் பதிந்து நிற்பது போல் தோன்றினாலும், அது உயிர் இரக்கம் மனிதநேயம் மனிதப் பண்பாடு ஆகியவற்றைக் கற்பிக்கும் ஒரு பெருநெறி என்பதை மேற் குறித்த திருமூலர் பாடல் நன்கு விளக்கி நிற்கக் காண்கிறோம். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று பிரகடனப்படுத்தியவர் திருமூலர். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவர் திருநெறியோடு சைவம் கைகோர்த்து நிற்றலை நம்மால் அறிய முடிகிறது. வள்ளுவரை எந்த ஒரு சமயத்தாரையும் விட, எம் சைவத்தோடு ஒத்த அறம் உரைத்தவர் என்பதை நிலைநாட்ட நம்மிடம் சான்றுகள் ஏராளம் உள்ளன. நடுநிலை தவறாது சிந்திப்பவர்களுக்கு வள்ளுவர் தமிழர் போற்றி வாழும் முழு நெறியதன் மூலவரும் முதல்வரும் அவரே என்பது புலப்படவே செய்யும்.




**மூன்றாவது சைவ மகாநாட்டின் போது மாணவிகள் நடனமிடும் காட்சி**

# Thiruketheeswaram - Then and Now



Mr S.Namasivayam

Compiled by Mr S.Sivanayagam
With contribution from Mr.R.Namasivayam
President of Thirukketheeswaram Restoration Society - Colombo

Antiquity, Sanctity, Tradition, have all combined to give Thiruketheeswaram a prominent position in Saivaite worship. Founded in the ancient port city of manthai (now a part of Mannar District), preceding the introduction of Buddhism into the island during the 3rd century B.C, This abode of Lord Siva in the form of Sivalingam has undergone over the centuries cataclysmic changes and destruction, but its sanctity remains indestructible. That is not surprising, because Saivaism, as Dr.G.U.Pope said:- "is the old prehistoric religion of South India existing from pre- Aryan times and holds sway over hearts of the Tamil people" Sri John Marshall, the famous archeologist and scholar says :- Among the many revelations that Mohenjo - Daro and Harappa had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivaism has a history going back to the calcolihic or perhaps even further and that it takes its place as the most ancient living faith in the world." (Mohenjo - daro and the Indus Civilisation, Vol.1). So firmly rooted in antiquity is this "sthalam" that despite periodic destruction by invaders, it has , like the mythical bird phoenix, risen from the ashes to live again in the hearts and minds of the Saiva devotees.

The Ramayanam, although not a historical work in the modern sense, has within its mythological appearance an inner kernel of historical facts as well, as is seen by the names of various places in the island that continue to be linked with the Ramayana story. What is most pertinent to us is that while the Ramayanam narrates events believed to taken place twenty centuries before the Christian era, and despite the unfavourable light in which Ravana, the king of Lanka is portrayed as a"Raksha" holds that he was a staunch siva baktha. That could be put down to the Vaishnavite tradition prevalent in India at the time the Ramayanam was written which held Rama as the incarnation of Lord Vishnu.

The Mahavamsa which the Sinhalese hold as recorded history says that Prince Vijaya who was banished from India ruled over Lanka from 483 B.C to 445 B.C. Dr. Paul E. Pieris, the eminent Sinhalese scholar writing in the journal of the Royal Asiatic Society (Vol. XXVI, No. 70, 1917) says:-

**"Long before the arrival of Vijaya there was in Lanka five recognised Iswarams of Siva which claimed and received adoration of all India. These were Thirukketheeswaram near Mahatittha, Muneswaram dominating Salawatte and the pearl fishery, Thondeswaram near Manthota, Thirukkoneswaram near the great Bay of Kottiyar and Naguleswaram near Kankesanthurai".**

That Thiruketheeswaram received adoration of all India can best be seen from the fact Saiva saints Thiru Gnanasambandar and Sundarar have all sung in praise of this pre- historic Iswaram. During the period of the Pallava, Chola and Pandyan empires, Saivaism flourised, and along with it the Iswarams dedicated to Lord Siva. Mathottam, which was a flourishing sea port city with its bustling international commerce began to lose its importance due to various reasons, chief of them being its exposure to invasions and military activities during the middle ages. Situated as it was in the heart of the city, Thiruketheeswaram paid the price of war, then , as now.

Says Professor S. Pathmanathan:-
"There is a wide gap in the history of the temple of Thirukketheesvaram since the 11th century. The epigraphic records of the subsequent period have not survived on account of the fact that the temples of Mathottam have been systematically destroyed by the Portuguese in the 16th century. The site where the temple had existed previously had the appearance of a desolate mound until the end of the 19th century when the resurgent Hindu community developed a passionate interest in Thirukketheesvaram as a result of the inspiration provided by Arumuga Naavalar. the champion reformer of the Hindus". (Temples of Siva in Sri Lanka, Chief Editor, Professor S. Pathmanathan, Chinmaya Mission of Sri Lanka, 1999)

The resuscitation of the temple which began with early efforts made by the Saiva Paripalana Sabai, founded in 1888, did continue due to the sacrifice and labour of several leading Hindus, one of whom was S.T.M. Pasupathy Chettiyar. The year 1910 saw the erection of an unpretentious, but proper temple structure. In 1948, a Society was instituted for the purpose of restoring the temple under the presidentship of the Saivaite scholar S. Sivapathasundaram, succeeded in turn by K. Kanagaretnam M.P., Magnificent progress was made on the reconstruction of the temple, and on 28th January, 1949, the sacred Palavi Theertham began to function. The 5- tiered Raja Gopuram was completed in 1968, and so did Thiruketheeswaram re - emerge into its past glory with the all important. The festival on the 17th May, 1981, through the persevering efforts of R. Namasivayam, who assumed the Secretaryship of the Temple Restoration Society in 1974. The resuscitation of the temple owes a great deal to men like Sir Kanthiah Vaithianathan, S. Arumugam, S. Sivasubramaniam, S. Saravanamuthu, S.Somasundaram and others. But alas, the labours of love of so many men, the millions of rupees poured into the reconstruction by benefactors, both in the country and overseas, the hard toil, the many acts of piety, have all come to nought. The foreign invaders were not the last to damage and desecrate the holy precincts.

In a recent letter to the Minister of Reconstruction and Rehabilitation for North and North East Tamil Affairs, Mr. R. Namasivayam, now the President of the Restoration Society, Says:-
"We visited the temple along with Brigadier Jayaratne and Col. Parakrama Siriwardene, Ministry Secretary, Mrs Yogendra Duraisamy, and Mr.S. Maha Ganapathypillai, Public Relations Secretary for the first time personally to assess for ourselves the colossal damage to the Temple by the occupation army since 1990. The main Temple structure viewed from outside appears to be intact, but once inside every door was found to have been forced open and all articles of value ransacked. The whole place was desecrated. Even the Moolasthanam was not spared. It was found to be forced open and tampered,"

Mr. Namasivayam lists the various buliding outside the temple that are either completely razed to the ground or irreparably damaged. Giving a detailed schedule, he estimates the total loss (excluding the loss to various pilgrim rests ) at Rs. 91,677,850 /-



# திருமுறையில் புராணங்கள்

**தமிழருவி த. சிவகுமாரன்** B.A (Hons)
அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்
ஆசிரியர், வவுனியா தமிழ்த் தேசியகல்லூரி, இலங்கை.

சைவத் தமிழர்களாகிய நாம் கொடுத்து வைத்தவர்கள், ஏனெனில் எண்ணற்ற சமய இலக்கியங்களை எம் தமிழ் மொழியில் கொண்டுள்ளோம். பக்தியை வெளிப்படுத்தச் சிறந்த மொழி என்று பல்லோராலும் போற்றப்படும் தமிழ் மொழியில் பக்தி யுணர்வையே தம்மகத்தே கொண்ட இலக்கியங்களும் தோன்றினால் கேட்கவா வேண்டும்?

இலக்கியங்கள் என்பதற்கு சொல்லப்படும் வரைவிலக்கணம் காலத்துக் காலம் மாறுபட்டே வந்திருக்கின்றன, ஆயினும் பொதுவான அடிப்படைக் கருத்து ஒன்று மாறுபடாது, அது எதுவெனில் "ஓர் இலக்கினை நோக்கி இயம்புவது" என்பதாகும். தங்களைக் கற்பவர்களை உயர்ந்த குறிக்கோளுடன் இயங்க வைப்பன இலக்கியங்கள் என்று குறிப்பிடலாம். அந்த வகையில் வேதங்கள் முதல் இன்று வரையில் பல சமய இலக்கியங்கள் தோன்றி வளர்ந்திருக்கின்றன.

வேதங்களை அடுத்து எழுந்த இலலக்கியங்கள் என்ற வகையில் புராணங்களைக் குறிப்பிடலாம். புராணங்கள் வேதக்கருத்துக்களை அழகிய சம்பவங்கள், கதைகள் என்பவற்றினூடாக விரித்து விளக்கி பண்டிதன் முதல் பாமரன் வரை எல்லோர் மனதிலும் பதிய வைத்தன. குழந்தைகளுக்கு கதை சொல்வது போல நயமாகவும் பயமாகவம் பக்தியுணர்வை, கிரியைச் சிறப்பை, தத்துவப் பெருமையை எடுத்துக் கூறின.குழந்தையின் மன நிலையை ஒத்த மனநிலையில் ஒரு காலத்தில் இருந்த மனிதனை நெறிப்படுவதற்கு இந்த தத்துவக் கதைகள் பெரும் பயன் செய்து அவனை வழிப்படுத்தின.

புராணங்கள், இனிப்புப் பூசப்பட்ட மருந்து குளிகைகளைப் போன்றன. எவ்வாறெனில், வயிற்றில் நோய் உள்ள குழந்தை மருந்தை உண்டால் தான் நோய் மாறும், ஆனால் நன்மை செய்யும் மருந்தோ கசப்பு சுவையுடையது. எனவே குழந்தையின் வயிற்றில் மருந்தினைச் செலுத்துவதற்கு மருத்துவர் என்ன செய்வார். மருந்தினை உள்ளே வைத்து வெளியே இனிப்பினைப் பூசி அதற்கு மேலே விதம் விதம்மான வர்ணங்களைப் பூசி குழந்தையிம் தர, அது இனிப்பாலும் நிறத்தாலும் கவரப்பட்டு குளிகையை விழுங்குகிறது. "கசப்பும் புளிப்பும்" கண்டம் மட்டுமல்லவா? தொண்டையை தாண்டி வயிற்றினுள் சென்றவுடன் இனிப்புக் கரைந்து போக மருந்து வேலை செய்ய குழந்தையின் நோய் மாறுகிறதல்லவா? அது போன்ற புராணங்களும் தமது இலக்கியச் சுவை, கதைப் போக்கினால் தம்மைக் கற்போர் கேட்போர் காதுகளை இனிக்கச் செய்து உள் நுழைந்து அவர்களின் சித்தத்தில் புத்தியில் வேலை செய்கிறது. வேதக் கருத்துக்களைத் தாங்கிய புராணங்கள் அவ் வேத உண்மைகளை கற்போர் மனதில் பதித்து அவர்களை நெறிப்படுத்துகின்றன. இவையே புராணங்கள் செய்து வந்த பெரும் கைங்கரியமாகும்.

இன்னொரு வகையில் நோக்கினால் புராணங்கள் பூதக் கண்ணாடிகளைப் போன்றன. பரந்து கிடக்கும் சூரிய ஒளிக் கற்களை ஒன்று குவித்து பஞ்சிலே நெருப்பு பற்றச் செய்வதைப் போன்று, உலகெங்கும் பரந்து கிடந்த தத்துவ,அறக் கருத்துக்களை ஒன்று குவித்து கற்போர், கேட்போர் மனதில் ஞானத்தீயை கொழுந்து விட்டெரியச் செய்தன என்றால் மிகையில்லை.

இத்தகைய புராணங்கள் வடமொழியில் எழுந்திருப்பினும் அவற்றின் சிறப்புக் கருதி அவை அனைத்துமே தமிழ் மொழியில் செய்யுளாக உரைநடையாக ஆக்கப் பெற்று பயன் பல அளித்து வருகின்றன. தமிழ் மொழியிலும் தனிப்புராணங்கள், தோன்றி தன்னேதிரிலாத் தமிழை வளப்படுத்தின.

வடமொழியில் தோன்றிய புராணங்களில் மகா புராணங்கள் பதினெட்டு,சிவபுராணம் பத்து, விஷ்ணு புராணம் நான்கு, பிரம புராணம் இரண்டு, அக்கினி புராணம் ஒன்று, சூரிய புராணம் ஒன்று. இவை தவிர சப்புராணங்கள் பதினெட்டு வேறு எழுந்தன. மகா புராணங்கள் தெய்வீகங்களின் பெயர் கொண்டு விளங்க உபபுராணங்கள் ஆக்கிய முனிவர்களின் பெயர் கொண்டு விளங்கலாயின.

இத்தகைய புராணங்களின் பேசப்படுவன யாவை என நோக்கின் ஐந்து இலட்சணங்களை அவை கொண்டு விளங்குகின்றன. உலகங்களின் தோற்றம்,ஒடுக்கம், முனிவர்களின் வம்சம், அரசர்களின் சரிதம், மனுக்களின் தோற்றம் என்பவற்றை புராணங்கள் கூறும். அவற்றைக் கூறினாலும் அதன் உள்கிடையாக, அடிப்படையாக விளங்குவது இறைவனின் பெருமைகள், அவனை அடையும் வழி, தவம், தானம் கிரியைச் சிறப்புக்கள் என்பனவற்றை விளக்கும் சமய இலக்கியங்களாக மிளிர்கின்றன. இதில் சிவபுராணங்கள் பத்தும் முதன்மையும் பெருமையும் வாய்ந்தவை எனலாம்.

சைவத் தமிழர்களுக்கு கிடைத்த தலையாய பொக்கிசங்கள் பன்னிரு திருமுறைகளாகும். இவை நாயன்மார்களான அடியார்களால், அருளப்பட்டவை. எனினும் ஆண்டவனே அவர்களின் மனதிலும், நாவிலும், நின்று பாடியருளினான் என்பது தான் உண்மை. உலக மக்கள் பயன் பெற்று உய்யும் வண்ணமாக, அவர்கள் மீது எல்லையற்ற கருணை பூண்ட ஆண்டவனே இறங்கி வந்து அடியார்கள் வடிவில் நின்று தன்னை அடையும்

மார்க்கத்தை மக்களுக்கு உணர்த்திச் சென்றான் என்று கொள்ளுதலே பொருத்தமானதாகும். அவ்வாறு கிடைக்கப் பெற்ற திருமுறைகள் அவற்றில் சொல்லப்படும் விடயங்கள் என்பவற்றை நுணுகி நோக்கினால் சில அடிப்படைகளை காண முடியும்.

ஒரு தேவாரத்தை எடுத்துக் கொண்டால் அதில் மூன்று விடயங்கள் பொதுவாக காணப்படும்.

1. இறைவன் பெருமை- புராணத்தில் சொல்லப்பட்டவை.
2. பாடல் எழுந்த தலத்தின் பெருமை
3. அத் தலத்தினை வழிபட்டால் வரும் நன்மை.

உதாரணத்திற்கு திருக்கேதீஸ்வரப் பதிகத்தில் ஒரு பாடல்

"விருது குன்றமா மேருவில்
நாண் அரவாய்ப்
பொருது மூவெயில் செற்றவன்
பற்றி நின்று உறைபதி எந்நாளும்
கருது கின்றவூர்க் கனை கடல் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரம் கைதொழக்
கடுவினை அடையாவே,

இத் திருப்பாடலில் முதல் நான்கு அடிகளும் இறைவன் திரிபுரங்களைத் தகனம் செய்த சிறப்பும் அதற்காக அவன் மேருமலையை வில்லாக, வாசுகிப் பாம்பினை நாணாகவும், நெருப்பினை அம்பாகவும் கொண்ட செய்தியும் சொல்லப்படுகிறது. இது சிவபுராணத்தில் வரும் சிறந்த நிகழ்ச்சி.

அடுத்த இரண்டு அடிகளின் கூறப்படுவது கடல் சூழ்ந்த கேதீச்சரப் பெருமையும் அங்குள்ள சோலைகளின் அழகும் கூறப்படுகின்றது.

கடைசி இரண்டு அடிகளிலும் அந்த கேதீச்சரத்தை வழிபட்டால் என்ன நன்மை என்பதும் குறிப்பிடப்படுகிறது. கடு வினை அடையாத தன்மையை கேதீச்சரம் தரும் என்கிறது.இவை ஒரு திரு முறைப் பாடலின் பொது இயல்பு. தலம் சுட்டிப்பாடாத பாடல்களில் தலச்சிறப்பு மட்டும் இருக்காது என்பதும் நோக்கத்தக்கது.

இவ்வாறு புராணக்கருத்துக்கள் நிறைந்தே திருமுறைகள் காணப்படுகின்றன. ஏனெனில் எமது திருமுறைகளைப் பாடிய சைவச் சான்றோர்களும் தமது பக்தியை எடுத்துக் சொல்லவும், மக்களை சைவ நெறியில் திளைத்து நிற்கச் செய்யவும் புராணச் சிறப்புக்களை, இறைவன் அற்புதங்களை அமைத்து பாடுவதை ஒரு சிறந்த வழியாக உத்தியாகவே கொண்டிருந்தனர் எனலாம்.

எமது ஆலயங்களின் இறைவன் திருவுருவங்களை அமைத்து வழிபடுகின்றோம். பூசைகள், கிரியைகளை இயற்றி உணர்வோடு வழிபடுகின்றோம். ஆனால் எத்தனை பேர் பொருளுணர்ந்து தத்துவம் தெரிந்து வழிபடுகின்றோம் என்றால் சொற்பப் பேர்களே எனலாம். ஏனெனில் புராணங்கள் கூறப்படுகின்ற தத்துவங்கள், திருக்கதைகளுக்கு ஏற்பவே திருக் கோவில்களில் விக்கிரங்களும் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபடப்படுகின்றன. இதனையே திருமுறைகளும் சிலாகித்துப் பேசிச் சிறப்புச் செய்கின்றன.

ஒரு கருத்தை இங்கு வலியுறுத்திக் கூறலாம். திருமுறைகளில் பலவற்றை நாம் தெளிவாக விளங்கி உணர்ந்து கொள்ள வேண்டு மெனில் புராண அறிவு அவசியமானதாகும். தமிழ் அறிவு இலக்கண அறிவு இருந்தால் மட்டும் போதாது என்பதையே யாகும். உதாரணமாக சம்பந்தப்பெருமானது, திருவலிவலத் திருப்பதிகத்தில் ஒரு பாடல் , தாய்மார் தங்கள் குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே மனனஞ் செய்விக்கும் பாடல் இதுதான்.

பிடியதன் உரு உமை கொளமிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதி வர அருளின்ன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

இத் தேவாரத்தை விளக்கி கொள்வதானால் சிவனின் அருட் செயலைத் தெரிந்து கொள்ள வேண்டும், சிவபுராணம் பத்தினுன் ஒன்றாகிய கந்த புராணத்தில், தட்ச காண்டத்தில், ததீசி உத்திரப் படலத்தில் தட்சனுக்கு ததீசி முனிவர் கூறும் விடையை தெரிந்து கொள்ள வேண்டும்.

"பிடியாகிய பெண்யானையின் வடிவத்தை உமை எடுத்துக் கொள்ள கரியாகிய ஆண்யானையின் வடிவத்தை சிவன் எடுத்துக் கொள்ள சூக்குமான சிவ - சக்தி இணைவில் கணபதி தோன்றியருளினர். கஜமுகாசுர சங்காரம் இடம்பெற்றது. தன்னை வழிபட்டவர்களின் இடர்களைய சிவன் செய்த சிறப்பு இது." என்பதே அது

இப் புராணத் திருக்கதையை அறிந்திருந்தால் மட்டுமே மேற்படி திருமுறைப் பாடலுக்கு பொருள் உணர, மற்றவர்களுக்கு விளக்க பொருள் கேட்கும் பிள்ளைகளுக்கு விளக்கஞ் சொல்ல முடியும், இல்லையெனில் வெறுவாய் அவல் சப்பிய கதைதான்.

எனவே தான் திருமுறைகளைச் சரியாக முறையாக விளக்கிக் கொள்ளவேண்டுமெனில் புராண அறிவு வேண்டும். எத்தனையோ சான்றுகளை நாம் இதற்காக நோக்க முடியும், விரிவஞ்சி விடுகிறேன், திருமுறைகளைப் பாடும் போது உள்ளுருக்கம் ஏற்பட்டால்தான் அப்பாடல்களால் உண்மைப் பயனைப் பெறமுடியும், அப்படிப் பெறவேண்டுமானால் அப்பதிகங்களில், திருமுறைகளில் குறிப்பிடப்படும் புராணச் சிறப்புக்களைத் தேடிப் பெற்றாவது அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்தக் கலிகாலத்திலும் திருமுறைகள் அற்புதங்களை கண்முன்னே நிகழ்த்தும் என்பது திண்ணம்.

# இறுதிச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்.

பிரிவு 1
1. அபிராமி வேணுகுமார் (து)
1 . வினூஜா பிரேமகுமார்(மு)
3. ஆதிரை ஞானசம்பந்தன் (இ)

பிரிவு 2
1. புண்யா செல்வமுருகானந்தம் (மு)
2. சாயிஷாளினி கருணானந்தன் (பி)
3. சகானா ஞானசம்பந்தன்(இ)

பிரிவு 3
1. ஹரினி விஜேந்திரா (இ)
2. நேருகா ஜெயந்திநாதன் (சி)
3. கன்யா பரமகுரு (மு)
3. மதினன் நித்தியானந்தன் (து)
3. சயன் வாகீசன்(சு)

பிரிவு4
1. ஹரிதரன் இரத்தினேஸ்வரன் (பி)
1. அபிராமி இராஜமனோகரன் (து)

பிரிவு 5
1. சிவகாமி இரைஜமனோகரன் (து)
2. மதுரினி யோகேந்திரன் (பி)

பிரிவு 6
1. இராமலிங்கப் பிரஷாத்
விஸ்வேஸ்வர சர்மா (து)

## தமிழ்ப் பேச்சு

பிரிவு 1
1. வினூயா பிரேமகுமார் (மு)
2. அபிராமி வேணுகுமார் (து)
3. ஆதிரை ஞானசம்பந்தன் (இ)

பிரிவு 2
1. புண்யா செல்வமுருகானந்தம் (மு)
1. ஆரணி வாகீசன் (சு)
3. இரம்மியா ஜெகதீசன் (து)
3. சேரன் ஆனந்தராஜா (பி)

பிரிவு 3
1. சயன் வாகீசன் (சு)
2. திலீசன் தவராஜா (சி)
3. பகீரதி குணரத்தினம் (து)

பிரிவு 4
1. நரோஷன் அமிர்தலிங்கம்(சி)
1. அபிராமி இராஜமனோகரன் (து)
3. கோபினா கணேசராஜா (இ)

பிரிவு 5
1. செந்தூரன் இராஜமனோகரன்(து)
2. சோழன் ஆனந்தராஜா (பி)
3. கிரிஷாயினி கணேசராஜா (இ)

பிரிவு 6
1. கஸ்தூரி பாலசுப்பிரமணியம் (மு)
2. மயூரன் சண்முகநாதன் (து)
3. தாட்சாயினி கணேசராஜா(இ)

## ஆங்கிலப் பேச்சு

பிரிவு 1
1. அபிராமி வேணுகுமார் (து)
2. சிவஞ்ஞா சிவநாயகம்(சி)

பிரிவு 2
1. சிவானி சிவநாயகம் (சி)
1. சகானா ஞானசம்பந்தன் (இ)
3. விதுர்சியா இரவீந்திரகுமார் (து)

பிரிவு 3
1. நீறுபசிங்கம் விஜயராஜசிங்கம் (பி)
1. மதுரா கருணலிங்கம் (து)
3. நிதர்ணா சிவராஜா (சி)

பிரிவு 4
1. லலிதா தங்கராஜா (பி)
2. தர்ஷினி குமாரநாயகம் (து)
3. கவிதன் பத்மமோகன் (இ)

உ
சிவமயம்

**18.08.2001 சனிக்கிழமை இடம்: ஸ்ரீ கணபதி ஆலயம் - விம்பிள்டன்**

# நிகழ்ச்சி நிரல

| | |
|---|---|
| 9.30 | மங்கள விளக்கேற்றல்: வைத்தியகலாநிதி திருமதி மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை |
| | கொடியேற்றம்: தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளார் (பேரூர் ஆதினம்) |
| | திருமுறை : திரு சாமி தண்டபாணி, ஓதுவார் இலண்டன் சிவன்கோவில் |
| 10.00 | வரவேற்புரை: வைத்திய கலாநிதி மகேஸ்வரன் - பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம் |
| 10.05 | தலைமையுரை : திரு.சொ. கருணலிங்கம் - பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியத் தலைவர் |
| 10.10 | ஆசியுரை :ஜெகதீஸ்வரக்குருக்கள் - ஸ்ரீ கணபதி ஆலயம் - விம்பிள்டன் |
| 10.15 | ஆசியுரை: கையிலை நாகநாத சிவம் குருக்கள் - லண்டன் ஸ்ரீ முருகன் கோவில் |
| 10.20 | ஆசியுரை: Dr. சிவ சிறி சோமஸ்கந்த குருக்கள் - அவுஸ்திரேலியா |
| 10.25 | கடந்த கால நிகழ்வுகள்: வைத்தியகலாநிதி. S. சிறீதரன் பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம் |
| 10.30 | செயளாளர் உரை: திரு வி. கணேசமூர்த்தி பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியச் செயலாளர் |
| 10.35 | ஆரம்பவுரை : தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளார் பேரூர் ஆதீனம் |
| 11.00 | பிரித்தானியாவில் சைவம்: தவத்திரு சிவநந்தி அடிகள் - மெய்கண்டார் ஆதீனம். |
| 11.20 | "ஆகமம் ஆகிநின்ற அருட்திறன் ": சிவ ஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் - இலங்கை |
| 11.40 | திருக்குறளில் சைவம்: மேன்மைமிகு நீதியரசர் திரு C.V விக்கினேஸ்வரன் - இலங்கை |
| 12.05 | பெரியபுராணம் Mr Robin Meglashan(ஆங்கிலேயர்) |
| 12.20 | சமயங்களின் ஒற்றுமைக்கு சைவத்தின் பங்களிப்பு - திரு இ. முருகானந்தன் |
| 12.30 | பெரியபுராணமும் திருக்குறளும் - பேராசிரியர் முனைவர் இரா செல்வக்கணபதி |
| **12.55** | **மாகேசுர பூசை - மதிய போசனம்** |
| 01.30 | பஞ்சாங்கமும் சைவமும் : சிவஸ்ரீ S. சிதம்பரநாதக் குருக்கள் ஆசிரியர் திருக்கணித பஞ்சாங்கம் |
| 01.50 | வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கு பரிசளிப்பு |
| 02.30 | திருக்குறளும் பெரியபுராணமும் : முனைவர் அருணை பாலறாவாயன் இலயோலா கல்லூரி சென்னை |
| 2.50 | சைவத்தின் பெருமை: பேராசிரியர் அ. சண்முகதாஸ் யாழ் பல்கலைக்கழகம் |
| 3.10 | பா மணத்த பாதம் : வைத்தியகலாநிதி. S. சிவயோகம் |
| 3.20 | திருமுறைப் பெருமை : தமிழருவி சிவகுமாரன் - இலங்கை |
| 3.40 | வாழ்வியலில் சைவம் - கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் - இலங்கை |
| **4.00** | **தேநீர் இடைவேளை** |
| 4.15 | 21ம் நூற்றாண்டில் சைவம்: செல்வன் முகிலன் பத்மமோகன் - மாணவன் |
| 4.25 | திருநீற்றின் பெருமை : செல்வி சாம்பவி ரவிராஜ் - மாணவி |
| 4.35 | சைவமும் தமிழும் : திரு ராகுலன் கந்தையா- பல்கலைக்கழக மாணவன் |
| 4.45 | இலண்டனில் சைவ சமயக் கல்வி : திரு கே. ரங்கநாதன் செயலாளர் - உயர்வாசற்குன்று முருகன் கோயில் |
| 4.55 | பரம் பொருளே கரும் பொருளா?: திரு க. இராஜமனோகரன் |
| 5.05 | திருவாசகமும் திருக்குறளும் : திரு ச ஆனந்ததியாகர் - சைவமுன்னேற்றச்சங்கம் |
| 5.20 | சைவத்தின் செழுமையும் சீமையும்: திரு சுபேன் தாமோதரம் - ஆன்மீக நிகழ்ச்சித் தயாரிப்பாளர் தீபம் தொலைக்காட்சி |
| 5.30 | பேச்சு: திரு சிவ தணிகாசலம் - ஈழபதீஸ்வர ஆலய பாடசாலை ஆசிரியர் |
| 5.40 | இளைஞர்கள் மத்தியில் மதப்பற்று - திரு சிவபாதம் கணேஷகுமார் இந்து நாகரீக ஆசிரியர் |
| 5.50 | பெரியோர்களுக்குப் பட்டமளித்துக் கௌரவித்தல் |

## மாலை நிகழ்ச்சிகள்

பண்ணிசை சாமி தண்டபாணியும் மாணவர்களும்
போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பேச்சு
நன்றியுரை : திருமதி கீதா மகேஸ்வரன் - ஸ்ரீ கணபதி ஆலயம் - விம்பிள்டன்
"திருவருட் செல்வர்" நாட்டிய நாடகம்

**இராப்போசனம்**

அறிவிப்பாளர்கள் :- பாவை ஜெயபாலன் ச. சிறீரங்கன் செ. மோகனராஜா

உ

சிவமயம்

**19.08.2001 ஞாயிற்றுக்கிழமை இடம்: கனகதுர்க்கை அம்மன் ஆலயம்**

# நிகழ்ச்சி நிரல்

9.30 மங்கள விளக்கேற்றல்: வைத்தியகலாநிதி திருமதி குணரத்தினம்

பூசை வழிபாடு கொடியேற்றம் திருமுறை ஒதுதல்

10.00 வரவேற்புரை :திரு S. சிறீரங்கன்,

தலைவர் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோவில் அறங்காவல் சபை

10.05 தலைவர் உரை: திரு. சொ. கருணலிங்கம் தலைவர்,

பிரித்தானிய திருக்கோவில்கள் ஒன்றியம்

10.10 செயலாளர் உரை : திரு.வி. கணேசமூர்த்தி,

பிரித்தானிய சைவத்திருக்கோவிலகள் ஒன்றியம்

10.15 ஆசி உரை : சிவஸ்ரீ சந்திரன் குருக்கள் க. துர்க்கை அம்மன் கோவில்

10.20 சிறப்புரை : தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளார், பேரூர் ஆதீனம்

10.40 வாழ்த்துரை: வைத்தியகலாநிதி P.அழகராசா, தலைவர் லண்டன் ஸ்ரீ முருகன் கோவில்

10.45 கவிதை: கவிஞர் எஸ் வில்வரெத்தினம்

10.50 வாழ்த்துரை திரு ச. ரவீந்திரமோகன் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் - வோல்தம்ஸ்ரோ

10.55 பேச்சு: செல்வி நிரூபி இளங்கோபன் (Holland Temple)

11.05 வெளிநாடுகளின் சமய வளர்ச்சி : கலாநிதி சிவஸ்ரீ நா . சோமஸ்கந்தக் குருக்கள்

அவுஸ்திரேலியா

11.25 பேச்சு: வைத்தியகலாநிதி .K.சிவகுமார்

11.45 இளஞரும் சைவமும் : நீதியரசர் திரு C.V. விக்கினேஸ்வரன் இலங்கை

12.05 இன்றைய சைவ நிலை : தமிழருவி சிவகுமாரன்- இலங்கை

12.25 South Africa இல் சைவம்: செல்வி இசைவாணி பிள்ளை South Africa

**12.35 மாகேசுர பூசை மதிய போசனம்**

1.30 வெற்றி பெற்ற பிள்ளைகளுக்குப் பரிசளிப்பு

2.15 சிறப்புரை: முனைவர் அருணை பாலறாவாயன் தமிழ்நாடு

2.35 சிறப்புரை: பேராசிரியர் சண்முகதாஸ் யாழ் பல்கலைக்கழகம்

2.55 சிறப்புரை: பேராசிரியர் செல்வகணபதி - தமிழ்நாடு

3.15 வாழ்த்துரை: வைத்திய கலாநிதி சோமசுந்தரராசா, வெங்கடேஸ்வர ஆலயம் - பர்மிங்ஹாம்

3.25 சிறப்புரை: - கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் - இலங்கை

**3.40 தேநீர் இடைவேளை**

4.00 மேன்மைகொள் சைவநீதி, திரு.சூ.பற்றிமாகரன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம்

4.10 வருங்காலத்தில் சைவம், திரு சு சிவச்சந்திரன்

4.20 Lord Siva - செல்வன் யொனதன் அருள்தாஸ் - மாணவன்

4.30 Future of Temples - செல்வி சாமினி பாலசுப்பிரமணியம் - மாணவி

4.50 **சமூகப்பலகணி**: "புலம் பெயர்ந்த இளம் சமுதாயமும் சைவமும் "

வைத்தியகலாநிதி. M. விநாயகமூர்த்தி - நெறிப்படுத்துபவர்

கருத்துரை வழங்குபவர்கள்: திருவாளர் R.D. இரத்தின சிங்கம்

திருவாளர் K.. சிதம்பரப்பிள்ளை திருவாளர் S. நாவரசன்

திருவாளர் S. சிறீரங்கன் திருவாளர் M. நேமிநாதன்

6.20 சிறப்புப் பேராளர்களைக் கௌரவித்தல்

## மாலை நிகழ்ச்சிகள்

இலண்டன் தமிழ் நிலைய மூத்தோர் வழங்கும் நாடகம் " பத்தினித் தெய்வம்"

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பேச்சு

நன்றியுரை

Harrow தமிழ்ப் பாடசாலை

அறிவிப்பாளர்: ஆனந்தராணி பாலேந்திரா திரு செ.மோகனராஜா

With the Best Compliment

from

# RANJIT & CO

## SOLICITORS

EMPOWERED TO ADMINISTER OATHS

SOLICITORS:N.RANJITHAKUMARAN

A.J.HADI

GROUND FLOOR
182 MITCHAM ROAD
TOOTING
LONDON SW17 9NJ
TEL:020 8767 9717
FAX: 020 8767 9684
DX: 58860 TOOTING SOUTH
E-mail:ranjit@joinnetuk.com

சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் நடாத்தும் சர்வதேச மகாநாட்டில்

## வித்துவான் க. ந. வேலன் அவர்களைக் கௌரவித்துப் பட்டமளிப்பு

வித்துவான் க. ந. வேலன் என்று இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் அறியப்படும் **கலாநிதி கதிர்காமர் நல்லதம்பி இரத்தினவேல்** அவர்கள், சிறந்த சிந்தனையாளன், ஆன்றவிந்தடங்கிய அறிவாளி, கவியுளம் கண்டு இலக்கியம் உவக்கும் கருத்தாளி, புகழ் பூத்த பேச்சாளன், இலக்கியப் பேச்சை அரசியல் அரங்கில் அறிமுகப்படுத்திய அரசியல்வாதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வித்துவான் பட்டமும்,பி. ஒ. எல் பட்டமும், அமெரிக்கப் பல்கலைக் கழகத்தின் முனைவர் (Dr) பட்டமும் பெற்ற வேலன் அவர்கள், தொழிலால் ஆசிரியனாய், மூச்சால் இலக்கியப் பித்தனாய், செயலால் அரசியல்வாதியாய், உணர்ச்சியால் ஆத்மீகனாய் உயர்ந்தவர்.


ஈழத்துப் புலமைக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு, ஈழத்தமிழ் மறப்பண்புக்கு அவர் ஓர் உதாரணம் . தனித் தமிழ் ஈழமே இலங்கையின் இனப்பிரச்சனைக்கு முறையான தீர்வு என்று மனதார நம்பும் வித்துவான் வேலன் அவர்கள் இலங்கையில் வாழ்ந்தபோது இயற்றிய **“சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞானவிளக்கு”** என்னும் நூல் தனித்தத்துவமான ஞானத்தமிழ் இலக்கியம். இது போன்ற பல நூல்களை எழுதிய இப் பெரியாருக்கு,

**சைவத்திருக் கோவில்கள் ஒன்றியம்**

**“தமிழியற் பேரறிஞன்”**

என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றது.

**நாயன்மார்களால் பாடல்கள் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரம் ஆலயம்**



# Shakthi Worship

***By Dr. Mrs. Indra. Sivayogam F .R .C .S (Eng) F.R.C.Ophth***

The concept of Good as Mother developed from time immemorial. Mother worship is a distinct philosophy in itself., so said Swami Vivekanada. Mother Goddess, Shakthi as the supreme realitiey is evident in the Rigvedic Devi Sukta.What we see as enactment of living in the universe is the interaction of Power within the Soul and power outside as it exists in nature.

Shakthi, can further be classified in to Ichcha Shakthi, Kriya Shakthi, and Gnana Shakthi. In Iayman's terms it could translate to thought, deed and realisation as applicable to the individual but divinity also can manifest these forms for example the VEL which was given to Lord Murugan by Ambikai is said to be Gnanashakthi and the consorts Deivayanai and Valli represent Ichcha Shakthi and Kriya Shakthi respectively.

In the act of creation a change is produced without change in the creator. The Sakthi goes forth in a series of emanations. Shakthi is not simply a Goddess in name but is the essence of everything divine. Adi Sankara writes in the Saundariya Lahari "When Siva is in Union with Shakthi he becomes the Lord of the universe. If not he cannot even move" She is effulgent with unsurpassed beauty, grace and kindness and is referred to as "Triguna Mayi". SHE is all pervasive

The archeological finds in Mohenjodaro & Harappa indicate the worship of Pasupathi and the Mother Goddess UMA Parvati as far back as six to seven thousand years ago. Just as a human mother appeals so much to her childran in that she is full of love and compassion and is readily accessible and abounds in kindness the Paramathman is represented in the left half as female and the right half as male Ardhanaareeswarar. Mahasakthi is worshiped in the Sukshma form - in the form of sound - Mantra, She is worshiped in the Yantra form as diagrams - the SriChakra. But to the aspiring devotee or sataka the Sthula form - human like female form of the Mother is seen and experienced like an ocean of grace.

Thus the Epic Sakthi Rahasya summarises ritual worship by the devotee by ceremonies and constant thought of the mother and elimination of ego, enables the devotee to merge with the mother - Mahasakthi

It is indicated in the Ramayana that the sage Narada advised Rama to obtain the help of Durga Devi to annihilate the evil Ravana and this took place in autumn and accounts for the Navarathri being celebrated annually in autumn. In Tamilnadu, Sri Lanka and other parts of South India the Navarathri period of nine nights is divisible into the first three nights for Goddess Durga Devi, next three nights for Lakshmi and the other three for Saraswathy. The tenth day Vijayadhasami is dedicated to Parashkthi when SHE is depicted as Parasakthi destroying evil in the form of Mahishassuran and enabling knowledge and skills to thrive and Vidhyarambam to commence for the uninitiated. The Vijayadhasami pageant is enacted in every home however humble, and business establishment by placements of tools, books, ledgers and musical instruments etc at the Holy Feet of the Goddess and adornment with banana saplings and tender coconut leaf festoons and decorative lights at the entrances all of which become a feast to the senses and causing exhilaration in the hearts of the devotees.

The constant chanting of her name and singing in Her praise being mindful of Her presence everywhere one looks, or every action one does, helps to rouse the innate embodiment of the Great Shakthi that already is in existence within one self. The satakha begins to identify by experiences that no other explanation could be found for many a happening except the Grace of Ambikai.

It behoves one to recollect the miracle that took place at Thirukadavoor. Subramania Pattar was a devotee constantly meditating on the Holy Mother Sri Abhirami Devi. Immersed constantly in the thoughts of the Goddess he even fell at the feet of any woman, being reminded

of the from of the Goddess. So much so that people misunderstood him and thought he was a crazy woman fancier. When the regional king Saraboji travelled to immerse in the sea ceremoniously, It being Amavasai day and had to pass through Thirukadavoor people there complained about Pattar. The King replied that he would not prejudge him but will on his return, check the facts himself.

Therefore on his return to Thirukadavoor he found Pattar seated in the inner forecourt of the Ambal Sannithy in total meditation. King Saraboji then bent down and whispered in Pattar's ear saying "can you tell me what phase of the moon is it today" Pattar replied in his state of meditation " It is full moon " To Pattar in his state of meditation Abhirami Ambal was surrounded by very bright light - hence the statement. The king asked again and Pattar said it was full moon without opening his eyes. The king ordered that he be punised by being suspended over a large fire and be gradually lowered into the fire if he was unable to substantiate his claim by nine p.m. Pattar began spontaneously composing one hundred verses of the Abhirami Andhadi attributing all to Ambal and when he was singing seventy sixth verse Abhirami Ambal appeared in the sky only to be seen by his eyes and took her large ear ring and threw it in the sky and this shone like the full moon in the otherwise dark sky. All the people gathered including the king were shocked to find the full moon and the king fell at the feet of Patter and asked for forgiveness and to accept him the King - as Pattar's disciple.

Similarly when the saint Sunderamoothy broke the promise he had given his wife, Paravayar by leaving the district to travel a far he lost the sight of both eyes when he crossed the boundary. From there he travelled to many a shrine dedicated to Lord Shiva and pleaded with the Lord beseeching His help in restoring his sight and at the sametime queried whether Lord Shiva was in fact consecrated in those shrines and all that he heard was a heavenly voice saying in Thamil "Ullom poheer" meaning " I do exist but you move on" It was only when he reached Kaamakshi Amman in Kanjeepuram and when he appealed to Her the sight of his left eye, corresponding to the half that belongs to her , inthe Holy Communion, was restored ! This confirms the compassion the Holy Mother has towards Her devotees

Adi Sankara inititaed the concept of Sri Vidya and her Yantric form of Sri Chakram with the Bindhu in the centre surrounded by a series of triangles representing Ambikai with the apices in upward direction and those apices representing lord Siva in the opposite direction had been sanctified and installed in several Kshetras and spiritual Peetams. In South India and Sri Lanka and parts of North India there are concentrations of Shakthi in renowned Kshetras such as Meenakshi Ambal in Madurai, Kamakshi Ambal in Kanjeepuram, Akilandeswari Ambal in Thiruvaanaikkaaval, Abhirami Ambal in Thirukadavoor, Maariamman in Samayapuram, Sivakami Ambal at Chidambaram. Apeetha Kujambika at Thiruvannamalai, Chamundeswari, Katpagambikai at Mylapore, Vadivambikai at Munneswaram, and Vasudhambika at Kalahasthi.

To enhance the concentration and recollection of the attributes of the Holy Mother, great works such as the Lalitha Sahasranamam and Soundarya Lahari, Lalitha Thrisathi in Sanskrit and Abhirami Andhadhi Saraswati Andhadhi and Lalitha Navarathna Mani maalai in Tamil are without comparison. The internal and all pervasive joy, the Paramanandham that they create within the devotee are indescribable in words. They elevate the soul to a state of Paramagunam. May we all profit from this experience and attempt to eradicate ego, hatred and jealousy and help ourselves and those around us to achieve higher spiritual planes.

Sri Vidyaam, Shiva Vaama baga Nilayaam Hreemkara Manthrojvalam

**AUM SHAKTHI**

# C.B.MOTORS

(Bala)
Arch No:45

Off Roxeth Green Avenue
South Harrow,
Middlesex HA2

**Tel: 020 8423 9984**

தமிழிலே பேசி உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்
கொள்ளலாம். ஐந்து வயதுக்குட்பட்ட சகலவிதமான யப்பானிய
மோட்டார் வாகனங்கள் விற்கவும் வாங்கவும் தகுந்த இடம் இதுவே.
அத்துடன் சகலவிதமான இயந்திரக்கோளாறுகள்,
வாகன விபத்து சரிபார்த்தல் போன்ற எந்தவிதமான
கோளாறுகளையும் தரமான
முறையில் சரிபார்க்க மிகவும் பொருத்தமான இடம் இதுவே.
MOT ஒழுங்குகள் செய்து தரப்படும்.

Buying and Selling all types of Japanese cars
(less than five years old)

Long term Car Hire Services also available for Minicap Drivers

All types of repairs for any cars
Including
Body works
Electrical works
Accident repairs
MOT arrangement etc.

A friendly garage with very reasonable rates

# அருட்செல்வம்

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

வித்து முளையாகிறது: முளை செடியாகிறது. செடி மரமாகிறது: மரம் பூக்கிறது. பூ காயாகிறது: காய் கனியாகிறது. இது போன்றதே மனித வாழ்க்கையும் வளர்ந்து கனியாகும் வரையில் பல்வேறு பொருட்களின் தொடர்பும், உறவும் தேவை. கனிந்த பிறகு எந்த ஒன்றன் தொடர்பும் கனிக்குத் தேவையில்லை. கனி நிலைக்கு முன்பு சுவையிலும் தர வேறுபாடுகள் உண்டு. கனி நிலையில் சுவை வேறுபாடில்லை. நிறை நலமிக்க சுவையுடையதாகிறது. இறைவனை, "பழத்திடைச் சுவையொப்பாய்" என்று அப்பரடிகள் பாராட்டுகிறார். "அது பழச்சுவையென" என்று மணிமொழி பேசுகிறது. திருக்குறள் கருவுயிர்த்த நாள் முதல், தனிமனிதனைத் தொடர்ந்து வளர்த்து, அவனை அன்புநெறி பயில, குடும்பத்தில் சேர்ப்பித்து அன்பு நெறியில் பயிற்றுவித்து உள்மேலதாக அருளியல் வாழ்க்கைக்கு உயர்த்துகிறது. உலகில் மனிதர்களுக்கு செல்வங்கள் பலப்பல வேண்டும். ஆயினும் அருட்செல்வமே தலையாய செல்வம்.

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள"

என்று குறள் கூறுகிறது.

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்றும் குறள் கூறுகிறதே என்ற வினா எழலாம். ஞானாசிரியன் செவிவழியாக உபதேசித்தருளிய திருமந்திரச் செல்வத்தால் அருட்செல்வம் விளைவதால், உபசார வழக்காகச் செவிச் செல்வத்தைச் சிறப்பித்தார். அன்பின் முதிர்ச்சியில் அருள் தோன்றுகிறது. "அன்பீனும் குழவி அருள்" என்று குறள் கூறுகிறது.

உடலுயிர் வாழ்க்கை இடையீடின்றி நடைபெறப் பொருள் தேவை. அதாவது, உயிர் ஊர்ந்து செல்லும் உடலாகிய எந்திரத்திற்கு எரிபொருளாகக் காருக்கு பெட்ரோல் போல், துய்க்கும் பொருள்களாகிய காய்களும், கனிகளும் தேவை. அதுபோல உயிருக்கு அருள் தேவை.

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை: பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்று குறள் கூறுகிறது. அருள் அன்பின் முதிர்ச்சியில் தோன்றுகிறது. எந்த மொழியிலும், எந்தச் சமயத்திலும் அருள் நெறியே நெறியென உணர்த்தப்படுகிறது. உலகியலில் இருள் சூழ்ந்த நிலை துன்பத்தைத் தருகிறது. இருள் நிலையில் மேடும் பள்ளமும் தெரிவதில்லை; பழுதையும் பாம்பும் தெரிவதில்லை. எங்கும் செறிந்த இருள். இந்நிலையில் ஞாயிறு.இருளை கடிந்து எழுகின்றது ஞாயிறு எழுந்தவுடன் இருள் அகலுகிறது. உயிர்களுக்கு ஆன்ற அறிவும் ஆள்வினையும் தோன்றுகின்றன. அது போலவே, அருட்சார்பு அற்றவர்கள் மனத்தில் இருட்செறிவால் நன்மையும் தீமையும் தெரிவதில்லை. அருளியலில் ஈடுபட்டவுடன் அறியாமை அகலுகிறது. மயக்கம் தெளிகிறது; தெளிவு பிறக்கிறது. தெளிவினுள் சிவம் பிறக்கிறது. அருள் தன்மையால் செடிகளையும் மரங்களையும் பேணுபவன் விலங்குகளைப் பேணுபவன் - பக்கத்தில் வாழும் மனிதர்களைப் பேணுபவன் - தன்னையும் பாதுகாத்துக் கொள்கிறான். ஆதலால், அல்லல் அவனை அணுகுவதில்லை. அவன் தன்னுயிர்க்கு அஞ்ச வேண்டியதில்லை. எல்லோருக்கும் தன்னுயிர் அருமையானதே. அதனாலன்றோ, அப்பரடிகளும் என்னினும் இனியான் என்று குறிப்பிட்டார். ஆனால், பலர் தன்னுயிரைக் காதலிப்பர். தன் உயிர்நலன் கருதிப் பிற உயிர்களுக்குக் கேடு சூழ்வர். அந்தோ, அறியாமை! உயிர் வாழ்க்கை இயல்பிலேயே தனித்ததல்ல. அஃதொரு கூட்டுவாழ்க்கை. கூட்டு வாழ்க்கையில் துன்பம் ஒருவருக்கு மட்டும் வருமாறென்ன? உயிர் வானின்றிழியும் நீர்த்துளியைப் போல்வது. நீரும் வளியும் சார்ந்த சார்பின் காரணமாக வண்ணமும், சுவையும், மணமும் பெறுதல் இயற்கை. அதுபோல, உயிரும் சார்பின் வழி, இயல்புகளைப் பெறும். உயிர் யாதொன்றையும் சாராமல் இருக்க முடியாது. ஆதலால், உயிர் தமது சார்பிற்குரியனவாகிய பிற உயிர்களையும் அருள் நலம் செறிந்தவைகளாகத் தாம் காணுந்தொறும் துய்க்குந்தொறும் துய்ப்பதற்கேற்றவாறு அருள்நலச் செறிவுடைய தாக ஆக்கிக் கொள்ள வேண்டும். வீட்டினுள் வெப்பம் தாக்காதிருக்க வீட்டிற்கு வெளியில் ஒரு தாழ்வாரம் தேவை. அப்போது வெளியில் உலவும் வெப்பக்காற்று தாழ்வாரத்தண்ணிழலில் குளிர்ந்து, வீட்டிற்குள் இருப்பவரைத் தண்ணென்ற தன்மையினால் வாழ்விக்கும். அதுபோல உயிருக்குத் தம்மொடு தொடர்புடைய பிறவுயிர்களின் அருளார்ந்த சூழலே வாழ்விக்கும்.

தெருக்கோடியிலுள்ள வீடு, தீப்பற்றி எரிந்தால் அந்நெருப்பினை மற்ற வீடுகளுக்குப் பரவாமல் அணைப்பதே எல்லோருக்கும் பாதுகாப்பு. அங்ஙனம் செய்யாமல் யாராவது ஒருவர், தன் வீட்டின் மீது தண்ணீர் அள்ளி ஊற்றுவாரானால் யாது பயன்? ஊற்றிய முயற்சியும் பாழாகி, அவனும் அவன் வீடும் அழிவது திண்ணம்,

ஆதலால், எவன் ஒருவன் தன்னுயிர்க்குத் துன்பம் வரக்கூடாதென்று கருதித் தன்னுயிரைக் காதலிக்கின்றானோ, அவன் செய்ய வேண்டியது தன்னுயிர்க் காதலல்ல; மன்னுயிர்க் காதலேயாம். செடிகொடிகளை அன்பு காட்டி வளர்த்தால், உயிர் வாழ்க்கைக்குரிய காய்களும், கனிகளும் கிடைக்கும். குடம் குடமாகப் பால் கொடுக்கும் பசுவினுக்கு அன்பு காட்டினால் உயிர் வாழ்க்கைக்குரிய பாலமுதம் கிடைக்கும். உயிர்க்கு இன்றியமையாத தேவையான இன்பக் கிளுகிளுப்பாகிய மகிழ்ச்சியை மற்ற மனிதர்களிடத்தில் காட்டும் இனிய முகத்தாலும், கூறும் இனிய சொற்களாலும் திரும்பப் பெறலாம். ஆதலால் தன்னுயிரைக் காதலிப்பவன் செய்யக்கூடிய அறிவுடைய செயல் அருள் உள்ளம் கொண்டு, பிற ஊயிர்களைப் பேணுதலேயாகும்.

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை"

என்று திருக்குறள் ஓதுகிறது.

இயல்பாகவே, உலகியல் அருள் என்ற அச்சிலே சுழன்று நடைபெறுகிறது. "ஒன்று எல்லாவற்றுக் காகவும், எல்லாம் ஒன்றுக்காகவும்" என்ற உயரிய தத்துவமே உலகியல் தத்துவம்.விண்ணின்றிழியும் நீர்த்துளி! காய்கதிர்ச் செல்வனின் கதிரொளி! தண்நிலவு! இலையால், மலரால், காயால், கனியால் வாழ்விக்கும் தாவர இனங்கள்! என்னே அருட்காட்சி! அருளின் மாட்சி! எங்கும் அருட்கூத்து! இன்பக்கூத்து! ஆனந்தக் களிப்பு! இதனை உணர்ந்தவர்கள் அருள் நாட்டம் கொள்வர். அல்லவை செய்யார்; இன்புறுத்தும் இயல்பில்லாத வர்க்குத் துன்புறுத்த உரிமை ஏது? ஆக்கும் திறனற்றோர் அழிக்கலாமோ? துன்புறுத்துபவர் துன்பத்தில் ஆட்டுபவர், நல்வினை இழப்பர், கொடுவினை மேற்கொள்வர். நெருப்பும் பற்றி எரிகின்ற உடையினால் மானத்தை மறைத்தல் முடியுமோ? நஞ்சினால் செய்த பாவை நயப்புறும் இன்பம் தருமோ? நுனி மரத்தில் ஏறி, அடி மரத்தை வெட்டுதல் வாழும் வழியோ? அதுபோல உயிர்களுக்கு; அல்லல் செய்தார் வாழுதல் அரிது என்று திருக்குறள் பேசுகிறது,

"பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்"

என்பது குறள், ஈண்டுப் பொருள் என்பது வாழ்க்கையின் பயன் என்ற பொருளில் உயர்த்துணர்வது அதிகப் பயனைத் தரும். மாணிக்கவாசகர் தமது பாட்டின் பொருள் இறைவனே என்றார். வாழ்க்கையின் பயன் இறையருள் பெறுதலேயாம். இதனை அப்பர் " வைத்த பொருள் நமக்கு ஆம்" என்று அருளிச் செய்துள்ளார். வாழ்க்கையின் குறிக்கோளும் பயனுமாகிய அருளை, அருள்வழி பெறுதலேயே "கொடுக்கும் கொடுத்தும் பெறுதல்" என்று திருமுறை கூறும். அருளை மறந்து, தீமையும் செய்து ஒழுகுதல் அந்தோ பரிதாபம்! குளிக்கப் போனவன் குளிப்பதை மறந்து ஆங்குள்ள சேற்றைப் பூசிக்கொண்டதைப் போல இருக்கிறது. அதனாலன்றோ, சங்கச் சான்றோர் "நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்" என்று அறிவுறுத்தினார். இளங்கோவடிகளும் "அல்லவை கடிமின்" என்று ஓதினார். அருள் உணர்விற் சிறந்து வாழ்வோருக்கு அல்லல் இல்லை. இதற்குச் சான்று, இந்த உலகில் ஏராளம் உண்டு. மணமிக்க மலர்களைத் தரும் செடிகளைப் பலர் விரும்பி வளர்க்கின்றனர் அன்றி அழிப்பார் யார்? இனிய காய்களைக் கனிகளைத் தரும் மரங்களை வளர்ப்பாரன்றி வெட்டியழிப்பார் யார்? ஒருவருமில்லை. அப்படியே யாரவது இருந்தாலும் உலகம் அவர்களை மானிடராக ஒத்துக்கொள்வதில்லை. அவர்களை உலகம் கீழான கயவர்கள் ஏன்று ஒதுக்குகிறது. அதுபோலவே, அருள் உணர்வு உடையவர்கள் வாழ்வார்கள், வாழ்விக்கப்பெறுவார்கள். காரணம் அவர்கள் வாழ்வில் ஞாலம் வாழ்கிறது.

" அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல் மா ஞாலம் கரி"

என்பது குறள். நினைத்தொறும் இன்பம் தரும் திருக்குறள் இது. வாழ்க்கையின் அகத்திலும் புறத்திலும் அருளாட்சி உடையோர் அல்லற்படமாட்டார்கள். அவர்களை அவலம் அடையாது; இஃது உண்மை. முக்காலும் உண்மையென்று திருவள்ளுவர் சாதிக்கின்றார். இந்த உண்மைக்குத் திரு வள்ளுவர் காட்டும் சாட்சி எது? காற்று வழங்கும் இந்தப் பெரிய உலகம் சாட்சி என்கிறார். இந்த உலகத்தில் வலிமையுடையார் வலிமையற்றோர் அனுபவத்திற்கு இடையூறாக நிலத்தை அடைத்து எடுத்துக்கொள்ளுதல் உண்டு.தண்ணீரை அணைகட்டித் தேக்கித் தடுப்பது உண்டு. கதிரொளியையும் - தண்நிலவையும் தடை செய்ய அடைத்துச் சிறைப்படுத்தல் உண்டு. பார்த்திருக்கிறோம், கேட்டிருக்கிறோம். ஆனால், காற்றை யாரும் அப்படித் தடை செய்ய முடியாது. காற்று வேலிகளுக்கும் சுவர்களுக்கும் அப்பாற்பட்டது. ஆண்டான் அடிமை வேறுபாடுகளைக் கடந்தது. எல்லோருக்கும் காற்று, எப்பொழுதும் காற்று தேடிப் பெறுவதன்று. வலிய வந்து துணை செய்கிறது. முயற்சித்து காற்றுக் குடிப்பதில்லை. இயல்பில் நிகழ்கிறது. இத்தகு காற்று வழங்கும் நிலவுலகம் சாட்சி. மனிதர்களின் கொடிய கரங்கள் இன்னமும் காற்றைத் தடைசெய்யவில்லை. களங்கப்படுத்தவுமில்லை. அதுபோல, அருளாள்வார் வாழ்வித்து வாழ்வார். மகிழ்வித்து மகிழ்வர். அருளாட்சிக்கு ஊனாட்சித் தன்மை

குறையவேண்டும். "பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீராக்கில், பொல்லாப் புலால் துருத்தி போக்கலாமே" என்பது அப்பர் வாக்கு. "ஊனினைப் பெருக்கி உள்ளொளி இழந்தேன்" என்பது ஆரூரர் வாக்கு. இதனால் ஊனுடலின் தன்மையை - பயனைக் குறைத்து மதிப்பிட்டதாகக் கருதக் கூடாது. ஊனுடம்பு உயிர் நலத்துக்கேற்றவாறு அமையவேண்டும். உடல் பெருத்தல் உயிரின் ஆற்றல் முழுவதும் ஊனுடலுக்கு இரை தேடுவதில்லையே, அதிலும் பயன்படும் ஊனுடல் பகுதிக்கு மட்டுமின்றி வெற்றுச் சதைகளுக்கு இரைதேடிப் போட்டு எய்ததுச் சாக வேண்டிய அவசியம் ஏற்படும்.உயிருக்குத் தேவையான ஊனுடல் போற்றுதற்கு, எளிய சைவ உணவு போதுமானது. எளிய சைவ - உணவு - அதாவது காய்களும், கனிகளும், ஊனுடலை வளர்க்கப் பயன்படுவதோடன்றி நல்லுணர்விற்கும் துணை செய்கிறது. கதறக் கதறக் கழுத்தை அறுத்து இரத்தம் சொட்ட இரக்கமின்றிப் புலாலைச் சுவைத்து உண்பவன் எங்ஙனம் அருளாட்சியுடையவனாக இருக்க முடியும்?என்று வினவுகிறார் திருவள்ளுவர்.

"தன்னூண் பெருக்கற்குத் தான்பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

என்பது திருவள்ளுவர் வினா.

மனிதன் சுவைத்துச் தின்ற ஊனை அதற்காக ஊனுடலினின்றும் பிரித்த உயிரைத் திருப்பித்தர முடியாது. இங்ஙனம் திருப்பித் தரமுடியாத நிலையிலுள்ள ஆற்றல் குறைந்த மனிதன் உயிர் பிரித்து ஊனைத் தின்பது பாவம். அவனை நரகம் ஏற்றுக் கொள்ளும். எப்படி இவன் தின்ற ஊனைத் திருப்பித் தரமுடியாதோ, அதுபோல நரகமும் இவனைத் திருப்பிவிடாது என்பதனை,

" உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண
அண்ணாத்தல் செய்யா தன்று"

என்பர் திருவள்ளுவர். அதாவது மீளா நரகத்தில் ஆள்வர். அதனாலன்றோ இளங்கோவடிகளும்," ஊனுண்துறமின், உயிர்க் கொலை நீங்குமின் " என்றார். சிலர் தாம் கொல்லமாட்டார்கள், கடையில் விற்கும் புலாலை வாங்கி உண்பர். இவர்கள் கருத்து கொன்றவனுக்கே பாவம், தமக்கு இல்லை என்பதாகும். பாவம், காரியம் காரணம், இரண்டையும் பற்றிப் படரும். கொலை செய்பவன் ஏன் செய்கிறான்? புலால் உண்பவரின் விருப்பத்தை அறிந்தே கொல்லுகிறான். புலால் உண்பவர் இல்லையானால், கொல்பவரும் இல்லை. இன்னும் தெளிவாகச் சொன்னால், புலால் உண்பவர்களே, புலாலுண்ணும் குற்றத்தைச் செய்வதோடன்றிப் பிறரைத் தன்னுடைய புலால் இச்சையின் மூலம் கொலைக்குற்றம் செய்யத் தூண்டுகின்றனர். கொலை செய்பவரைவிடக் கொலைக்குத் தூண்டுபவரே கொடியர் என்று திருக்குறள் வன்மையாக எடுத்துக் கூறுகிறது.

"தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்"

என்பது திருக்குறள்.

இறைவனை நினைத்து ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட ஒன்றன் உயிரைச் செகுத்து உண்ணாமை மேலாய அறம் என்று வள்ளுவம் போதிக்கின்றது.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்பது திருக்குறள்.

பிறிதோரிடத்தும் "ஒன்றாக நல்லது கொல்லாமை " என்று வலியுறுத்துகிறது. தாயுமான அடிகளும்,"கொல்லா விரதம் குவலயத்தில் ஓங்குக. என்று கூறினார். வள்ளல் இராமலிங்க அடிகள் வாடிய பயிரின் வாட்டமேல்லாம் கண்டு வாடினார். உயிர் பழக்கத்தின் வழிப்பட்டது அது சிலபொழுது துன்பத்தைப் பார்த்துப் பழகிவிட்டால் அதற்குத் துன்பத்தின் கொடுமை வழக்கமாகிவிடும். இங்ஙனம் வழக்கப்பட்டோர் சிலர் பிறர் துன்பத்திலேயே மகிழ்வதையும் வாழ்வதையும் பார்க்கிறோம்.

"ஈசனுக்குஅன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார்" என்பது திருமந்திரம். ஆதலால், உயிர்த்துன்பம் கருதி புலால் உண்ணலைத் தவிர்த்திடுக! சுவையினால் மட்டுமின்றிப் பயனாலும் சிறந்த காய்களைக் கனிகளை உண்க. காய்களும் கனிகளும் உணவின் பயனைத் தருவதோடன்றி அருளாட்சிக்கும் அரண் செய்கிறது. எல்லா உயிர்களும் ஈசன் தங்கியிருக்கும் திருவுடல் ஆதலால் அனைத்துயிர் போற்றும் தவம் மேற்கொள்க!

உயிர்களின் நலம் பேணுதலே சிறந்த வழிபாடு. அதுவே அருளின் மாட்சியும் ஆட்சியுமாகும். திருக்குறளின் அருள்நெறி போற்றுமின் ! பேணுமின்!

# வேலும் மயிலும்

தெய்வத்திரு. திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

நமது தமிழகத்திற்குச் சிறப்பாகவும், எல்லா உலகங்கட்கும் பொதுவாகவும் விளங்கும் தெய்வம் இளம்பூரணன் முருகன். அப்பரமபதி தன்னிகரில்லாத் தனிப்பெருந்தலைவன். கருணை கூர்முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டுங்கொண்டு உலகம் உய்யத் திருமேனி கொண்ட அருட்தெய்வம்.

அவர் ஏந்துவது அயில்(வேல்)
அவரை ஏந்துவது மயில்.

வேலும், மயிலும் ஆன்மாக்களாகிய நமக்கு, எப்போதும் எக்காலத்தும் அருந்துணையாக நின்று அருள்வனவாம்.

**வேல்:** இது -"வெல்" என்ற முதனிலை நீண்ட தொழிற் பெயர். எல்லாவற்றையும் வெல்லுவது வேல். எல்லாவற்றையும் வெல்ல வல்லது ஞானமேயாம். "ஞானம்" என்பதும், "அறிவு" என்பதும் ஒருபொருளைக் குறிக்குஞ் சொற்கள். ஞானம் வட சொல், அறிவு தென்சொல். எனவே, அறிவின் முழுவுருவம் வேலாயுதம். அறிவு ஆழமாகவும் அகலமாகவும், கூர்மையாகவும் திகழும். வேலின் அடிப்பகுதி ஆழமாகவும் இடைப்பகுதி அகலமாகவும், நுனிப்பகுதி கூர்மையாகவும் விளங்குவதைக் காண்க. அறிவு ஒன்றே எல்லாவற்றையும் வெல்லும். ஆகவே, ஞானம் வேல் என்று உணர்க.

" ஞான பூரண சக்தி தரித்தருள் பெருமாளே"
என்பார் அருணகிரிநாதர்"

வேல் அஞ்ஞானத்தை அகற்றும், வினையை வேரறுக்கும். "வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்" என்பது கந்தரநுபூதியின் திருவாக்கு. "வேலுண்டு வினையில்லை" என்ற ஆன்றோர் மொழியையும் உன்னுக. ஆணவ மலமாகிய சூரபன்மனையும், கன்ம மலமாகிய சிங்கமுகனையும், மாயா மலமாகிய தாரகனையும், வினைத்தொகுதியாகிய கிரவுஞ்ச மலையையும் பிறவியாகிய கடலையும் காய்ந்தது முருகன் கை வேல்.

"வாகை சுமக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை" என்றபடி, வேலை வணங்குவதையே தமக்கு வேலையாகவுடையவர்க்கு, எல்லா நலன்களும் தாமே வந்தடையும். அவர்கள்பால் நமனுடைய பாசக்கயிறு நணுகாது. பகைவரது பயம் உண்டாகாது.

"துதிக்கு மடியவர்க் கொருவர் கெடுக்கவிடர்
நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையும்"
- வேல்வகுப்பு

முருகவேளுக்கு ஆறு முகங்கள் இருப்பன போல் வேலுக்கு ஆறு முகங்கள் உண்டு. ஏனைய ஆயுதங்களின் பெயரை, மக்களுக்கு இடுகின்ற வழக்கம் இல்லை. வேற்படையின பெயரைத்தனியே, பலப்பலவாறாக இடுகின்றனர். "கதிரவேல்", "வஜ்ரவேல்", "தங்கவேல்", "சக்திவேல்", "வடிவேல்", "முத்துவேல்" "வேலாயுதம்" என்பனவாதி திருநாமங்களை உலகில் இட்டு வழங்குவதைக் காண்க. "போற்றி" சொல்ல வந்த கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள், வேலுக்கு மட்டும் இரண்டு முறை "போற்றி" என்ற அருமையையும் நோக்குக.

" திருக்கைவேல் போற்றி போற்றி"

நூறு கோடி உதயசூரியர்களது ஒளி, ஒருங்கே திரண்டது போல் விளங்கும் எம்பிரானுடைய வேலாயுதம்.

"உலாவுதய பானு சதகோடி யுருவானவொ
ளிவாகு மயில் வேலங் கையிலோனே"
- திருப்புகழ்

**மயில்** :- ஆறுமுகப் பரம்பொருளைத் தாங்கும் பேறு பெற்றது. "மயில்" . தேவரும்,மூவரும் காணாத எந்தை கந்தவேளது திருவடியை, எப்போதும் கண்டுமகிழும் அளவிறந்த தவம் புரிந்தது மயில்.

மயிலை நினைத்து வாழ்த்தி வழிபடுவார்க்கு, விஷ பயம் இராது. ஆலால விடத்தை உண்ட சிவபெருமானுடைய கண்டத்திற்கு " நீலகண்டம் " என்ற பேருண்டு. நீலகண்டம் என்பார்க்கு,விஷ பயம் உண்டாகாது. விஷஜுரம் நீங்க, திருச்செங்குன்றூரில் திருஞானசம்பந்த சுவாமிகள், "திருநீலகண்டத் திருப்பதிகம்" பாடியருளினார். மயிலுக்கும் நீலகண்டம உண்டு. "நீலக்ரீவ ரத்னக் கலாபமயிலே" என்பார் அருணகிரிநாதர். மயிலும்,கொடிய விஷப் பாம்புகளை அடக்கும் வன்மையுடையது.

மழையின்றி மாநிலம் வாழாது. உண்ண உணவாகவும், உணவு விளைய அநுகூலமாகவும், இருப்பது மழை. கைமாறு கருதாத கடப்பாடுடைய மேகம், மழை பொழியும் பொருட்டு இருண்டு, வானில் வந்தவுடன் மேகத்தை வரவேற்று, ஆயிரங் கண்களுடைய தோகையை விரித்துக் களிநடம் புரிந்து மகிழ்வது மயில், மழையினால் உலகின் புறக்கண்டு, உலக இன்பத்தைக் தனது இன்பமாக எண்ணி, அது மகிழ்கின்றது.

மயில் தோகை விரித்து ஆடுகின்ற போது, அது "ஓம்" என்ற பிரணவ சொரூபமாக விளங்குவதையும் உற்றுணர்க.

"ஆன தனிமந்த்ர ரூப நிலைகொண்ட
தாடு மயிலென்ப தறியேனே." - திருப்புகழ்.

"மயிலுண்டு பயமில்லை " என்ற பழைய உரையையும், உய்த்துணர்க. மயிலுனுடைய பார்வை படுகின்ற இடம் நன்மையடையும். "தூங்க அநுகூல பார்வை தீர செம்பொன் மயில்" என்பார் அருணகிரிநாதர்.

உமையம்மையார் மயிலுருக்கொண்டு சிவபெருமானை வழிபட்டார் எனின், மயிலின் பெருமையை யாரே அளவிட வல்லார்?

மயிலுனுடைய பெருமையை நன்குணர்ந்த கண்ணபிரான், தன் தலையில் மயிலிறகைச் சூடியிருக்கின்றார்.

கூற்றுவரின் பாசக் கயிற்றால் கட்டி உயிரைக் கொண்டு போகும் அத்தனி வழியில் வந்து, இயம பயத்தை நீக்கி உதவி புரிவன வேலு மயிலும்.

" பயந்ததனி வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே"

**வேலுமயிலும்**:- "வேலு மயிலும் " என்று எப்போதும் ஓதுவார்க்கு, மரணபயம் வராது என்பது ஒருதலை.

"மரணப்ர மாதம் நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணப் கலாபியும் வேலுமுண்டோ"
என்பார் அருணகிரிப் பெருந்தொகை.

அஷ்டாவதானம் புரிபவர் தம் அறிவு தடைபடாமல் இருக்கும் பொருட்டு, "வேலுமயிலும் வேலுமயிலும்" என்று இடையறாது கூறுவது மரபு.

வேலையும் மயிலையும் ஒருங்கே எழுந்தருளப் புரிந்த நாடோறும் வழிபாடு செய்வார்க்கு, இகபர நலன்கள் எளிதிற கைகூடும், வேலையும் மயிலையும் நினைத்து உருகுபவர்களது எல்லா வினைகளும் இடர்களும் தீரும்.

வேலு மயிலு நினைத்தவர் தந்துயர்
தீர அருள்புரி கந்த நிரந்தர
வேலை வயலி யுகந்து நின்றருள் - பெருமாளே" - திருப்புகழ்

"வேலென் கிலைகொற் றமயூரம் என்கிலை வெட்சித் தண்டைக்
காலென் கிலைமன மே எங்ங னே முத்தி காண்பதுவே"
- கந்தரலங்காரம்

"ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்"
- கந்தரநுபூதி

என்பனவாதி திருவாக்குகளை யெல்லாம் உன்னுக.

தேவரும் மூவரும் முப்போதும் போற்றும் முருக வேலுளுடை வேலையும், மயிலையும் எப்போதும் போற்றி உலகம் உய்வதாக. வையம் உய்ய வழி இதுவே.

வேலு மயிலுந் துணையென்று மேன்மையோடு விளிம்பிடுவோர்
நாலூ மறையுங் காணாத நாதன் முருகன் அருள்பெறுவர்
பாலுந் தேனும் பருகுவரால் பல்லாண் டுறைவர் பகையிலரால்
மாலு மயனும் புகழ்முத்தி மருவி நீடு வாழ்குவரே.

ஆதலின், "ஆன்மா ஈடேற வேண்டும்" என்ற எண்ண முடையவர்கள், அருள் தாகத்துடன் "வேலுமயிலுந்துணை" என்ற திருமந்திரத்தை மறவாது கூறி மகிழ்க.

எழும்போதும் வேலு மயிலுமென் பேன், எழுந்தேமகிழ்ந்து
தொழும்போது வேலு மயிலுமென் பேன்தொழு தேயுருகி
அழும்போது வேலு மயிலுமென் பேன் அடி யேனுடலம்
விழும்போதும் வேலு மயிலுமென் பேன்செந்தில் வேலனே.

வெற்றி வேலுற்ற துணை. வேலு மயிலுந் துணை.

# திருக்கோயில் வழிபாட்டு முறைகள்

திருக்கோயிலில் பூசை செய்வோர் பூசைக்காலங்களில் திருக்கோயில் கதவினைத் திறக்கும் போது

கண்ணினால் உமைக் காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மின்

என வேண்டுக. கதவினைத் திறந்து பின்னர் கருவறையில் விளக்கேற்றி

எது எமைப்பணி கொளும் ஆறது
கேட்போம் பள்ளி எழுந்தருளாயே எனப்பாடி ஒளிகாட்டுக.

திருமுழுக்காட்டிற்கு (அபிடேகம்) முன்னர் முந்தைய நாள் சூட்டிய மலர்களைக் கால்மிதிபடாத இடத்தில் கொண்டு போய்ப் போட வேண்டும். இறை வழிபாட்டுக்குப் பயன்படுத்துவனவற்றைத் தூய்மை செய்து வைக்க வேண்டும். அபிடேகத்திற்குரிய தண்ணீரைத் தூய்மையான இடத்திலிருந்து கொண்டு வருக. வழிபாட்டிற்கு மலர்கள், இலைகள் (பத்திரங்கள்) தூய்மையான இடங்களிலிருந்து கொண்டுவந்து கழுவியபின் பயன்படுத்துக.

பிள்ளையார் முதல் வழிபாட்டுக்குரியவர். எனவே திருக்கோயில் வழிபாட்டில் முதலில் அவரை வழிபடவேண்டும் பிள்ளையாருக்குத் திருமஞ்சனமாட்டி (அபிடேகம் செய்தல்) ஆடை, திருநீறு, சந்தனம், குங்குமம், மலர்மாலைகள் அணிவித்து அலங்கரிக்க வேண்டும்.

நீராட்டும் போது (திருமஞ்சனம்)

" நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசை கொள்ளவாராய் பராபரமே" என்று பாடுக.

திருமேனியை அலங்கரிக்கும் போதும் மேற்கண்ட பாடலையே திரும்பவும் கூறலாம். "உன்னை அலங்கரித்து உன் அழகு பாராமல் என்னை அலங்கரித்து ஈடழிந்தேன் பூரணமே." எனப்பாடுக.

இறைவனைத் திருமஞ்சனம் செய்வதற்கு அபிடேகப் பொருட்களில் கிடைத்தவற்றைப் பயன்படுத்தலாம்.நல்லெண்ணைய்,ஆனைந்து (பால், தயிர், நெய், கோசலம்,கோமயம் ஆகியவற்றின் கலவை) திருமஞ்சனப் பொடி, மஞ்சள் பொடி,ஐஅமுதம் (பஞ்சாமிர்தம்), நெய்,பால், தயிர், தேன், கரும்புச்சாறு, பழவகைகளின் சாறு, இளநீர், பன்னீர், சந்தனம் முதலியனவற்றை முறைப்படி அபிடேகம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு அபிடேகத்தின் போதும் ஒரு மலரிட்டுக் கைவிளக்கைக் காட்டி அபிடேகம் செய்க. பழமும் படைக்கலாம். வழிபாட்டின் தொடக்கத்தில் இறைவனுக்குச் சாம்பிராணி, ஊதுபத்தி, குங்கிலியம், நறும்புகை காட்டுக. அப்பொது, சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" என்று கூறுக. அடுத்து கைவிளக்கினை இறைவனுக்கு முன்பு மூன்று முறை வலமாக ஓம்வடிவில் சுற்றிக் காட்ட வேண்டும். அப்போது ஒளிவளர் விளக்கே என்றும், நல்லக விளக்கது நமச்சிவாயவே என்றும் கூறுக. திருவமுதூட்டும் போது அடியார்கட்கு ஆரமுது ஆனாய்போற்றி என்று கூறி கையில் பூ, நீரெடுத்துத் திருவமுதைத் தொட்டுக் காட்டுக. நெய் விளக்கு அல்லது கற்பூர ஒளியை முன்பு சொல்லியபடி மூன்று முறை வலமாகச் சுற்றிக் காட்டுக. அப்போது ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் போற்றி என்று கூறுக.

இதன்பின்னர் அந்தந்தத் தெய்வங்களுக்குரிய போற்றிகளைச் சொல்லிமலரிடுக.

எட்டு பதினாறு, நூற்றெட்டு என காலத்திற்கேற்பப் போற்றுக.

தமிழ் அர்ச்சனை - அருள் வேண்டுதல்(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய
இந்நாளில் ------- அவர்களுக்கும்
அவர்கள் குடும்பத்தாருக்கும் , சுற்றத்தார்க்கும் சமூகத்தார்க்கும்
உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும்
பொருந்திய நின்நிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும்,
திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும் உமது
திருவடிகளில் மலர்தூவி வழிபாடு செய்கின்றோம். என்று கூறி மலரிட்டுப் போற்றுக.

திருக்கோயிலில் பூசை செய்வோர் திருக்கோயில் வழிபாட்டு முறைகளை தெரிந்து கொள்வதற்கோ, செயல்முறைப்படுத்துவதற்கோ விரும்பினால் இப்பகுதியைப் பின்பற்றுக.

முன்னர் கூறியுள்ளவாறு பூசை செய்வோர் ஒழுக்கங்களைப்பேணிக் கொள்க. முறையான அருள்நூல் வழிபாட்டு முறைகளையே அனைத்துக் கடவுள் திருமேனிகளுக்கும் வகுத்துக் கொள்ளலாம். இதற்கான காரணங்கள் முன்கூறப்பெற்றுள்ளன.

திருக்கோயில் பூசைகளைச் செய்வோர் சமய (தீக்கை) நெறிமுறைகளைத் தக்கவர்பால் பெற்றுக் கொள்ளுதல் நலம். இதுவே சமய நுழைவுக்குரிய தகுதியாகும். இதன் மூலம் திருநீறு அணிதல், மந்திரம் ஓதுதல் செய்து வளப்படுத்திக் கொள்ளலாம்.

காலையில் எழுந்து குளித்துத் தூய்மை செய்து கொள்க. திருநீற்றினைத் தண்ணீர் விட்டுக் குழைக்காமல் முதலில் உடம்பில் பூசிக் கொள்க. இதனை உத்தூளனமாகத் திருநீறு அணிதல் என்பர். உச்சி, நெற்றியில் திருநீறு இடுக, பின்னர் இரு கைகளிலும் மணிக்கட்டிலிருந்து தோள்வரை நேர் கோடாக மேல்நோக்கிப் பூசுக. அதுபோல் கொப்பூழிலிருந்து கண்டம் வரை நேர்கோடாகப் பூசுக. அப்பொழுது

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே என்னும் பாடலை ஓதுக.

வடக்கு அல்லது கிழக்கு நோக்கி அமர்ந்து கொள்க. குருமுகமாகக் கேட்டறிந்த வகையில் சமய அனுட்டானத்தைச் செய்க

முதலில் பிள்ளையார் வழிபாடு செய்க. அப்போது

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடம்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே என்னும் பாடலையும்

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே

என்னும் பாடலையும் ஓதி வழிபடுக. பின்னர் குருவைச் சிவமெனக் கருதி குரு வணக்கம்செய்க அப்போது

கூடல் இலங்கு குருமணிபோற்றி என்று கூறுக.
தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல்தானே

என்னும் பாடலைக் கூறி வணங்குக.

பின்னர் புன்புலால் யாக்கையான இவ்வுடம்பு இறைவன் பொன் நெடுங்கோயில் என நினைத்து கொண்டு நீரினைத்தலைமேல் தெளித்து

என்னிலாரும் எனக்கு இனியாரில்லை
என்னிலும் இனியானொருவன்னுளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே

என்னும் பாடலை கூறுக.பின்னர் திருநீற்றினைக் கையிலெடுத்து நீர்விட்டுக் குழைத்து குரு கூறியவாறு பதினாறு இடங்களில் அணிந்து கொள்க.

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக்கு கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் பூகழ்வது நீறு ஆலவாயான் திருநீறே

என்னும் பாடலை ஓதி வழிபாட்டை நிறைவு செய்க.

சைவ மரபு இன்றிப் பிறவகை (வைணவம் போன்றன.) நிலைகளில் குரு வழியில் நின்று அவ்வகையில் சந்தி வழிபாட்டைச் செய்து கொள்க.

பின்னர் திருக்கோயில் திருக்கதவம் திறக்கும் போது

பண்ணின் நேர்மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலம் செய்து மறைக் காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே. என்னும் பாடலை ஓதுக.

திருக்கோயில் கருவரையில் விளக்கேற்றி எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம் பள்ளி எழுந்தருள்க என விண்ணப்பித்து விளக்கொளி காட்டுக. பின்னர் முந்தைய நாள் சூட்டிய மலர்களைக் களைக. அப்பொழுது

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னை
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மையானைத்

தலையாய தேவாதி தேவர்க்கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. என்னும் பாடலை ஓதி வழிபடுக. பின்னர்
அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணு
அஞ்சினோடு அஞ்சு கரதலம் தானு
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே

என்னும் பாடலை ஓதி இறைவன் திருவுருவை எண்ணி வணங்குக.

ஆனைந்து தெளித்தல்

திருமேனிக்கு எண்ணெய்க் காப்பிடுக. ஆனைந்துக் கலவையைத் திருமேனியில் தெளிக்க. ஆனைந்து விளக்கம் முன்னர் கூறப்பெற்றுள்ளமையை அறிக. ஆனைந்து தெளிக்கும் போது ஆவினில் ஐந்து உகந்தாய் போற்றி என்று கூறுக.

ஆவிலைந் தமர்ந்தவன் அரிவை யொடு
மேவிநன் கிருந்ததோர் வியன் நகர்தான்
பூவில் வண்டமர்தரு பொய்கையன்னச்
சேவல் தன் பெடை புல்கு சிவபுரமே என்னும் பாடலை ஓதுக.

நீராட்டல்:-

தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங் கொண்டடியார் குளிர் நீர் சுமந்தாட்டப்
படங் கொண்டதோர் பாம்பரை ஆர்த்த பரமன்
இடங் கொண்டிருந்தான் தன் இடை மருந்தோ

என்று கூறி நீராட்டுக. முன்னர் கூறிய அபிடேகப் பொருட்களில் கிடைத்தவற்றைக் கொண்டு அபிடேகம் செய்க. சிறப்பு நாட்கள், விழா நாட்களில் முழுமையான அபிடேகப் பொருட்களைப் கொண்டு அபிடேகம் செய்யலாம்.

வேனலானை வெருவவுரி போர்த்துப் உமை அஞ்சலே
வானை ஊடறுக்கும் மதி சூடிய மைந்தனர்
தேன் நெய் பால் தயிர் தெங்கிள நீர் கரும்பின் தெளி
ஆனஞ்சாடு முடியானுமை ஆறுடை ஐயனே
ஆடியாய் நறு நெய்யொடு பால் தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும் பல்படைப் பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம்தொல்வினையே

தொண்டனேன் பட்டதென்ன தூ யகாவிரியின் நன்னீர்
கொட்டிருக்கோதி ஆட்டிக் குங்குமக் குழம்புசாத்தி
இண்டை கொண்டு ஏற நோக்கின் ஈசனை எம்பிரானை
கண்டனைக் கண்டிராதே காலத்தைக் கழித்தவாறே

நெய்யினொடு பாலிளநீர் ஆடினான் காண்
நித்தமண வாளனென நிற்கின்றான்காண்
கையின் மழு வாளொடு மா னேந்தினான் காண்
காலனுயிர் காலாற் கழிவித்தான் காண்
செய்யதிரு மேனி வெண்ணீற்றினான் காண்
செஞ்சடைமேல் வெண்மதியம் சேர்த்தினான் காண்
செய்ய கனல் விளையாட்டாடினான் காண்
விண்ணிழிதன் வீழி மிழலையானே

பாலினால் நறு நெய்யால் பழத்தினால் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தாடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங்குடியதனுள்
காலினால் கூற்றுதைத்தான் கணபதீச்சரத்தானே

என்பன போன்ற பாடல்களை ஓதி அபிடேகம் செய்க. திருமேனியை நல்ல நீரினால் ஆட்டி உலர்ந்த துணிகொண்டு நன்றாகத் துடைக்க வேண்டும்.

ஆடை அணிவித்தல்

கட்டிட்ட தலைகை ஏந்திக் கனலெரி ஆடிச்சீரி
சுட்டிட்ட நீறுபூசிச் சுடுபிணக் காடராகி
விட்டிட்ட வேட்கையர்க்கு வேறிருந்தருள்கள் செய்து
பட்டிட்ட உடையராகிப் பருப்பதம் நோக்கினாதே
என்னும் பாடலை ஓதிப் பரிவட்டம் முதலியன அணிவிக்க.

திருநீறு அணிவித்தல்

திருமேனியில் திரு நீறு பூசி அழகு செய்க
ஏறுகந்து ஏறவல்லானும் எரிபுரை மேனியினாலும்
நீறு மெய்பூச வல்லானும் நினைப்பவர் நெஞ்சத்தாலும்
நாறு கரத்தையினானும் நான் மறைக் கண்டத்தினானும்
ஆறு சடைக்கரத்தானும் ஆரூருமர்ந்த அம்மானே என்னும் பாடலை ஓதுக.

சந்தனம் குங்குமம் சூட்டல்:-

சந்தனம் குங்குமம் சாந்தும் தோய்ந்தாய் போற்றி என்று கூறுக
ஆளான அடியவர்க்கு அன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
தாளானைத் தன்னொப்பார் இல்லா தானைச்
சந்தனமும் குங்குமமும் சாந்தும் தோய்த்த
தோளானைத் தோளாத முத்தொப்பானைத்
தூ வெகுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆகும் கோவை
கேடிலியை நாடுமவர் கேடிலாரே என்னும் பாடலை ஓதுக.

திருவாபரணம் அணிவித்தல்

கடவுள் திருமேனிக்கு திருஆபரணங்களை அணிவிக்கும் போது கீழ்க்கண்ட பாடலை ஒதுக.

ஆண் தெய்வம்

கற்பகம் ஈன்ற கமழ்பட் டினை உடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து - விற்பகரும்
சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துப் - தோளா
மணிமகர குண்டலங்கள் காதுக் கணிந்தாங்
கணியிரக் கண்டிகை பொன்னான -பணிபொரிய
ஆரம் அவைபூண் டணிதிகழ

பெண் தெய்வம்

முத்துவடக் கொங்கைச்சி முல்லை முகிழ்நகைச்சி
பத்தரவர் நெஞ்சகத்தி பாரிடத்தி - சுத்தவெள்ளை
அக்கு வடத்தி அறம்வளர்த்தி அன்புடைச்சி
செக்கர் இளம்பிறைச் செண்பகத்தி - தக்கமணி
ஓலைக் குழைச்சி உபதேச குண்டலச்சி
மாலைக் கழுத்தி மவுனத்தி என ஓதுக.

மாலை அணிவித்தல்

புல்லிய இலைகளை உடைய எருக்கமலராயினும்
அன்போடு அளித்தால் இறைவன் ஏற்றுக் கொள்வார்.
என்பது நம் சங்ககால நூலான புறநானூற்றுக் கூற்றாகும் எனினும் நல்ல மனமமிக்க மலர்களை
தழைகளையும் நாம் இறைவனுக்குச் சூட்ட வேண்டும்.
திருமேனிக்கு மாலை, மலர்கள் அணிவிக்கும் போது
நொச்சியே வள்ளி கொன்றை மதி கூவிளம்
உச்சியே புனைதல் வேடம் விடை ஊர்தியான்
கச்சியே கம்பம் மேய கறைக்கண்டனை
நச்சியே தொழுமின் நும்மேல் வினை நையுமே என்னும் பாடலையும்

நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திக் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சய போ்ற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையும் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே என்னும் பாடலையும் ஓதுக

தூபம் காட்டுதல்

ஊதுபத்தி சாம்பிராணி குங்கிலியம் ஏதேனும் ஒன்றின் தூபத்தைக் திருமேனியின் முன் வலமாக மூன்று முறை சுற்றிக் காட்டுக.

வெந்த குங்குலியப் புகை விம்மல்
கந்த நின்றுலவுங் கழிப்பாலையார்
அந்தமும் அளவும் அறியாததோர்
கந்தமாலவர் மேனிய சாந்தமே என்னும் பாடலை ஓதுக.

தீபம் காட்டுதல்

ஒரு திரியுள்ள விளக்கினை இறைத்திருமேனியின் முன்னர் வலமாக மூன்று முறை சுற்றிக் காட்டுக.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே என்னும் பாடலை ஓதுக.

திருவமுது காட்டுதல்

இறைவனுக்கு ஆக்கப்பட்ட வெண்பொங்கல் , தாளித்த உணவுவகைகள், அல்லது(தேங்காய் பழம், வெற்றிலை பழவகைகள், பாக்கு முதலியவற்றை) திருமுன்பு வைத்து அமுதூட்டுக. மோதிரவிரல்,நடுவிரல், பெருவிரல், மூன்றினையும் சேர்த்து மற்ற விரல்களை நீட்டி நீர் மலர் இவற்றைக் கையிலெடுத்து அமுதினைத் தொட்டுக் காட்ட வேண்டும்.

மறவாமையால் அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதை தனை உணரும் ஒளிவிளக்குச் சுடரேத்தி
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க் கன்பு என்னும் அமுதமைத்து அர்ச்சனை செய்வார்.
கலியார்க்கச்சி மலியேகம்பம்
பாலியால் போற்ற நலியாவினையே எனவரும் பாடல்களை ஓதுக.

கற்பூரம் காட்டுதல்

நெய் விளக்கு அல்லது கற்பூரம் ஏற்றி திருமேனியின் முன்னர் வலமாக மூன்று முறை சுற்றிக் காட்ட வேண்டும்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவியோமமாகும் திருச் சிற்ம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

என்னும் பாடலை அப்போது ஓதுக.

போற்றுதல்

மலர்கள் தளிர்கள் இவற்றைத் தூவி போற்றிகளைத் கூறவேண்டும். இதன் பின் ஐம்பெரும் பாடல்கள் (பஞ்சபுராணம்) ஓதுக. தேவாரம் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் முதலியவற்றில் ஒவ்வொருபாடல்களைப் பாடுவது பஞ்சபுராணம். பின்னர் திருநீறு குங்குமம் போன்ற பிரசாதங்களை வழிபட வந்தவர்களுக்கு அளிக்க.



# நடனமும் நடராசரும்

டாக்டர் இரத்தினம் நித்தியானந்தன்

இந்தப் பூமிப்பந்தின் மையமாகத் தில்லையம்பதி அமைத்துள்ளது என்பர். அத்தகைய மையப் பகுதியில் நின்று அனைத்துலகையும் ஆட்டிவைக்கும் கூத்தபிரான், கூத்தரசன்,ஆடவல்லான், நடராசன், நடவரசன், நடத்தரசன், ஞானநடத்தரசன் என்றெல்லாம் புகழப்படும் எம்பெருமான் சிவபெருமானின் நடனக்கலை பற்றி எழுதுவதிலும், சைவத் தமிழ்க் கோவில்கள் நடாத்தும் 4வது உலக சைவ மாநாடு வெற்றி பெற வாழ்த்துவதிலும் அளவிலா ஆனந்தம் கொள்கிறேன்.

தென்னாடுடைய சிவபெருமானை எந்நாட்டவர்க்கும் இறைவனாக மணிவாசகப் பெருமான் கூறினார். நடராசப் பெருமான், கூத்துக்கலையும் நடராசப் பெருமானின் மூலம் இன்று உலகப் பெருங்கலையாக எந்நாட்டவர்க்கும் உரிய கலையாக இப்பொழுது பரவியிருக்கிறது., மதிப்புப் பெற்றிருக்கிறது..

தமிழர்கள் எந்த நிலத்தில் வாழ்ந்தாலும் ஆடல்வல்லானை அவன் அம்பலத்தை மறப்பதில்லை. அதுவும் தமிழும் சைவமும் தழைத்து வாழ்ந்த யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்கள் தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றி வாழ்வர் என்பதை சொல்ல வேண்டியதில்லை.

ஆனந்தகுமாரசாமி என்னும் நல் அறிஞரை உலகத்திற்கு வழங்கிப் பெருமை கொண்ட மண் எம் ஈழத் தமிழ்மண். அவரின் சிவானந்த நடனம் (The Dance of Siva) நூல் உலகப் புகழ் பெற்ற நூலென்று நீங்கள் அறிவீர்கள்.

“மனித குலத்தின் நன்மைக்காகக் கீழை நாட்டுச் சிந்தனையையும் மேலைநாட்டுச் சிந்தனையையும் இணைக்க வேண்டும். ” என்ற கருத்தை உடையவர் அறிஞர் ஆனந்த குமாரசாமி. புறநாகரீகத்தில் மூழ்கித் திளைக்கும் மேலை உலகத்தாரிடம் குமாரசாமி இவ்வாறு பேசினார். “ஆசியா அழிந்தால் அஃது உங்களுடைய அழிவுக்கே ஏதுவாகும். ஆசியாவை உயர்த்தினால் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்வீர்கள்”.

ஆனந்தக் குமாரசாமி நெடுநாட்களுக்கு முன்பு சொன்னது இன்று உண்மையாகி வருகிறது. அதாவது கீழைநாட்டுச் சிந்தனையை அறியும் தாகம் மேலைநாட்டாருக்கு அதிகரித்து வருகின்றது. அதிலும் நம் நடராசர் தத்துவமும் அவரின் நாட்டியத் திருவுருவும் இன்று உலகச் சொத்தாக மாறி வருகிறது.

இன்று தமிழ் இணையம் உருவாகிவிட்டது. உலகம் முழுவதும் தமிழ் வரப்போகிறது. உலகத் தமிழர்கள் ஒரு குடும்பமாக ஆகப் போகிறார்கள். தமிழால் தமிழர்களும் தமிழ்க்கலைகளால் உலகமும் ஒன்றாக இணையப் போகின்றன. அவ்வாறான நிகழ்ச்சி நடக்கப் போகும் காலத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். நம் பரதக்கலை இந்த கலைகளிலெல்லாம் முதன்மைக்கலையாக முன்நின்று உலகின் பெருமதிப்பைப் பெறப்போகிறது என்பதையும் யாம் அவதானிக்க முடிகின்றது. அப்பொழுது யாம் தொடக்கத்தில் கூறியவாறு தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாகக் காட்சியளிக்கப் போகின்றரர்.

### கூத்துக்கலையின் பழமை

கூத்துக்கலை தமிழர் நாகரீகத்தோடு சேர்ந்து தோன்றியதாகும். தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி வட்டத்தில் கி. மு.3000 - கி.மு. 1500 கால அளவில் வரையப்பட்ட ஓவியங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் நடனக் காட்சிகளைச் சித்தரிக்கும் ஓவியங்களும் உள்ளன. சிந்துவெளிப்பண்பாடு கி.மு. 3500 கி.மு. 2500 காலம் என்பர். இங்கு முழவு. சிறுபறை, உடுக்கை, மத்தளம், போன்ற இசைக் கருவிகள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இவை கொண்டு திராவிட நாகரீகத்தில் நடனமும் இசையும் மிகப் பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்திருந்தன என்று நாம் அறிய முடிகின்றது.

### தொல்காப்பியமும் பரதக்கலையும்

தொல்காப்பியம் கி. மு 6ஆம் நூற்றாண்டு என்பர். இந்நூலில் நாட்டியம் தொடர்பான செய்திகளும் இசை தொடர்பான செய்திகளும் குறிப்பிடும்படியாகச் சொல்லப்பட்டுள்ளன.

நமது பரதக்கலையில் அபிநயம் முக்கியமானது “கையையும் மெய்யையும் காட்டி மனக் குறிப்பை வெளிப்படுத்துவதே அபிநயம்” இந்த அபிநயம் பற்றி மெய்ப்பாட்டியலில் தொல்காப்பியர் சொல்லியிருப்பது

மிகவும் வியப்பிற்குரியதாகும்.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று எட்டு மெய்ப்பாடுகளைச் சொன்ன தொல்காப்பியம் ஒவ்வொரு மெய்ப்பாடும் நான்கு காரணங்களைக் கொண்டு பிறக்கின்றன என்று துல்லியமாக விளக்கிச் சொல்லியுள்ள இடத்தையே நான் இங்கு சிறப்பாக குறிக்க விரும்புகின்றேன்..

"நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டலாகப் பொருள் என்ப"

என்ற நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் "நாட்டிய மரபு" என்ற ஒன்றைக் குறிப்பிடுவதும் நமக்கு வியப்பளிக்கிறது.

## பரதக் கலையின் இறைமை

வழிவழியாகச் செழித்து வளர்ந்திருந்த நாட்டியக்கலை "பரதக்கலை" எனப் பின்னர்ப் பெயரேற்றது. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரத முனிவர் நாட்டிய சாஸ்திரம் என நாட்டியம் பற்றி நூல் எழுதிய பிறகுதான் கூத்துக்கலை பரதக்கலை எனப் பெயர் பெற்றது.

கூத்துக்கலையைத் தமிழர்கள் தனிப்பெருங்கலையாக வளர்ந்தனர். பரதக்கலையில் இரு பெரும் பாணிகள் உண்டு. பந்தணை நல்லூர்ப் பாணியைத் தோற்றுவித்தவர். தஞ்சாவூர் நால்வர் எனப்போற்றப்படும் பொன்னையாபிள்ளை, சின்னையாபிள்ளை, வடிவேலுபிள்ளை, சிவானந்தம்பிள்ளை ஆகியோர். வழுவூர் பாணியைத் தோற்றுவித்தவர் தஞ்சை சரபோதி மன்னன் காலத்தில் வாழ்ந்த வீரப்பநட்டுவனார் மற்றும் அவர் பெயரன் சாமுநட்டுவனார்.மற்றும் சாமுவின் பெயரன் வழுவூர் இராமையாபிள்ளை ஆகியோர் ஆவர்.

தமிழில் அகப்பொருள் சார்ந்தே கூத்துக்கலைகள் வளர்ந்தன. "சகியே இந்த வேளையில்" (தஞ்சை சிவானந்தம்) "சகியே இந்த ஜாலம்" (கே. என். தண்டாயுதபாணிபிள்ளை) என்ற பத வருணங்களையும் "தெருவில் வாரானோ" (முத்தாண்டவர்) "தெண்டனிட்டேன்" (இராமலிங்க சுவாமிகள்) "தூதுநீ சொல்லிநீ வாடி" (பெரியசாமி தூரன்) என்ற பதங்களையும் இவற்றிற்குச் கூறலாம்.

"தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி"என்று நம் அருளாளர் குறிப்பிட்டதுபோல மனித மனத்தில் பக்தி வளர்ந்தபோது எல்லாமும் இறைவனுக்கே என்னும் உணர்ச்சி பெருகியது. அதனடிப்படையிலேயே கூத்துக்கலையாகிய பரதக்கலை கடவுளுக்கு உரியதாக ஒப்படைக்கப்பட்டது.

இயக்கம் என்பதுதான் வாழ்க்கை. இந்த இயக்கம்தான் உலகத் தோற்றத்திற்கும் உலக நிலைப்பிற்கும் உலக ஒடுக்கத்திற்கும் அடிப்படை. இயக்கம் என்பதன் புறவெளிப்பாடு ஆட்டம். எல்லாவற்றையும் இயக்கிக் கொண்டிருப்பவனே இறைவன். அவனே சூத்திரதாரி. அவனின்றி அணுவும் அசையாது.

தமிழர்கள் கடவுளைக் கண்டு தெளிந்ததன் அடையாளம்தான் ஆடல் தத்துவம். "காலம் இடம் என்ற நியதியிடையே தோன்றும் கோடிக்கணக்கான படைப்புக்களைப் பார்க்கிறேன். முடிவில்லா எத்தனை தோரண வளைவுகள்: எத்தனை சூரியர்கள்: எத்தனை மாயா புவனங்கள்: இந்த கோள்களில் அசைவினால் உண்டாகும் அண்டத்துப்பேரிசை எப்படிப்பட்டது. ஒரு கோள் மறைய மற்றொன்று தோன்றும்: அது மறைய வேறொன்று தோன்றும். இவ்வாறு மறைந்து மறைந்து தோன்றும் கோள்கள் எல்லாவற்றிற்கும் தோற்றமும் திதியும் சங்காரமும் வழங்கிச் சீவராசிகளையும் அற்றிடையே மானிடரையும் தேவரையும் வாழச்செய்கின்ற சக்தியைக் காண்கின்றேன். சாசுவதமான பெரியநியதியாகிய சங்காரசக்கரத்தைக் காண்கின்றேன். அங்கெல்லாம் சிவனுடைய நடனம் கேட்கிறது. அண்டத்தின் மத்தியில் பிரபஞ்சத்தின் நடுவிலும் அடியேனுடைய உள்ளத்திலும் அதே நடனச் சிலம்பொலியைக் கேட்கிறேன்." என்ற ஆனந்த குமாரசாமியின் விளக்கவுரை தமிழின் ஆன்மீகத்தைத் தொட்டுக் காட்டிய பகுதியாகும்.

"ஐரோப்பியர், ஆசிய மதங்களில் ஒன்றைப் பின்பற்ற வேண்டுமென்று நான் கூறவில்லை: ஆசியா உணர்ந்த இந்த ஆடலின் தத்துவச்சிறப்பை அனுபவிக்கும் படிதான் கேட்கிறேன்." இதுவும் அறிஞர் குமாரசாமியின் முழக்கம்.

உலகில் மிகப் பெரிய தத்துவத்தை உள்ளடக்கி பூமிப் பந்தின் மத்தியில் நின்று ஆடும் எம்பெருமானின் நடனத்தைக் காண கண் ஆயிரம் வேண்டும்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்தமா நிலத்தே"

# *My favourite Saiva Scholar*

In our history, Saivaism has faced challenges many times - Tamil has faced troubles many times. During these times, God has sent many to save the Saiva religion and its followers. Although most of these saviours have been men, at certain important points in history God has sent women! These women have all performed many deeds as mother of our nation - they gave a helping hand during Saivaism's struggles - they ensured the continuity of Saivaism.

In this line, There was once Kaaraikkal Ammaiyar (காரைக்கால் அம்மையார்) There was Avvaiyar (ஔவையார்). Later, there were Mangaiyarkkarasiyar (மங்கையர்க்கரசியார்) and Thilagavathiyar (திலகவதியார்). And now, in this long line is Thangamma Appakuddi (தங்கம்மா அப்பாக்குட்டி).

The current situation in Ealam is different from that faced by our ancestors. In today's Ealam, it is not possible to preserve oneself. The basic human necessities are not there - food is in short supply - many do not have a place to live - there are very little educational facilities - and in addition there are many threats to personal safety due to soldiers and other enemies. But in spite of all these Thangamma Appakuddi gives others food, she gives them a place to live. and she gives them an education. In other words, she helps them to live with self respect.

Many complain that bringing up their own daughters is a great burden. But Thangamma Appakuddi, in spite of all the challenges she faces, is bringing up over seventy girls by herself. What courage! What selflessness!

We live a very comfortable well - off away from Ealam, especially in the west. It is our parents who brought us up and helped us to this good position. We keep them as long as they help us but then send them off to old people's homes. We visit them once a week, saying "hi" and then "Buy" a few minutes later, before leaving. However Thangamma Appakuddi, has set up a home in Ealam to help elderly people there to live. And what is her age? Seventy - six!

That's nor all! What do we do if we have money? We put it in a bank so it can earn interest - we buy land - we buy buildings. Even if we decide to be charitable we think - " Only I should do this thing, other's should not"

We refuse to donate money for Temples if there will be no plaque saying that we contributed.

However what does Thangamma Appakuddi do? She gives money to other temples. She gives money to other charities. She gives money to the Jaffna Teaching Hospital. She gives money to any charitable institution with financial difficulties.

Thangamma Appakuddi is not only my, but our, favourite Saiva Saint. Her belief and policy in life is nothing new. However, We are a nation that easily forgets. Therefore, it is my duty to remind everyone:"மக்கள் சேவையே மகேசன் சேவை" - It is by serving our fellow human beings that we may serve Lord Shiva.

However, one may ask, "Does she not worship at temples? Of course she herself runs one. And that's not all - there is no- one greater at making speeches on religious philosophies than her.What does this show? By all means worship God through stone statues, but do not worship God as a stone. Find God in the lives of the poor. God has no mother and father. God has no relations. So who can remind us of God better than the mother and father less poor? Does not the great Lord Shiva, who created, protects and will eventually destroy this world, take the guise of a beggar?

Therefore, my fellow Saivaites, helping our fellow human beings is a rule of life Thangamma Appakuddi is a living example of this rule. I am greatly honoured by this opportunity to speak about her and am grateful to the management of the Saiva Maanadu for this chance.

The heroine of my speech - Thangamma Appakuddi - is now seventy six years old. I pray that she will health and continue her great mission!!

மேற்படி கட்டுரை ஒன்றியத்தின் நாலாம் பிரிவுக்கான (வயது - 11,12, 13) பேச்சுப்போட்டிக்கென, திரு. கந்தையா இராஜமனோகரன் அவர்களாலே எழுதப்பெற்று , செல்வன் செந்தூரன் இராஜமனோகரன் அவர்களாலே மொழிபெயர்க்கப்பட்டது. மாநாட்டு மலரிலே மணம் வீச வல்லதெனக் கண்டு இணைக்கப்பட்டுள்ளது.

*Experienced Tamil*
*Jeweller in London*



# வெஸ்டர்ன் ஜுவலர்ஸ்

## *Western Jewellers*

230 Upper Tooting Road
London SW17 2EW
**Tel: 020 8767 3445**

# சமூகவாழ்வும் சமயமும்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலர்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்பது திருமூலர் வாக்கு

ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் ஜோதிவடிவான சிவபெருமானை முழுமுதற் கடவுளாக கொண்டதே சைவசமயமாகும் இது பழமையும் பெருமையும் மிக்க தூய்மையான சமயம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இந்தியாவிலே தோன்றி இலங்கை. மலேசியா, பர்மா, இந்தோனேசியா என்று பல ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் அமெரிக்கர்களிடையேயும் இன்று பிரசித்தி பெற்று விளங்குகின்றது. உலகம் முழுவதும் பரந்து வாழும் ஈழத்த தமிழர்களால் இன்று சைவமும் தமிழும் தலை நிமிர்ந்து நிற்கின்றது என்றால் எமது தமிழ் மக்களின் பக்தியைச் சமயப்பற்றை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

எமது சமயமாவது ஆகம, ஆசார, அனுட்டான விதிகளுக்குட்பட்டு அகமும் புறமும் தூய்மையுடைய அறிஞர்களால் முனிவர்களால் வளர்க்கப்பட்டது. ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்களால் பாதிக்கப்பட்ட ஆன்மாக்களை முத்தி பெறும் நிலைக்கு அழைத்து செல்லும் வழியை காட்டிநிற்பது ஆலயங்கள் ஆகும். ஆன்மா எதையும் தானாக அறிவதில்லை. அறிவிக்க அறிந்து கொள்ளும் இயல்புடையது. இயல்பாகவே காணப்படும் சடப்பொருளை ஒத்ததாகவே காணப்படும். இந்த நிலையில் உள்ள ஆன்மாக்களின் மும்மல இருளை நீக்கி பேரளின் மூலத்தை உணர்ந்த வழிகாட்டி நிற்பது ஆலய வழிபாடுகளாகும். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் பஞ்சகிருத்தியங்களினால் ஈசானம், தற்புருடம், வாமதேவம், அகோரம், சத்தியோசாதம், எனும் ஐந்து முகங்களின் வாயிலாகவே இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றான். அவரவர் மனங்களில் ஏற்படும் நம்பிக்கையின் நிமித்தம் வழிபடும் நிலைகளைப் பொறுத்தும் அருள் பாலிக்கப்படுகின்றது என்கிறது ஆகமங்கள்.

நாம் வாழும் இந்த மேற்குலகிலே பலதரப்பட்ட சூழலமைப்புக்குள்ளே வாழ்ந்து வருகின்றோம். எமது சூழல் வாழ்க்கை இயந்திர வாழ்க்கையையே சார்ந்து விட்டது. இதனால் வேலை, வீடு என்ற நாளாந்த நெருக்கடிக்குள்ளே கட்டுப்பட்டுக் கிடக்கின்றோம். இதனால் எமது மனம், வாக்கு, காயம், சித்தி, புத்திக்கும் எட்டாத இறைவனை எமது பூஜை அறையிலும் தரிசிக்க தவறி விடுகிறோம். இந்த நிலை எத்தனையோ குடும்பங்களின் மத்தியில் மனச் சஞ்சலங்களை உருவாக்கி விடுகின்றன. இதனால் அமைதியில்லாத வாழ்வினால் நாம் அலையும் நிலை எத்தனையோ குடும்ப உறவு – குழந்தைகளின் மேல் அக்கறையின்மை என்பன தொடர்கின்றது. இதனால் எமது மனதிலுள்ள இறைதியானத்துக்காக ஒதுக்கப்பட்டு இருந்த ஒரு துளி இடமும் இல்லாமல் போய்விடுகின்றது. இந்த நிலையில் நாம் அமைதியற்றவர்களாகவே ஆக்கப்பட்டு வருகின்றோம். இதனால் எமது குழந்தைகளின் எதிர்காலம் திசைமாறுகின்றது. எது எப்படி இருப்பினும் எமது சுயவாழ்வை நாம் இந்த மண்ணில் இழந்து போவது எமது இனத்துக்கே நாம் செய்யும் துரோகம் ஆகிவிடுகின்றது. இதனால் தான் எமது கலை, கலாச்சாரம், நாகரீகம், பண்பாடு என்பனவற்றை எமது குழந்தைகளுக்கு உணர்த்தி எமது தூய்மையான சைவ வாழ்வை அவர்களுக்கும் ஊட்டி வளர்க்கப்பட வேண்டியது நமது கடமையாகிறது.

இன்று எம் மண்ணிலே எமது சமயமும் இந்து ஆலயங்களும் அழிக்கப்படுகின்றது மட்டுமன்றி சைவசமயத்தின் அடையாளமாய் விளங்கும் தமிழ் மக்களும் அழிக்கப்படுகின்றனர். இதனால் வருங்கால சமூகம் எமது சமயத்தின் பாரம்பரியத்தை கலை, கலாச்சார விழுமியங்களை இந்த மண்ணிலேயும் நாம் இழந்து விடுவோமாகில் எமது இன அடையாளங்களும் இழக்கப்பட்டு விடுமல்லவா! இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு நாம் பல நல்ல வழிகளை மேற் கொள்ளல் அவசியமாகிறது.

மேற்கத்திய உலகிலே பல பெரியோர்கள் எடுத்துக் கொண்ட நல்ல முயற்சியினால் இன்று பெரிய பெரிய ஆலயங்களாக சமூக சமுதாய மறுமலர்ச்சி மன்றங்களாக தாய் மொழியை வளர்க்கின்ற தமிழ் ஆலயங்களாக, சமூக சீர்திருத்த மன்றங்களாக, கல்வி அரசியல் பொருளாதார மறுமலர்ச்சியிலும் சட்டம் மருத்துவம் விஞ்ஞானத் துறைகளிலே எமது இனம் உயர்ந்து சிறப்புப் பெற்று நிற்பதும் வளர்ந்து வரும் சமுதாயம் பல

சாதனைகளை படைத்து நிற்பதும் எமக்கு பெருமையானது. இந்த நிலையில் ஒரு இனம் தனது பண்பாட்டு கலாச்சார விழுமியங்களின் ஒழுக்கம் தவறாதவர்களாய் இன ஒற்றுமையில், சமயப்பற்றில் மொழிப்பற்றில் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை எமது வாழ்க்கை வரலாறுகள் படம் பிடித்துக் காட்டிவிடும். அந்த வகையிலே நாம் இன்று வரும் வாழ்க்கை பல தரப்பட்ட சமூக வாழ்வியலிலும் பார்க்க எந்த அளவுக்கு உயர்ந்து நிற்கின்றது என்பதே கணிப்பாகும்.

எனவே துன்பங்களையும் துயரங்களையும் சுமைகளாக்கி தூங்காத இரவுகளை பயணமாக்கி அங்கொன்றும் இங்கொன்றுமாக திசைமாறி வாழும் நிலைக்கு தள்ளப்பட்ட தமிழ் மக்களாகிய நாம் இன்று நம் இன அடையாளங்களோடு மாறாத சமய உணர்வோடு ஆலயங்களிலே புனிதமான எண்ணங்களோடு சங்கமிக் கின்றோம். எமது உயிரோடும் உணர்வோடும் கலந்து விட்ட சமயப்பற்றோடு "அவனருளாலே அவன் தாழ் வணங்கும்" பக்தியை பெற்றுள்ளோம். இதுவே இறைவனின் அனுக்கிரகமாகும். எங்கெல்லாம் அலைந்து இறுதியில் உலகின் ஒரு முலையில் இணைந்திருக்கிறோமென்றால் எமக்கு ஒரு எதிர்காலம் உருவாகப் போன்றது என்பதே பொருள். இன்று இம்மண்ணிலே உருவாக்கப்பட்டிருக்கும் ஆலயங்கள் தமது கடமையை வளரும் சமுதாயத்துக்கு என்றே அற்பணித்து நிற்பது பெருமைக்குரியது. சமயவகுப்புக்கள் தமிழ் மொழி வகுப்புக்கள் பரத நாட்டியம், வீணை, வாய்ப்பாட்டு பண்ணிசை என்பவற்றை ஆலயங்களின் அனுசரனையோடு நடாத்துவதும் அவற்றை இறைவனின் திருவடியிலே ஒப்பிடுவதும் வளரும் சமுதாயத்தின் மனங்களிலே பக்தியுணர்வை ஏற்படுத்தும் என்பதும் மற்றவர்களையும் தன்வயப்படுத்துவதும் என்பதிலும் ஐயமில்லை. இது ஒரு இனத்தின் அமைதியான வாழ்வுக்கு பெருமை தரவல்லது இதனால் வளரும் சமுதாயம் மனம், வாக்கு, காயத்தினால் இறை அச்சம் உடையவர்களாய் திடசித்தம் கொண்டவர்களாய் நல்லொழுக்கம் புரிந்துணர்வு அன்பு, கருணை, தர்மம், நீதி என்பவற்றை உணர்ந்து கொள்ளும் உணர்வுடையவர்களாய் வாழ ஆலயங்கள் வழிகாட்டுகின்றன. அன்னை தந்தையாகிய பெற்றோரைப் பணிந்து ஆலயவழிபாட்டிலே ஒழுக்கத்தை கற்று கல்வி கேள்விகளிலே சிறந்து விளங்கி சமூக சமுதாயத்திலே உயர்ந்தவனாய் வாழவேண்டும் என்ற சிந்தனையே! "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் " என்ற தத்துவத்தையும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற ஔவையின் பொன்மொழிகள் எவ்வளவு உண்மையானவை. எனவே ஒரு மனிதன் வாழும் வகையின் வழி அறிந்து கொள்ள ஆலயங்கள் அவசியமாகின்றன.

நாகரீக பழக்க வழக்கங்களுக்காக நவீன உடைபாவனைக்காக பக்குவப்படாத ஆன்மீக வழிபாடு களுக்காக தம்மை இட்டுச் செல்லும் ஒரு மனித குலம் தன்னைடம் தன் இன அடையாளங்களையும் மாற்றி விட நினைக்கின்றது. இது ஒரு தன்னல போக்குடைய சமூகத்தின் செயற்பாடாகும். சில சந்தர்ப்பங்களில் அற்ப சலுகைகளுக்காக எம்மை இழந்து நிற்பது சமயவாழ்வியலை தெளிவாக அறியாத நிலையையே உணர்த்துகின்றது. இத்தகைய செயற்பாடுகளை செய்திகளை கொண்டுவரும் சமயப் பிரச்சாரகர்களை நாம் இனம் கண்டு நமது குழந்தைகளுக்கு தெளிவுபடுத்துவது பெற்றோர்கள் ஆகிய நமது கடமையாகும். அகமும் புறமும் தூய்மையுடைய சைவ சமய வாழ்விலே நாம் பெற்றுக் கொண்ட சமய சிந்தனைகளும் சைவ முத்திரைகளும், தோத்திரப்பாடல்களும் இறைவனின் ஆணையின் பின்பே ஏற்றுக் கொள்ளப்பட்டவை ஆன்றோர் வாக்கு ஆலயவழிபாடு.

சமய குரவர்களும், சந்தானகுரவர்களும், சைவப்பெரியோர்களும், உரைத்துநின்ற ஆலயவழிபாடு அமைதியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் புனித இடமாகவே காட்சி அளிக்கின்றது. ஒரு மேல்மாடி வீட்டுக்கு நுளைவதற்காக நாம் ஏணிப்படிகளை பயன்படுத்துவது போல் சர்வவல்லமையும் நிரம்பிய இறைவனை அடைய ஆலய வழிபாடு எமக்கு ஏணிப்படிகளாக அமைகின்றன. அன்பு வடிவான இறைவனை தூய உள்ளன்போடு தொழுது "நமச்சிவாய வாழ்க...." என்ற திருமந்திரத்தை நாவார பாடி பஞ்சமா பாதங்களில் இருந்து விடுபட ஆலயத் திருத்தொண்டுகளிலே நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். ஆரம்ப வயதிலிருந்தே ஆலயவழிபாட்டைக் கற்றுக் கொண்ட எவரும் தமது நிலைகளில் இருந்து தவறப் போவது இல்லை. எனவே ஆலய வழிபாட்டிலே எம்மை நாம் இணைத்துக் கொள்வதால் தான் வளரும் சமுதாயத்திற்கு நல்ல வழிகளை காண்பிக்க முடியும்.

அ. வேணுகோபாலன்
D. A. M. D. H. M. S. (Cey)

# சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் நடாத்தும்

## நான்காவது சர்வதேச மகாநாட்டில்

## திருமதி தங்கரத்தினம் முத்துக்குமாரசுவாமி அவர்களுக்குப் பட்டமளிப்பு

திருமதி தங்கரெத்தினம் முத்துக்குமாரசுவாமி அவர்கள் யாழ்ப்பாணம் உடுவிலில் திரு முதலித்தம்பி சின்னையாவுக்கும் திருமதி பொன்னம்மாவிற்கும் செல்வப்புதல்வியாக 21.01.1921 இல் பிறந்தார். இவருக்கு ஒரே ஒரு மூத்த சகோதரர் இராசையா.

சிறுவயது முதற்கொண்டே கல்வியில் எப்போதும் முன்னணியில் திகழ்ந்து B.A பட்டதாரியானார். 20. 02. 1939 அன்று வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நாவலர் அச்சக அதிபர் வைத்தியலிங்கம் அவர்களின் மூத்த புத்திரன் முத்துக்குமாரசுவாமியை மணம் செய்தார். பின் 1949ம் ஆண்டு முதல் கொழும்பில் ஆசிரியையாகப் பணி புரியத் தொடங்கினார். B.A பட்டதாரியான இவர் 1969ம் ஆண்டு வரை 20 ஆண்டுகளாக நல்லாயன் சிரேஷ்ட பெண்கள் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி இளைப்பாறினார். கொழும்பில் ஆசிரியையாகக் கடமையாற்றிக்கொண்டு இலங்கையை விட்டு வெளியேறும் வரை 10 வருடங்களாக வட-கொழும்பு இந்து பரிபாலனசபையின் செயலாளராகப் பணி புரிந்தார். அங்கு கூட்டுப் பிரார்த்தனை வகுப்புகள் , சைவ சமயத்தின் மகிமையைப் போற்றும் வண்ணம் சமய விசேஷ நாட்களில் குழந்தைகளின் நிகழ்ச்சிகள், கலை சம்பந்தமான போட்டிகள் என்பன இடம் பெற வழி வகுத்தார்.

இவரது கணவர் ஆசிரியராகக் கடமையாற்ற 1968ம் ஆண்டு பிரித்தானியாவுக்கு வந்த பின், இவரும் 1969ம் ஆண்டு இங்கு வந்தார், இங்கு வந்த பின்னரும் 5 வருடங்களாக ஆசிரியராக பெண்களுக்குரிய Garratt Lane School, இல் கல்வி போதித்து வந்தார். ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின் பல சமூக நலச் சேவைகளில் தன் கவனத்தைத் திருப்பி அக்கறையுடன் அநேகமான தமிழ், சமயம், வைத்தியமனை முதலிய வற்றுக்கான தன்னாலியன்ற உதவிகளை நல்கி வந்தார்.

இவரும் இவரது கணவரும் இலண்டன் தமிழ்ச் சங்கத்தில் ஈடுபட்டுச் சில பதவிகள் வகித்ததோடு இன்றும் இந்த அம்மையார் Eastham ல் இயங்கும் இலண்டன் தமிழ்ச் சங்க அங்கத்தவராக இருந்து வருகிறார். சிறீலங்கா பெண்கள் சங்கம், சைவ முன்னேற்றச் சங்கம், Leaque of Friends of Hospitals, ஐக்கிய நாடுகள் ஒன்றியம், ஆசிய வயோதிபர் குழு, கொழும்பு நல்லாயர் பாடசாலை பழைய மாணவர் மன்றம் போன்ற ஸ்தாபனங்களுக்குத் தன் பங்களிப்பை நல்கினார். பொது வைபவங்களின் போது தேவாரம் பாடி, எங்கள் சைவ சமயத்தின் முக்கியத்துவத்தை, 10 வருடங்களாக நிலை நாட்டினார். பொது நல நாடுகள் கூட்டங்களின் போது, வெவ்வேறு நினைவு தினங்களின் போது தூதர்கள் (High Commissioners) பங்கு பற்றிய நிகழ்ச்சிகளில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு மொழிபெயர்ப்பாளராக விமான நிலையம், நீதிமன்றங்கள் காவல் நிலையங்கள்,சுங்க இலாகா, குடிவரவு இலாகா போன்ற அலுவலங்களில் அரிய பணியாற்றியுள்ளார். இவர் தான் இலண்டனில் முதலாவது தமிழ்,ஆங்கில மொழி பெயர்ப்பாளர் என்று கூறினால் மிகையாகாது. நாட்டுப் பிரச்சனையால் இலங்கையை விட்டு இலண்டன் வந்திறங்கிய நூற்றுக் கணக்கான மக்கள் இவரின் சேவையால் நன்மை பெற்றுள்ளார்கள்.

1971ம் ஆண்டு பாரிசில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார். 1974 ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் அறிஞர் என்ற கோதாவில் கட்டுரை வழங்கினார்.
திருமதி தங்கரத்தினம் முத்துக்குமாரசாமியவர்கள் தனது கணவர் தொகுத்து, எழுதி அச்சேறாமலிருந்த "Eminent Tamils of Ceylon" (இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள்) என்ற நூலை, 1992ம் ஆண்டு வெளியிட்டார். 80 வயது நிறைந்த இந்த அம்மையார் "தான் எடுத்த எல்லாக் கருமங்களையும் செவ்வனே முடிக்கும் மன உறுதி பெற்றவர். உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் கலை கல்வித் துறை களில் ஈடுபட்டவர்கள் மத்தியில் மிக்க மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர்.

இவருடைய கணவர் "ஆறுமுக நாவலர்" வரலாற்றை ஆராய்ச்சி செய்து நூலாக வெளியிட்டார். நாவலர் பெருமானின் நினைவு நாளின் போது ஒவ்வொரு வருடமும் பிரித்தானியாவில் சிறப்பான முறையில் விழா எடுத்தார். திரு முத்துக்குமாரசாமியின் தந்தை திரு வைத்திலிங்கம் நாவலர் மீது கொண்டிருந்த அளவற்ற ஈடுபாடு அப்பூதியடிகள் அப்பர் சுவாமிகள் மீது கொண்ட பக்தியுடன் ஒப்பிடும் தன்மை வாய்ந்தது.
தனது வாழ்விடத்திற்கு "நாவலர் கோட்டம்," என்றும், தனது அச்சுக்கூடத்திற்கு "நாவலர் அச்சகம்", என்றும், தனது புத்தக சாலைக்கு " நாவலர் புத்தகசாலை" என்றும் பெயரிட்டதிலிருந்தே இது தெளிவாகப் புலப்படுகின்றது அல்லவா.
நாவலர் பெருமானின் நெறியைப் பரப்புவதில் பெரும் ஈடுபாடு கொண்ட குடும்பத்தில் ஏற்பட்ட தொடர்பு அம்மையார் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளமையை இலண்டன் வாழ் தமிழர்கள் நன்குணர்வர்.

1982இல் திரு முத்துக்குமாரசாமி இறைபதம் எய்தியதில் இருந்து தொடர்ச்சியாக 14 ஆண்டுகளாக, நாவலருக்கு விழா எடுத்த பெருமை இந்த அம்மணியையே சேரும். இவருக்கு பிரித்தானியா சைவத் திருக்கோவில் ஒன்றியம் **"நாவலர் நெறிக் காவலர்"** என்னும் பட்டத்தைக் கொடுத்து கௌரவிப்பதில் பெருமை கொள்கிறது.

உ



# பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர்
வேதாகம சோதிட பூஷணம் சிவாச்சார்ய திலகம்
**சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள்**

வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் ஐந்தையும் உள்ளடக்கியதே பஞ்சாங்கம் எனப்படும். நாளாந்த வாழ்க்கையில் நாம் பார்க்கின்ற நட்சத்திரங்கள், திதிகள், சுபமுகூர்த்தங்கள்,சிரார்த்தாதி கருமங்கள், விரதங்கள், ஆலய விழாக்கள் முதலியவற்றை அறிவதற்கும் ஜாதகம் கணிப்பதற்கும் பஞ்சாங்கமே அடிப்படையானதாகும். பஞ்சாங்கம் இல்லையாயின் நாம் திதிகளையோ, நட்சத்திரங்களையோ, விரதங்களையோ, அறிவது சாத்தியமாகாது. ஆகவே பஞ்சாங்கம் பற்றிய விஷயங்களை எல்லோரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்கு சில வானசாஸ்திர விஷயங்களும் அடிப்படையாகத் தேவை.

கால வாய்ப்பாடு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 60 தற்பரை | - | 1 விநாடி | 60 செக்கன் | - | 1நிமிஷம் |
| 60 விநாடி | - | 1 நாடி | 60 நிமிஷம் | - | 1மணி |
| 60 நாடி | - | 1 நாள் | 24 மணி | - | 1 நாள் |
| 60 விகலை | - | 1 கலை | 2 1/2 விநாடி | - | 1 நிமிஷம் |
| 60 கலை | - | 1 பாகை | 1 நாடி | - | 24 நிமிஷம் |
| 30 பாகை | - | 1 இராசி | 2 1/2 நாடி | - | 1மணி |

ஒரு வருடம் என்பது 365 நாள் 6 மணி 9நிமிடம் 9.7 செக்கன் கொண்டதாகும். இதை ஒரு சௌர வருடம் என்றும், ஒரு மனித வருடம் என்றும் சொல்லுகிறோம். தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் முடியவுள்ள 6 மாதங்கள் உத்தராயண காலம். இது தேவர்களுக்கு ஒரு பகல். ஆடி மாதந் தொடக்கம் மார்கழி முடியவுள்ள 6 மாதகாலம் தஷிணாயன காலம். இது தேவர்களுக்கு இராக்காலம். இவ்விரண்டு அயனங்களும் சேர்ந்த காலம் மனிதர்களுக்கு ஒரு வருடம். தேவர்களுக்கு ஒரு நாள்.

| | | |
|---|---|---|
| 360 மனித வருடம் | - | ஒரு தேவ வருடம் |
| 17,28,000 மனித வருடம் | - | கிருதயும் |
| 12,96,000 மனித வருடம் | - | திரேதாயுகம் |
| 8,64,000 மனித வருடம் | - | துவாபரயுகம் |
| 4, 32,000 மனித வருடம் | - | கலியுகம் |

மொத்தமாக 43,20,000 வருடங்கள் ஒரு சதுர்யுகம்

| | | |
|---|---|---|
| 71 சதுர்யுகம் | - | ஒரு மனுவந்தரம் |
| 1000 சதுர்யுகம் | - | ஒரு கற்பம். இது 14 மனுவந்தரங்களையுடையது. |
| 1000 சதுர்யுகம் | - | பிரம்மாவுக்கு ஒரு பகல் |
| 2000 சதுர்யுகம் | - | பிரம்மாவுக்கு ஒரு நாள் |
| 2000 X 360 சதுர்யுகம் | - | பிரம்மாவுக்கு ஒரு வருடம் |

இப்படியாக பிரம்மாவுக்கு 100 வருடம் உண்டு. இப்பொழுது இருக்கும் பிரம்மாவுக்கு 50 வயதாகி முதல் பரார்த்தம் முடிந்து இரண்டாவது பரார்த்தத்தில் முதலாவது கற்பம் நடக்கிறது. இந்த சுவேதவராஹ கற்பத்தில் 6 மனுவந்தரங்கள் கழிந்து ஏழாவதாகிய வைவஸ்வதமனுவந்தரத்தில் 27 சதுர்யுகங்கள் சென்று 28- வது சதுர்யுகத்தில் கிருத, திரேத, துவாபர யுகங்கள் முடிந்து 5103- வது வருடமாக இந்த விஷு வருடம் நடக்கிறது.

வானசாஸ்திர ரீதியில் சூரியனை புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்கள் வலம் வருகின்றன. இதில் புதன், சுக்கிரன் அகக்கிரகங்களென்றும் ஏனையவை புறக்கிரகங்களென்றும் சொல்லப்படும். அதாவது புதன், சுக்கிரன், சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலும் ஏனைய கிரகங்கள் பூமிக்கு வெளியிலும் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| புதன் சூரியனைச் சுற்றிவர | 88 | நாட்கள் செல்லுகின்றன. |
| சுக்கிரன் சூரியனைச் சுற்றிவர | 225 | நாட்கள் செல்லுகின்றன |
| பூமி சூரியனைச் சுற்றிவர | 365.26 | நாட்கள் செல்லுகின்றன. |
| செவ்வாய் சூரியனைச் சுற்றி வர | 1.88 | வருடம் செல்லுகின்றன. |
| வியாழன் சூரியனைச் சுற்றி வர | 11.89 | வருடம் செல்லுகின்றன |

என்று சொல்லப்படும். மேடாயனத்தில் சூரியன் பிரவேசிக்குங் காலமும், அசுவினி ஆரம்ப ஸ்தானமும் ஒன்று என முன்னர் கூறினோம். அபனாம்ச வித்தியாசத்தால் மேஷாயன ஆரம்ப ஸ்தானம் ஏறக்குறைய 23 நாட்கள் முன்னதாக நிகழ்ந்து விடுகிறது.

பஞ்சாங்கத்தில் விரதங்கள் முதலியன குறிக்கப்படும்போது சில விரதங்கள் முதலியன குறிக்கப்படும்போது சில விரதங்கள் சௌரமாசப்படியும்,சில விரதங்கள் சாத்திரமாசப்படியும் குறிக்கப்படுகின்றன. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய மாதப் பெயர்களே சூரியனுடைய இராசிப்பிரவேசத்தைக் கொண்டு குறிக்கப்படுவனவாகும். இவை சௌர மாதங்கள் எனப்படும். சைத்ரம் , வைசாகம், ஜ்யேஷ்டம், ஆஷாடம், சிராவணம், பாத்ரபதம், மார்க்கசிரம், பௌஷம், மாகம், பாற்குனம் எனப்படும் 12 மாதப்பெயர்களும் சாந்திர மாதத்தைக் குறிப்பனவாகும். சூரியனுடைய இராசிப் பிரவேத்தைக் கொண்டே மாதப்பிறப்புக்கள் குறிக்கப்படுகின்றன. சூரியனுடைய இராசிப் பிரவேசம் பகற்காலத்தில் நிகழுமானால் அன்று தமிழ்மாத முதல் திகதியும், சூரிய அஸ்தமனத்தின் மேல் நிகழுமானால்_மறுநாள் தமிழ்மாத முதலாந்திகதியும் குறிக்கப்படுகின்றன.

இதனால் தமிழ் மாத திகதிகள் ஒரே சீராக இல்லாமல் சில மாதங்கள் 31 நாட்களும் சில மாதம் 32 நாளும் சில மாதங்கள் 29 நாட்களும் வருகின்றன. ஆங்கிலத் திகதிகள் ஒவ்வோர் மாதமும் இத்தனை திகதிகள் என நிரந்தரமாகக் குறிக்கப் பட்டுள்ளது. தமிழ் மாதத் திகதிகளும் ஆங்கில மாதத் திகதிகளைப் போல் 1957 -ம் ஆண்டில் இந்திய அரசாங்க பஞ்சாங்க சீர்திருத்த சபையினரால் (Indian Calendar Reform Committe) நிரந்தரமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனில் மார்ச் 22ல் வருஷாரம்பம் வரும்.இது சைத்ரம் 1ம் திகதி ஆரம்பிக்கும். லீவ் வருடத்தில் மார்ச் 21ம் திகதி சையித்திரம் 1ம் திகதி ஆரம்பிக்கும். ஏப்பிரல் 21ம் திகதி வைசாகமும் மே22ம் திகதி யேஸ்டமும் யுன் 22ம் திகதி ஆஷாடமும் யூலை 23ம் துகதி சிராவனமும் ஆகஸ்ட் 23ம் திகதி பாந்திரபதமும் செப்டம்பர் 23ம் திகதி ஆசுவினமும் அக்டோபர் 23 ல் கார்த்திகமும் நவம்பர் 22ல் அக்ரஹரியமும், டிசம்பர் 22ல் பௌஷமும், ஜனவரி 21ல் மாகமும், பெப்ருவரி 20ல் பாற்குனமும் ஆரம்பிக்கும். இவ்வாறு அவர்கள் தீர்மானித்துள்ளார்கள். இந்த வழிமுறையை எல்லோரும் பின்பற்றினால் திகதி வித்தியாசம் ஏற்படாமல் தமிழ் திகதிகளை ஒரே சீராக நாம் கைக்கொள்ள முடியும். சாயன ரீதியில் குறிப்பிடும்போது எமது தமிழ் மாதப்பிறப்பிற்குஏறக்குறைய 23 நாட்கள் முன்னதாக இந்த சாயன மாதப்பிறப்பு நிகழ்கிறது. இதனையே திருக்கணித பஞ்சாங்கத்தில் இடபாயனம், மிதுனாயனம், கடகாயனம், சிம்மாயனம், கன்யாயனம், துலாயனம், விருச்சிகாயனம், தனுராயனம், மகராயனம், கும்பாயனம், மீனாயனம், மேடாயனம் எனக் குறிப்பிட்டிருக்கின்றோம். இதையே இந்திய பஞ்சாங்க சீர்திருத்த சபையினர் வெளியிட்டுள்ளார்கள். எனவே சித்திரை வருடப்பிறப்புக்கு 23 நாட்கள் முன்னதாக மேடாயனம் என்றும் சாயனவருடப் பிறப்பென்றும், விஷு புண்ணியகாலம் என்றும் பங்குனி 6ம் அல்லது 7-ம் திகதியில் குறிப்பிட்டிருப்பதை அவதானிக்கலாம். இதுவே உண்மையான விஷுபுண்ணியகாலமாகையால் சித்திரை வருடப்பிறப்பன்று விஷு புண்ணியகாலம் என்று சொல்லுவது ஒவ்வாததாகும்.

<u>விரதங்கள்</u>

பஞ்சாங்கத்தில் குறிக்கப்படும் விரதங்கள் சில சாந்திரமானப் படியும், சில சௌரமானப்படியும் குறிக்கப்படுவதாகும். சௌர சாந்திர மானங்கள் பற்றி முன்னர் கூறப்பட்டுள்ளது. பஞ்சாங்கம் நிரயன முறைப்படியே வெளியிடப்படுகின்றன. ஸாயன கிரகஸ்புடத்திலிருந்து அயனாம்சம் கழிக்கப்பட்டதே நிரயன ஸ்புடமாகும். ஒவ்வொரு சாந்திர மாதத்திலும் சூரியனுடைய சங்கிராந்தி நிகழும். எந்தச் சாந்திர மாதம் சூரியனுடைய சங்கிராந்தியைப் பெறவில்லையோ அந்தச் சாந்திர மாதம் அதிகமாதம் அல்லது மலமாசம் என்று நீக்கப்படும். இந்த அதிக மாதத்தில் சுபமுகூர்த்தங்கள் மற்றும் முக்கிய விரதங்கள் கொள்ளப்படமாட்டா.

அதாவது ஒவ்வொரு மாதத்திலும் முந்திய அமாவாசைக்கு அடுத்த நாள் தொடக்கம் அந்த மாதத்தில் வரும் அமாவாசை முடிய உள்ள காலம் சாந்திரமாதம் ஆகும். 3 சௌர வருஷத்தில் 37 சாந்திர மாதம் நிகழும். எனவே சௌர மாதத்துடன் சாந்திர மாதம் இணங்கிச் செல்லும் பொருட்டு 1 மாதத்தில் 2 அமாவாசை நிகழ இடையிலுள்ள சாந்திர மாதம் அதிக மாதம் என நீக்கப்படுகிறது. இந்த நிரயன கணித முறையை நமக்கு ஆக்கித்தந்தவர் இந்தியவான சாஸ்திரியாகிய வராஹமிஹிரர் ஆவர். இவ்வாறு சௌர மாதத்துடன் சாந்திர மாதம் இணங்கிச் செல்லாமல் இருந்தால் குறிப்பிட்ட ஒரு மாதத்தில் அனுட்டிக்க வேண்டிய நவராத்திரி, கந்தஷஷ்டி போன்ற விரதங்கள் எல்லா மாதங்களிலும் அனுஷ்டிக்க வேண்டி ஏற்படும். நிரயன கணித முறையால் அவை குறிப்பிட்ட மாதம் தவறாமல் அனுட்டிக்கக் கூடியதாக இருக்கிறது.

விரதங்களை நோக்கும் போது ஒவ்வோர் விரதத்துக்கும் வியாபககாலம் வேறுபடுகின்றது. பஞ்சாங்கங்களில் விரதங்கள் ஏன் வேறுபடுகின்றன என்று பலர் கேட்கின்றார்கள். திதி, நட்சத்திர முடிவுகளை அடிப்படையாக வைத்தே விரதங்கள் குறிக்கப்படுகின்றன. திதி, நட்சத்திர முடிவுகளில் பஞ்சாங்கங்களுக்குப் பஞ்சாங்கம் வித்தியாசப் படுவதனாலேயே அதனை அடிப்படையாகக் கொண்ட விரதங்களும் வேறுபடுகின்றன. பஞ்சாங்கங்கள் எல்லாம் ஒரே சீராக வேறுபாடின்றி கணிக்கப்படுமேயானால் விரதங்கள்,

விழாக்கள்,முதலியவற்றில் வித்தியாசம் ஏற்பட நியாயமில்லை. சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம், ஆவணி ஓணம், தைப்பூசம், திருக்கார்த்திகை, மாசிமகம், பங்குனி உத்தரம் முதலியன அந்தந்த மாதத்தில் வரும் பௌர்ணமியோடு சேர்ந்த நட்சத்திரங்களின் பெயரைக் கொண்டே அந்த மாதப் பெயரும் அழைக்கப்படுகின்றது. சித்திரைச் சித்திரையில் சித்திரை மாதமும், வைகாசி மாதத்தில் வைசாகமும் போன்று ஏனையவையும் வருகின்றன.

30 நாழிகை கொண்ட 1 நாள் ப்ராதக் காலம், பூர்வான்னம், மத்தியான்னம், அபரான்னம், ஸாயான்னம் என்னும் 5 காலம் பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு காலமும் 6 நாழிகை கொண்டதாகும். இதில் அபரான்னம் என்ற காலப் பகுப்பு சிரார்த்தாதி கருமங்களுக்கு அதாவது பிதிர் கருமங்களுக்கு உரியதாகும். இதில் பகல் 30 நாழிகை கொண்டதாயின் 18 நாழிகை முதல் 24 நாழிகை அபரான்னமாகும். (மணி 1.12 p.m முதல் 3.36 p.m. வரையாகும்) இது பிதிர்களுக்குரிய காலமாகும். இக்காலத்திலேயே சிரார்த்தாதி கருமங்களை செய்ய வேண்டும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. பஞ்சாங்கத்தில் மாதப் பக்கம் வலது கைப்பக்கத்தில் சிராத்ததிதிகள் என்று ஒரு நிரல் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். பூரணை விரதம், அமாவாசை விரதம் ஆகியன இந்த அபரான்ன காலத்தை அனுசரித்தே குறிக்கப்படுகின்றன. ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை ஆகியனவற்றிற்கு சூரிய உதயத்தின் போது வியாபகம் இருக்க வேண்டும். மகாசிவராத்திரியை எடுத்துக் கொண்டால் நிசீதவியாபகம் (இரவு 12 மணிக்கு ) இருக்க வேண்டும். கார்த்திகை விரதம், ஷஷ்டி விரதம் என்பன ஸாயான்னம் வியாபகத்தைக் கொண்டவை. சங்கட சதுர்த்தி (அதாவது அபர பக்கச் சதுர்த்தி) சந்திர உதயத்தின் போது வியாபகமாக இருத்தல் வேண்டும். 2 விரதங்கள் ஒரே நாளில் வரும் போது வியாபகமாக இருத்தல் வேண்டும். அவ்வவற்றிற்குரிய காலத்தில் அனுஷ்டிக்க வேண்டும். உபவாசத்துடன் வேறு விரதம் சேருமானால் அன்று உணவருந்தாமல் உபவாசமிருத்தல் வேண்டும். அமாவாசையுடன் தீபாவளி சேர்ந்தால் எண்ணையின்றி ஸ்நானஞ் செய்ய வேண்டும். சனிக்கிழமை விரதத்தன்று வேறு எந்த விரதம் சேர்ந்தாலும் எண்ணையில்லாமல் ஸ்நானஞ்செய்து விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

## சுபமுகூர்த்தங்கள்

ஒவ்வொரு சுபமுகூர்த்தத்துக்கும் அவற்றிற்குரிய நட்சத்திரங்கள், திதிகள், இலக்கினங்கள் என்பன திருக்கணித பஞ்சாங்கத்தில் கொடுக்கப்படுகின்றன. முகூர்த்தம் அமையும் இலக்கித்துக்கு 1, 4.5, 7- 10-ம் இடங்களில் சுபக்கிரகங்களும், 3,6-ம் இடங்களில் அசுபகிரகங்களும் இருத்தல் நன்று. 11 -ம் வீட்டில் எல்லாக்கிரகங்களும் நன்று. 8-ம் இடத்தலு் ஒரு கிரகமும் இருக்கக் கூடாது. சுத்தமாக இருக்கவேண்டும். அஷ்டமி, நவமி, மரணயோகம் முதலியனவும் அவதானுத்தல் அவசியம். பஞ்சாங்கத்தில் தரப்பட்டுள்ள முகூர்த்தங்கள் பொது மூகூர்த்தங்களாதலின், ஒருவருக்கு சுபமுகூர்த்தம் பார்க்கும் போது படுபட்சியில்லாமலும் நட்சத்திரப் பட்சி ஊண் அரசாக இருக்கும் காலத்திலும் இருத்தல் நன்று. எனவே ஒவ்வொரு வரும் தமக்குப் பொருத்தமான சுபமுகூர்த்தத்தையே தெரிந்தெடுக்க வேண்டும்.

## இராகு காலம்

சுபமுகூர்த்தத்துக்கு அராகுகாலம் அவசியம் விலக்கப்படவேண்டும். இராகுகாலம் என்பது ஒவ்வோர் தினத்திலும் சுபகருமங்களுக்கு விலக்கப்பட்ட நேரமாகும்.

“திருவிழா சந்தடியில் வெளியே புறப்பட்டு விளையாடச் செல்வது ஞாயமல்ல.”

இதில் கிழமையின் முதலெழுத்துக்கள் தரப்பட்டிருக்கிறது. எவ்வாறெனில் தி-திங்கள், ச- சனி, வெ- வெள்ளி, பு- புதன், வி- வியாழன், செ- செவ்வாய், ஞா- ஞாயிறு.

பகலின் அளவை 8 பாகமாகப் பிரித்து, முதலாவது பாகத்தை தவிர்த்து ஏனைய 7 பாகத்தையும் முறையே திங்கள், சனி, வெள்ளி, புதன், வியாழன், செவ்வாய், ஞாயிறு, என்ற 7 கிழமைகளுக்கும்.வகுத்து அதனை அன்றைய சூரிய உதயத்துடன் கூட்ட இராகுவின் ஆரம்ப காலம் வரும்.

மணிக்கணக்கில்:-

| | |
|---|---|
| திங்கள் | - 7.30மணி |
| சனி | -9.00 மணி |
| வெள்ளி | - 10.30 மணி |
| புதன் | -12.00 மணி |
| வியாழன் | - 1.30 மணி |
| செவ்வாய் | - 3.00 மணி |
| ஞாயிறு | - 4.30 மணி |

இக் காலம் முதல் 1 1/2 மணி நேரம் இராகு காலமாகும். இது பகலினளவு 30நாழிகை (12 மணி) யாக உள்ள தினங்களுக்கே உள்ளது.

பகலினளவின் ஏற்றத்தாழ்ச்சிக்கு ஏற்ப இதனை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும். 30 நாழிகைக்கு மேற்பட்ட காலங்களில் இராகுகாலம் 11/2 மணிக்கு மேற்பட்டும் 30 நாழிகைக்கு குறைந்த காலங்களில் 11/2

| | | |
|---|---|---|
| சனி சூரியனைச் சுற்றி வர | 29.46 | வருடம் செல்லுகின்றன. |
| யுரேன்ஸ் சூரியனைச் சுற்றிவர | 84.02 | வருடம் செல்லுகின்றன. |
| நெப்டியூன் சூரியனைச் சுற்றிவர | 164.79 | வருடம் செல்லுகின்றன. |
| புளுட்டோ சூரியனைச் சுற்றிவர | 249.17 | வருடம் செல்லுகின்றன. |

பூமியும் ஒரு கிரகமாகும். எல்லாக் கிரகங்களும் சூரியனைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. நாம் பூமி என்னும் கிரகத்தில் வசிப்பதால் சூரியன் பூமியைச் சுற்றிவருவது போல் எமக்குத் தோன்றுகிறது. பஞ்சாங்கங்கள் பூமியை மத்தியாக வைத்தே கணிதம் செய்யப்படுகின்றன.

சந்திரன் பூமியையும் சுற்றி சூரியனையும் சுற்றி வருகின்றது. சந்திரன் பூமியை சுற்றிவர (SIDERAL REVOLUTION OF THE MOON ROUND THE EARTH) 27 நாள், 7மணி, 43 நிமிடம், 11செக்கன் ஆகும்.

இராகு கேது ஆகிய இரண்டும் வானசாஸ்திராரீதியில் கிரகங்கள் அல்ல. பூமி சூரியனைச் சுற்றிவரும் போது சந்திரன் பூமியைச் சுற்றி வருகின்றது. அப்பொழுது இவ்விருபாதைகளும் சந்திக்கும் இரு புள்ளிகளையே ஒன்று இராகு என்றும் மற்றயதை கேது என்றும் சொல்லப்படும். இவை வலிமைமிக்க புள்ளிகளாகும். இரண்டும் ஒன்றுக்கொன்று 180 பாகை தூரத்தில் எதிர் எதிராக இருக்கும். ஆனால் ரீதியில் இராகு கேதுகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

## இராசி மண்டலம்

பூமி சூரியனைச் சுற்றிவருகின்ற மார்க்கத்திற்கு **பூவீகி** என்று பெயர். இதற்கு "இராசிச்சக்கரம் கிராந்திவிருந்த்தம்" முதலிய பெயர்களும் உண்டு. இந்த கிராந்திவிருத்தம் 360 பாகைகளைக் கொண்டது.இது 12 இராசிப்பிரிவுகளாகவும், ஒவ்வொரு இராசியும் 30 பாகை கொண்டதாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதனையே அசுவினி முதல் ரேவதி வரையான 27 நட்சத்திரப் பிரிவுகளாகவும் கொள்ளப்பட்டது. இதனால் இராசி ஒன்று 2 1/4 நட்சத்திரங்களையும், நட்சத்திரம் ஒன்று 13 பாகை 20 கலையையும் கொண்டதாகும்.

## அயனாம்சம்

நிரயன மேஷாரம்பத்தில் இருந்து மேஷாயனம் இராசி மண்டலத்தில் இடப்பக்கமாக மேற்கு நோக்கி பெற்றிருக்கும் தூரமே அயனாம்சம் எனப்படும். இது வருடம் ஒன்றுக்கு சராசரி 50.3 விகலை அதிகரிக்கும். முன்பு கூறப்பட்ட மேஷாரம்ப ஸ்த்தானமும் அசுவினி நட்சத்திர ஆரம்பஸ்த்தானமும் முன்பு ஒன்றாகவே இருந்தது. இது ஒன்றாக இருந்த காலத்தைப் பற்றி கருத்துவேறுபாடுகள் உண்டு. N.C. லாகிரி அவர்கள் கி.பி 285 ஆம் ஆண்டிலே இவை ஒன்றாக இருந்ததாக கூறியிருக்கிறார். B.V .ராமன் அவர்கள் ஒருவிதமாகவும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இன்னொரு விதமாகவும் கணக்கிடுகிறார்கள். இதனால் ஒவ்வொருவருடைய அயனாம்சத்தில் வேறுபாடு காணப்படுகின்றது. இந்திய அரசாங்க பஞ்சாங்க சீர்திருத்த சபையினர் (Indian Calendar Reform Committe) லாகிரி அயனாம்சத்தையே சிபார்சு செய்துள்ளார்கள். இவ்வருட அயனாம்சம் 23 பாகை 52 கலை வரை நகர்ந்து விட்டது.

## சௌர வருடம்

சூரியன் மேடராசியின் தொடக்கமாகிய அசுவினி நட்சத்திரத்தில் பிரவேசித்து மீன இராசியின் அந்தமாகிய ரேவதி நட்சத்திரத்தில் நின்றும் நீங்கும் வரையுள்ள காலமாகும். (Siderial Revalution of The Earth Round the Sun ) ,இக்காலம் 365 நாள், 6 மணி 9நிமிடம் 9.7 செக்கன் ஆகும், இந்த சூரியனுடைய இராசிப் பிரவேசத்தையே நாம் மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு என்று கொள்ளுகின்றோம்.

## சாந்திர வருடம்

ஒரு சௌர வருடப்பிறப்பிற்கு முன் அதனை அடுத்து நிகழும் பூர்வபட்ச பிரதமை முதல் அடுத்த சௌர வருடப்பிறப்பிற்கு முன் நிகழும் அமாவாசை முடியவுள்ள காலமாகும். இது ஏறக்குறைய 354 நாட்கள் கொண்டதாகும். ஒரு சாந்திர மாதம் 291/2 நாட்களைக் கொண்டது.

## சாயன வருடம்

மேஷாயன விஷுவத்தில் சூரியன் பிரவேசித்து மறுபடியும் மேற்படி விஷு வத்தை அடையும் வரையள்ள காலம் (Tropical Revalution of The earth Round The Sun) இக் காலம் 365 நாள் 5 மணி 48 நிமிடம் 45.6 செக்கன் ஆகும்.

பூமிக்கு மத்தியில் பூமத்திய ரேகைக்கு சமாந்தரமாக ஆகாயத்தில் இருப்பதாக கொள்ளப்படும் ரேகை விஷு ரேகை எனப்படும். சூரியனுடைய சஞ்சாரம் ஆனது பூமத்தியரேகைக்கு வடக்கே 23 1/2 பாகை வரையிலும் உள்ள இடைவெளியைக் காட்டும். எனவே சூரியனுடைய சஞ்சாரத்தின் போது ஒரு வருடத்தில் 2 தினங்களில் சூரியன் விஷு ரேகையை கடக்கிறான். இந்த இரண்டு ஸ்தானங்களில் ஒன்று "வசந்த விஷுவம்" என்றும் சொல்லப்படும். இந்திய வானசாஸ்திரிகள் சரத்விஷுவம் குளிர்காலமாகையால் கொண்டாட்டத்திற்கு வசதி அற்றது எனக்கருதி வசந்த விஷுவத்தையே வருஷப்பிறப்பாக கொண்டனர். இதுவே நாம் கைக்கொள்ளும் வருடப்பிறப்பு தினமாகும். சூரியன் விஷு ரேகையை கடக்கும் காலமே விஷு புண்ணியகாலம்

மணிக்கு குறைந்தும் காணப்படும். திருக்கணித பஞ்சாங்கம் 75ம் பக்கத்தில் பகலின் அளவுக் கேற்ப இராகு காலம் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. இராகுகாலம் பகற்காலத்துக்கு மட்டுமே உரியது.

<u>கிரணங்கள்</u>

சூரியனை பூமி சுற்றிவருகிறதென்றும் சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறதென்றும் முன்னர் அறிந்தோம். அவ்வாறு வரும்போது சூரியனுக்கும் பூமிக்குமிடையில் நேர்கோட்டில் சந்திரன் வரும்போது அமாவாசையும், சூரியனுக்கும் பூமிக்கு வெளியில் சந்திரன் வரும்போது பௌர்ணமியும் நிகழும். அப்போது அமாவாசைத் தினத்தில் பூமியுள்ளவர்களுக்கு சந்திரன் சூரியபிம்பத்தை மறைப்பது தோற்றும். இதனை சூரிய கிரகணம் என்று சொல்லுகிறோம். இவ்வாறு சூரிய பிம்பத்தின் ஒரு பகுதி மறைக்கப்படும்போது பார்சுவ சூரிய கிரகணமென்றும். முழுவதும் மறைக்கப்படும் போது பூரண சூரியகிரகணமென்றும், சூரிய பிம்பத்தின் நடுப்பகுதி மாத்திரம் மறைக்கப்பட்டு சுற்றிவர காப்புப்போல தோற்றும் போது கங்கண சூரிய பிம்பத்தை மறைக்கும் போது பூமியின் எல்லா இடத்திலும் கிரகணம் தோற்றாது. பூரண கிரகணத்தின்போது சில இடங்களின் பூரண கிரகணமாகவும், சில இடங்களில் பார்சுவகிரகணமாகவும், சில இடங்களில் கிரகணம் இல்லாமலும் இருக்கும்.

சூரியனுக்கும் சந்திரனுக்குமிடையில் பூமிவரும்போது பௌர்ணமி காலமாகும். பௌர்ணமியில் சந்திரகிரகணம் நிகழும். ஒரு திடப்பொருளுக்கு ஒரு புறத்தில் ஒளி இருந்தால் அதற்கு சாயை உண்டாகி அந்தச் சாயை மறுபறத்தில் விழுகிறது. இதேபோல் சூரியனுக்கும் சந்திரனுக்குமிடையில் பூமி வரும்போது சூரிய ஒளியினால் பூமிக்கு சாயை உண்டாகிறது. இந்தச் பூச்சாயை மறு பக்கத்திலிருந்து சந்திரனை மறைக்கிறது. இதனால் சந்திர கிரகணம் உண்டாகிறது. பூச் சாயை சந்திரனை மறைப்பதால் பூமியில் சந்திரன் தோற்றக்கூடிய இடங்களிலெல்லாம் சந்திர கிரகணம் தெரியும். சந்திரனில் பூரண கிரகணம், பார்சுவ கிரகணம் இரண்டுமே தெரியும். சந்திரபிம்பத்திலும் பார்க்க பூமி பெரிதாய் இருப்பதால் சந்திரனில் கங்கண கிரகணம் நிகழ்வதில்லை. சூரிய சந்திரர்களை பாம்பு விழுங்கி பின்னர் விடுகிறது என்ற சமயக் கதைகளும் உண்டு.

ஆலய விழாக்கள் குருபூசைத் தினங்கள் போன்றவை சௌரமானத்தை அனுஷ்டித்தே செய்யப்படுகின்றன. அந்தந்த மாதத்திலே கொள்ளப்படும் விழாக்கள் குறிப்பிட்ட மாதத்திலே நிகழவேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். சில விழாக்கள் மாதத்தின் முற்பகுதியிலே தீர்த்தோற்சவம் வருமாயின் ஆரம்பம் அதற்கு முந்திய மாதத்திலேயே கொள்ளப்படும்.

ஒருவர் இறந்த தினத்தைக் கொண்டாடும் சிராத்த திதிகளும் அவர் இந்த மாதம் திதியிலேயே ஒவ்வொரு வருடமும் கொள்ளப்பட வேண்டுமென்று நியதி உண்டு.

பஞ்சாங்கத்திலுள்ள திதி, நட்சத்திரங்களின் நேரங்கள் முதலியன ஒவ்வோர் இடத்துக்கும் அந்தந்த நாட்டின் நேரப்பிரகாரம் வேறுபடும். எமது திருக்கணித பஞ்சாங்கம் கடந்த 8 வருடமாக லண்டன் மக்கள் இலகுவாகப் பார்த்தறியத்தக்கதாக லண்டன் பொது நேரப்படி வளியிடப்பட்டள்ளது. இதனால் யாழ்ப்பாண நேரப்படி திதி, நட்சத்திரங்கள், விரதங்கள் முதலியவற்றை பிழையாகக் கொள்ளாது லண்டன் நேரப்படி கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தை அனுசரித்து உரிய காலத்தில் அஷ்டித்து நற்பயனடைவார்களாக.

லண்டன் பஞ்சாங்கத்தில் இன்னும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய, திருத்தப்பட வேண்டிய விஷயங்களை பாவனையாளர்கள் எமக்கு அறியத்தந்தால் அதனை பரிசீலித்து ஆவன செய்வோம்.

இவ்வாறு பஞ்சாங்க விஷயங்களை அனைவரும் அறிந்து உரிய காலத்தில் அந்தந்தக் கருமங்களைச் செய்து நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வணங்கி விடைபெறுகிறேன்.




சென்ற ஆண்டு பரிசில் பெற்ற மாணவிக்கு தவத்திரு மருதாசலம் அடிகள் விரிது வழங்குகிறார்

# Sathy Property Services

## Sathy Estates Limited

**RESIDENTIAL LETTINGS**

**LANDLORDS:** Your rent is guaranteed
Quarterly rent payable in advance

**TENANTS:** Accommodation arranged to suit your comfort

**AREAS:** Willesdon, Harlesdon, Wembley, Harrow, Sudbury, Kingsbury, Kilburn

177 High Road
Willesdon
London NW10 2SD

Tel: 020 8830 2583(2 lines)

Fax: 020 8830 3100

Mobile: 07956 483 308

# darren estate

## Estate Agents

**Sales**
**Letting & Management**





**May Lord Ghanapathy shower**
**His choicest Blessings upon the Conference,**
**the organisers and all the devotees.**

**15 KINGSTON ROAD**
**SOUTH WIMBLEDON**
**LONDON SW19 1JX.**

**Tel: 020 8542 1717**
**Fax: 020 8543 4030**
**Website:www.darrenestate.com**
**Email: letting@darrenestate.com**

# DON'T SIGN ANYTHING UNLESS YOU SEE THIS SIGN

INDEPENDENT FINANCIAL ADVISER

Only an Independent Financial Adviser
works for you in recommending the best life assurance,
pensions or unit trusts on the market.
To be sure you get the best deal, contact us.

with
BEST COMPLIMENTS FROM

## Rama & Company

*INDEPENDENT FINANCIAL ADVISERS*

'Regulated By The Personal Investment Authority'

P I A
Personal • Investment • Authority

3 THE ORCHARD
WICKFORD, ESSEX
SS12 0HB, ENGLAND.

Rama

Tel: (01268) 766624
Mobile: 07956 369557
Fx: 01268 561805

INDEPENDENT

# M.K. SRI & CO

Solicitors
&
Administrators of oaths

2c, Fairholme Road,
(Off Station Road)
Harrow, Middlesex HA1 2TN

Tel: 020 8515 7000 (4Lines)
Fax: 020 8515 7030
Fax: 020 8515 7031 (For Conveyancing only)

DX : 4232 Harrow (1)

We specialise in:

*IMMIGRATION
*CONVEYANCING
*TRAFFIC OFFENCES
* CRIME
* MATRIMONIAL
* STATE BENEFITS

* Advice & Assistace at police station

LEGAL AID WORK UNDERTAKEN

We are franchised
by the legal services commission

Principal
M.K. Sritharan

Assistant solicitors
S. Ravindran
S. Sivasanthiran
V. Ratnam

Trainee solicitors
Avtar manku
Selvi Ravindran

*Best compliments*

*from*

# *YOGA RAJAH & CO*

## *SOLICITORS*

*Commissioners for Oaths*

*Legal Services Available Include*

*Immigration*

*Family Matters*

*Criminal and Civil Litigation*

*Employment*

*Landlord & Tenant Law*

*Representation at*

*Police Station Home Office, Airports etc.*

*125 B Mitcham Road*
*Tooting*
*London SW17 9PE*

*Tel: 020 8672 1811*

*Fax: 020 8682 4240*

*Mobile: 07831 65 65 06*

மகாநாடு சிறப்புடன்

அமைய

வாழ்த்துகின்றோம்.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான
மளிகைப்பொருள்கள் இலங்கையிலும்
இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
உணவுப் பொருள்கள், மரக்கறி
வகைகள்,பழவகைகள். பழவகைகள்,
சஞ்சிகைகள் ஆகியவற்றுக்கு ஒரே இடத்தில்
நாடவேண்டிய ஸ்தாபனம்

# K. R. S ORIENTAL STORES

33 Lee High Road
Lewisham SE 13 5NS

**Tel: 020 8297 9432**

# ANGLO ASIAN MINI MART

மேலும் விஸ்தரிக்கப்பட்டு புதுப் பொலிவுடன்
காட்சியளிக்கின்றது.

அனைத்து வகையான நவீனரக உடுபுடவை வகைகள்
குழந்தைகளுக்குத் தேவையான ரெடிமேட் உடுப்புகள்
திருமண வைபவத்திற்குத் தேவையான தலைப்பாகை, பட்டு
வேட்டி சால்வை, அலங்காரப் பொருட்கள், கூந்தல் சோடினைகள்,
திரவியப் பொருட்கள்.
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசுமையான மரக்கறி
வகைகள், சமையலறைப் பாத்திரங்கள்.



## *Anglo Asian Mini Mart*

Specialists in Sri Lanka Groceries

K. THAYAPARAN

513 High Road Wembley,
Middx, HA0 4AG

Tel: 020 8900 2451
Mobile: 07956 425 707 Fax: 020 8903 8202

**PALM BEACH**

Fully Licenced

Finest Sri Lankan & South Indian Cuisine
Vegetarian & Non Vegetarian

10% Discount on take away

Specialised in Catering for

Wedding & Parties

5 Years catering experience

Open 12.00 noon to 3.00 p.m

6.00 pm to 11.30 pm

17A Ealing Road
Wembley
Middlesex HA0 4AA

Tel: 020 8900 8664
Tel: 020 8900 1990
Mobile: 07939 587 339

ஒரே நிர்வாகத்தில் நிமிர்ந்து நிற்கும் SUPERMARKET
வாடிக்கையாளருக்கு மனம் நிறைந்த 10 ஆண்டு சேவை

# BEST FOOD

லண்டனில் எங்கு பார்த்தாலும் இதைப்பற்றித்தான்
பேச்சு. பரபரப்பான விற்பனை. கேட்டு கேட்டு
வாங்குகிறார்கள் குறுகிய காலத்தில் தாயக
நினைவ தமிழர் நினைவுகளில் கொண்டு வரும்
ஒரே தனித்துவமான தயாரிப்பு.

"திரு"
பிராண்டு
"THIRU"
Brand

"யாழினி"
பிராண்டு
"YARLINI"
Brand

அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல்,
ஊறுகாய், வடகம், இன்னும் பல
உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம். மொத்தமாகப்
பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இந்தப் பொருட்களை விற்பனை செய்ய லண்டன் முழுவதும்
ஏஜெண்ட் தேவைப்படுகிறார்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.


## BEST FOOD

259 - 261 London Road
West Croydon,
Surrey CR0 2RL
Tel: 020 8684 6269 ,
Fax: 020 8665 5299

Specialised in Diamond Jewelleries

Specialised in 22 ct Gold Jewelleries

## From Miss Thayalini Sivasubramaniam Speech on the first saiva Conference



The Saiva after having migrated from all over the world, face an acute problem with the younger generation with regard to the culture and religion. Their questions are unanswered. Today the young generation needs more time and opportunity for reasoning out these things. Religion must both satisfy the demands of reasons and must bring comfort to the soul. If we are able to maintain a discipline and order that is because of a religious background given to us by our parents. Thus giving an opportunity for the young people to learn about our tradition and philosophy which will nurture their spiritual and moral needs.

## அமரர் சோ. சிவபாதசுந்தரம்



தமிழ் ஒலிபரப்புக்கலை பிதாமகன் என்ற பெருமையைத் தட்டிக்கொண்டவர் ஈழத்து முதுபெரும் அறிஞர் என்று பெரியோர்களால் அங்கிகரிக்கப்பட்டவர். இலண்டனில் B.B.C தமிழ்ச் சேவையை ஆரம்பித்து வைத்தவர் இலங்கை வானொலியின் அறிவிப்பாளராகவும் முதல் தமிழ் அதிகாரியாகவும் கடமையாற்றிய பெருமையும் அவரையே சார்ந்தது. இவர் சிறந்த எழுத்தாளரும் 1998ம் ஆண்டு நடைபெற்ற சைவ மகாநாட்டை திரம்பட நடாத்த பல ஆலோசனைகளை வழங்கிய என்றும் நாம் நினைவு கூருவோமாக.

சாந்தி சாந்தி சாந்தி


## அமரர் சின்னத்துரை சிவஞானம்



லண்டன் சிவன் கோவிலின் செயலாலராகவும் தமிழ்த் தகவல் நிலையத்தின் தலைவராகவும் பொதுத் தொண்டாற்றி பல பொதுத் தொண்டு அமைப்புகளுடன் இணைந்து சேவை புரிந்த மனிதருள் மாணிக்கமாக விளங்கிய இவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

சாந்தி சாந்தி சாந்தி

## அமரர் சுப்பிரமணியம் யோகராஜா (யோகராஜா மாஸ்டர்)



அவர் நாடகத் துரையிலும் எழுத்துத் துறையிலும் தனனை ஈடுபடுத்திக் கொண்டு உண்மைகள் உறங்குவதில்லை என்ற பெயருக்கு பல உருவங்களைக் கொடுத்து பல லட்சம் இதயங்களைக் கவர்ந்த மனித நேயம் கொண்ட சமூகத் தொண்டன் இவரும் சைவமகாநாட்டின் போது முழுமையான ஒத்துழைப்புக்களைத் தந்து ஊக்குவித்த பெருமகன்.

சாந்தி சாந்தி சாந்தி

# கரங்குவிக்கின்றோம்

மாநாட்டு பேராளர்களான தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளார், தவத்திரு சிவநந்தி அடிகளார், தமிழகப் பேராசிரியர்களான செல்வ கணபதி, பேராசிரியர் பாலறாவாயன், ஈழத்து பேராசிரியர் Dr. கலாநிதி அ. சண்முகதாஸ், திருமதி கலாநிதி சண்முகதாஸ், யாழ்ப்பாண நீதியரசர் உயர்திரு C.V.விக்கினேஸ்வரன்(இலங்கை), திருக்கணித சிதம்பரநாதக் குருக்கள், தமிழருவி சிவகுமாரன் ஆகியோருக்கும் தென் ஆபிரிக்காவிலிருந்து வருகை தந்துள்ள செல்வி இசைவாணி பிள்ளை அவர்கட்கும் பிரித்தானியா வாழ் பேராளர்களுக்கும், நாவன்மைப் போட்டியை நெறிப்படுத்திய திருவாளர்கள் பத்மமோகன், ராஜமனோகரன் ஆகியோருடன் இணைந்து செயலாற்றிய நடுவர்கள், விளம்பரம் தந்த பெருமக்கள், திருக்கோயில்களின் அறங்காவலர்கள், நிருவாக சபையினர், மாநாடு பற்றிய தகவல்களை பறைசாற்றிய சண்றைஸ், I B C , தீபம்,T T N, தமிழ் ஒலி, புதினம் ஆகிய ஊடகத்தினருக்கும் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்கள் வழங்கியவர்களுக்கும், இம்மலரை அழகுற அச்சுப் பதித்த JR அச்சகத்தினருக்கும், மாநாட்டிற்காக மண்டபங்களையும் உணவையும் வழங்கிய விம்பிள்டன் விநாயகர் ஆலயத்திற்கும், ஈலிங் கனக துர்க்கை அம்மன் அறங்காவலர்கள்,நிர்வாக அங்கத்தவர்கள் தொண்டர்கள் ஆகியோருக்கும், பேராளர்கள் சிலரை ஏற்பாடு செய்து தந்த திருவாளர்கள் ஆறு திருமுகன், சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை ஆகியோருக்கும், மாநாட்டுக்கு நந்திக் கொடிகளை அன்பளிப்புச் செய்த கலாநிதி தனபாலா JP(இலங்கை ),அவர்களுக்கும், மாநாட்டிற்கு பங்களிப்புச் செய்த அறிவிப்பாளர்கள், ஊடகப் பெருமக்கள்,உள்ளூர் கலைஞர்கள்,ஆகியோருக்கும், இந்தியாவில் இருந்து மாநாட்டிற்கு தேவையான பொருட்களை தருவித்து உதவிய திரு தி அருள்தாஸ் அவர்களுக்கும், மலரைத் திறம்பட உருவாக்குவதற்கு உதவிய திரு.சிறீரங்கன் ,திரு . முருகானந்தன் ஆகியோர்களுக்கும், பிரசுரங்களின் ஆக்கத்திற்குப் பின்புலமாக நின்று உதவிய திரு.சிவகுருநாதபிள்ளை இளங்கோ அவர்களுக்கும், வானொலி ஊடகத் தொடர்பை ஏற்படுத்தித் தந்த திரு வ.இ. இராமநாதன் அவர்களுக்கும், மகாநாட்டிற்கும் 2002ம் ஆண்டு நாட்காட்டிகளுக்கு விளம்பரங்களைப் பெற்றுத் தந்த சிவநெறிச் செம்மல் திரு. ந. சச்சிதானந்தம் அவர்களுக்கும் மாநாட்டை சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

## ஞாபகார்த்த தங்கப்பதக்கம்


| ஞாபகார்த்தவர்களின் பெயர் | | வழங்கியவர்கள் |
|---|---|---|
| அமரர் திருமதி. சந்திரசேகரி | | ச. தமிழ்ஞானம் |
| அமரர் திருமதி குட்டித்தம்பி | | தேவகுஞ்சரி, சிவஞானம் |
| அமரர் திருமதி அன்னபூரணம் | | |
| அமரர் செல்வநாயகம் | | செ. சற்குனானந்தன் |
| அமரர் க. விசுவலிங்கம் | | திவ்வியநாதன் |
| அமரர் அ. செல்லையாபிள்ளை | புங்குடுதீவு | திரு புண்ணியலிங்கம் |
| அமரர் சின்னத்தம்பி பொன்னையா | புங்குடுதீவு | திரு வாகன் |
| அமரர் அ. அன்னப்பிள்ளை | புங்குடுதீவு | திரு காந்தரூபன் |
| அமரர் சண்முகம் இளையதம்பி | புங்குடுதீவு | திரு கந்தசாமி |
| தயாளினி சிவசுப்பிரமணியம் | | திருமதி சிவசுப்பிரமணியம் |

## Donation - Gold Medal

CCR Insurance Brokers
Vasan & Co Auditors & Accountants
Lotus Properties & Investmenrs
Sritharan Solicitors
Duvaraka Cash & Carry

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

*If Quality of Life is Important to You....
then the Quality of Your Surroundings
is not a Subject for Compromise.*




**Building Quality
for Individuals who Expect the Best**

Construction Director ▶ **Ranjith Ratnasingham BEng. (Hons) MBA**
Architectural Director ▶ **Julian Talbot-Brady BArch. RIBA MBA**

Architectural Design ◀
Residential Developers ◀
Construction Management ◀
Property Portfolio Management ◀




**www.pentengroup.com or call +44 (0)7956 284 116**

105

House of Fine Jewellery

# ரதி ஜுவலர்ஸ்

Rathy Jewellers




Rathy Jewellers

எப்பொழுதும் நியாயமான மலிவு விலை    புத்தம் புது டிசைன்கள்

28 Ealing Road, Wembley Middx HA0 4TL

**Tel: 020 8903 3063** Fax: 020 8903 9711

*Printed by JR Print London Tel: 020 8503 6643*